Vol.5, Issue 8 | Annual Subscription ₹480

@NewsRotary

/RotaryNewsIndia

ஜனவரி 2023

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org

Rotary



# விசாகா விஸ்டாவின் வடிவமைப்பாளர்கள்

ரஷீதா பகத்



RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் இன்ஸ்டிட்யூட் தலைவர் PDG கிஷோர் குமார்.

# உள்ளே


12
விசாகப்பட்டினத்தில் ஏராளமான சேவை திட்டங்கள்

16
குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றும் கவாஸ்கரின் மூன்றாவது இன்னிங்ஸ்

20
பெறும் தேசத்திலிருந்து கொடுக்கும் தேசமாக இந்தியா மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது

24
கிராமங்களை மேம்படுத்தும் புனே ரோட்டரி

30
புதிய உலகில் விரைந்து செயல்படுவோம்: மஷேல்கர்

32
நீர் கல்வியறிவு மற்றும் சமூகத்தால் இயக்கப்படும் நீர் மேலாண்மையை அறிமுகப்படுத்துங்கள்

38
எப்போதும் தயாராக இருங்கள்: ஜோன்ஸ்

48
எழுத்தறிவை ஊக்குவிக்க மாரத்தான்!

50
வாழ்க்கையை மாற்றும் சக்தி ரோட்டரியிடம் உள்ளது

62
ஹிந்தி திரையுலக பின்னணி பாடகர்களில் முதல் பெண் சூப்பர் ஸ்டார் ஷம்ஷத்

70
சேலத்தில் போதை மருந்துகளுக்கு எதிரான மாரத்தான் ஓட்டம்

72
புத்தாண்டுக்கான பசுமைத் தீர்மானங்கள்

76
ஆயுள் காக்கும் அருமருந்து தண்ணீர்




## *கலினா பார்க், சங்கங்களுக்கான முன்னோடி*




RC *பாம்பேயால் மற்ற ரோட்டரியன்களின் உதவியுடன்* (RC *மும்பை வர்சோவாவைச் சேர்ந்த ராஜேஷ் சௌத்ரி போன்றவர்கள்) அமைக்கப் பட்ட மும்பையில் உள்ள கலினா பல்லுயிர் பூங்காவில் மொட்டுகள், பூக்கள் மற்றும் அழகிய பட்டாம் பூச்சியுடன் எடுக்கப்பட்ட டிசம்பர் இதழின் அட்டைப் புகைப்படம் தனித்துவத்துடன் இருந்தது. இந்த பூங்காவைப் பற்றி படிப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி மற்றும் இந்த சிறந்த முயற்சியின் பின்னணியில் உள்ள அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்.* RI *தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், ஜாம்பியாவில் மலேரியாவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் துயரக் கதைகளையும், அதை மலேரியா இல்லாத மண்டலமாக மாற்ற ரோட்டரியின் தீவிர முயற்சிகளையும் விவரிக்கிறார். பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் உலகளாவிய பிரச்சனைகள் மற்றும் இந்த கடுமையான பேரழிவை சமாளிக்க உலக தலைவர்கள் எடுக்க வேண்டிய முயற்சிகளை ஆசிரியர் குறிப்பு நன்கு விளக்குகிறது.* RID *மகேஷ் கோட்பாகி, சேவையே சிறந்த பாதை என்றும், அதை புத்தாண்டின்பரிசாக மாற்ற முயல வேண்டும் என்றும் சரியாக கூறியுள்ளார்.* RID A S *வெங்கடேஷ், ரோட்டரி முத்திரையை நாம் எங்கு சென்றாலும் பிராண்ட் அம்பாசிடர்களாக அணியுமாறு ரோட்டேரியன்களை வலியுறுத்துகிறார். அறக்கட்டளை அறங்காவலர் தலைவர் இயன் ரைஸ்லியின் செய்தி,* TRF*க்கு தாராளமாக நன்கொடை அளிக்க தூண்டுகிறது.*

*மொராக்கோவில் நடந்த நேஷன் கோப்பையை இந்திய கோல்ப் வீரர்கள் வென்று சரித்திரம் படைத்தனர் என்பதை படித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் பாதையில், ஊனமுற்ற குழந்தைகளை படகு சவாரி மூலம் உபசரித்த* RC *ஆலப்பி, ரோட்டரி தலைவர்கள் இந்திய குடியரசுத் தலைவரைச் சந்தித்தார்கள், மும்பை பள்ளி குழந்தைகளுக்கு மதிய உணவு, சிம்லாவில் புற்று நோயாளிகளுக்கான ரோட்டரி விடுதி, பார்வையற்றோருக்கான மறுவாழ்வு பட்டறை போன்ற பிற கட்டுரைகள் படிக்கத் தகுந்தவை. சோகமான பாடல்களின் பேரரசர் முகேஷ் என்ற கட்டுரை மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. சங்கங்களின் மக்கள் நலத்திட்டங்கள் படங்களும் விளக்கங்களும் சிறப்பாக இருந்தன. ரோட்டரி நியூஸ் குழுவின் சிறப்பான பணிக்கு நன்றி.*

*பிலிப் முலப்போன்* MT
RC *திருவனந்தபுரம் சப்அர்பன்* — D 3211

RID 3141 *உதவியால் மும்பை பசுமை மண்டலத்தை பெற்றது என்ற முகப்பு கட்டுரை, ரோட்டரி கவனம் செலுத்தும் பகுதியான சுற்றுச்சூழலின் கீழ் தங்கள் நகரங்களில் இது போன்ற திட்டங்களை மேற்கொள்ள மற்ற சங்கங்கள் மற்றும் மாவட்டங்களை ஊக்குவிக்கும். "நகரங்களின் நுரையீரல்" என்ற உருவகம், ஆரம்பத்தில் நகர்ப்புற பூங்காக்கள் பாது காப்பிற்கான முழக்கமாக இருந்தது, மாசுபட்ட நகரங்களில் வசிக்கும் குடிமக்களுக்கு பூங்காக்கள் மற்றும் பிற பசுமையான இடங்கள் மிகவும் அவசியமாகி வருவதால் அது இப்போது ஒரு முக்கிய வார்த்தையாக மாறியுள்ளது.*

KMK *மூர்த்தி,* RC *செகந்திராபாத்* — D 3150

டிசம்பர் இதழில் உள்ள அனைத்து கட்டுரைகளும் அருமையாகவும் உத்வேகமாகவும் இருந்தன, ஆனால் அவற்றுள் உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வு கட்டுரை அருமை. Rtn அனில் ஸ்ரீவத்சா மற்றவர்களை ஊக்குவிக்கிறார், ஏனெனில் அவர் ஒரு சிறுநீரக தானம் செய்தவர் என்பதை தவிர, 48 நாடுகளில் இந்த காரணத்திற்கு ஆதரவைப் பெறுவதற்காக பயணித்துள்ளார். ஸ்ரீவத்சா, அவரது மனைவி தீபாலி மற்றும் அவர்களது குழந்தைகள் காவ்யா மற்றும் சூர்யா ஆகியோருக்கு வாழ்த்துகள்.

டாக்டர் ஜகதீஷ் வகாசியா
RC சூரத் ஈஸ்ட் — D 3060

டிசம்பர் இதழ் நிறைய தகவலுடன் மற்றும் பயனுள்ளதாக இருந்தது. பாடகர் முகேஷ் பற்றிய கட்டுரையைப் படித்து மகிழ்ச்சியடைந்தேன். பக்கம் 63ல் உள்ள பத்தி 2க்கு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். கட்டுரையில் குறிப்பிட்டுள்ள ஆறு படங்களில், கடைசியான ஜக்தே ரஹோ படத்திற்கு பின்னணி இசையமைத்தது சலில் சௌத்ரி, ஷங்கர் ஜெய்கிஷன் அல்ல என்பதை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறான்.

S K நாத்
RC சம்பல்பூர் — D 3261

**ஆசிரியர்:** வாசகர் S K நாத் சொல்வது சரிதான். இந்த பிழையை சரி செய்ததற்கு நன்றி.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் **rushbhagat@gmail.com** அல்லது **rotarynewsmagazine@gmail.com** என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். **WHATSAPP** செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் **www.rotarynewsonline.org** என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

**அட்டைபடம்:** விசாகா விஸ்டா
ரோட்டரி மாநாட்டில் ஒரு நடன நிகழ்ச்சி.

**படம்:** ரஷீதா பகத்

# Rotarians!

## Visiting Chennai for business?

## Looking for a compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | |
|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | 36,697 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | 11,412 |
| இன்டராக்ட் சங்கங்கள் | 19,019 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | 12,660 |
| ரோட்டரியினர் | 1,195,863 |
| ரோட்டராக்டர்கள் | 199,073 |
| இன்டராக்டர்கள் | 437,437 |

*As on December 8, 2022*

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on December 1, 2022

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 136 | 6,673 | 7.70 | 65 | 336 | 55 | 243 |
| 2982 | 80 | 3,700 | 7.05 | 50 | 1,266 | 107 | 76 |
| 3000 | 131 | 5,448 | 10.39 | 100 | 1,629 | 320 | 215 |
| 3011 | 123 | 4,665 | 27.29 | 81 | 2,583 | 140 | 37 |
| 3012 | 150 | 3,765 | 22.92 | 73 | 1,400 | 90 | 61 |
| 3020 | 85 | 5,100 | 7.37 | 36 | 908 | 168 | 350 |
| 3030 | 100 | 5,436 | 15.16 | 124 | 2,217 | 368 | 382 |
| 3040 | 112 | 2,662 | 14.09 | 59 | 851 | 85 | 190 |
| 3053 | 74 | 2,962 | 17.89 | 35 | 545 | 54 | 128 |
| 3054 | 172 | 7,166 | 20.65 | 115 | 7,557 | 204 | 574 |
| 3060 | 105 | 4,995 | 15.10 | 66 | 2,457 | 81 | 152 |
| 3070 | 128 | 3,415 | 16.63 | 46 | 632 | 64 | 59 |
| 3080 | 108 | 4,364 | 13.29 | 148 | 2,715 | 211 | 118 |
| 3090 | 104 | 2,561 | 6.72 | 46 | 713 | 118 | 164 |
| 3100 | 100 | 2,100 | 9.62 | 14 | 91 | 37 | 151 |
| 3110 | 150 | 3,995 | 12.47 | 14 | 98 | 33 | 106 |
| 3120 | 92 | 3,740 | 16.10 | 49 | 526 | 36 | 55 |
| 3131 | 143 | 5,811 | 24.45 | 128 | 2,750 | 258 | 144 |
| 3132 | 91 | 3,633 | 12.61 | 35 | 522 | 126 | 168 |
| 3141 | 109 | 6,214 | 26.83 | 146 | 9,322 | 207 | 135 |
| 3142 | 104 | 3,977 | 21.05 | 89 | 2,664 | 148 | 88 |
| 3150 | 111 | 4,451 | 13.19 | 146 | 2,029 | 155 | 123 |
| 3160 | 78 | 2,743 | 9.55 | 32 | 354 | 20 | 82 |
| 3170 | 146 | 6,667 | 15.75 | 99 | 1,869 | 265 | 177 |
| 3181 | 87 | 3,680 | 9.81 | 36 | 461 | 222 | 117 |
| 3182 | 88 | 3,778 | 10.11 | 44 | 165 | 132 | 106 |
| 3190 | 167 | 6,973 | 20.09 | 213 | 5,537 | 286 | 73 |
| 3201 | 166 | 6,509 | 9.83 | 126 | 2,157 | 111 | 90 |
| 3203 | 94 | 5,061 | 8.10 | 74 | 712 | 241 | 39 |
| 3204 | 75 | 2,602 | 8.92 | 23 | 201 | 33 | 13 |
| 3211 | 158 | 5,194 | 8.66 | 8 | 113 | 30 | 133 |
| 3212 | 128 | 4,866 | 11.47 | 84 | 3,533 | 300 | 153 |
| 3231 | 97 | 3,627 | 8.74 | 34 | 299 | 99 | 417 |
| 3232 | 174 | 7,706 | 19.28 | 133 | 14,950 | 242 | 101 |
| 3240 | 110 | 3,785 | 17.28 | 69 | 1,505 | 414 | 226 |
| 3250 | 105 | 4,003 | 21.23 | 68 | 1,197 | 83 | 188 |
| 3261 | 93 | 3,346 | 19.49 | 17 | 50 | 26 | 44 |
| 3262 | 129 | 4,303 | 15.25 | 74 | 810 | 658 | 277 |
| 3291 | 160 | 4,140 | 25.27 | 137 | 2,085 | 111 | 694 |
| **India Total** | **4,563** | **175,816** | | **2,936** | **79,809** | **6,338** | **6,649** |
| 3220 | 72 | 2,170 | 16.18 | 97 | 5,443 | 147 | 76 |
| 3271 | 143 | 3,117 | 17.52 | 159 | 2,488 | 245 | 28 |
| 3272 | 161 | 2,240 | 15.71 | 70 | 974 | 22 | 47 |
| 3281 | 310 | 7,979 | 18.72 | 280 | 2,724 | 156 | 207 |
| 3282 | 185 | 3,753 | 10.47 | 202 | 1,665 | 49 | 47 |
| 3292 | 155 | 5,937 | 18.26 | 182 | 5,339 | 144 | 133 |
| **S Asia Total** | **5,589** | **201,012** | | **3,926** | **98,442** | **7,101** | **7,187** |

*Source: RI South Asia Office*

# உறுப்பினர் இணைப்பை பலப்படுத்துவோம்



Monika Lozinska

*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் உலக போலியோ தினத்தன்று ரோட்டரியினருடன் ஜெனிவாவில் உள்ள WHO அலுவலகத்தில்.*

ரோட்டரி சமீபத்தில் நம் உறுப்பினர்களிடையில் ஒரு கணக்கெடுப்பு நடத்தியது. அதில் தெரியவந்த ஒரு விஷயம் வியப்பளிக்கக்கூடாதது, ஆனாலும், ரோட்டரி தலைமையில் உள்ள எங்களில் பலர் அதைக் கூர்ந்து கவனித்தோம்: உறுப்பினர் மன நிறைவில் மிக முதன்மையான காரணி: சங்க அனுபவம். உங்கள் சங்கம் உங்களை எவ்வளவு இதமாக உணரச்செய்கிறது, சங்கக் கூட்டங்கள் எவ்வளவு நன்மை தருகின்றன, சேவைத் திட்டங்களில் நீங்கள் எவ்வளவு ஈடுபடுவதாக உணர்கிறீர்கள்.

இந்த ஆண்டு நான் இதை ரோட்டரி முழுவதும் நேரடியாகப் பார்த்துள்ளேன். உறுப்பினர்கள் தங்கள் சங்கத்துடன் உணர்வு சார்ந்த ஓர் இணைப்பை உணரும்போது, அவர்கள் விலக எண்ணமாட்டார்கள். நம் 'Imagine Impact Tour' பயணத்தின் முதன்மை நோக்கம், நம் உறுப்பினர் களைத் தங்கள் கதைகளைச் சொல்ல ஊக்கப்படுத்துவதுதான்.

இது உறுப்பினர்களிடையே மிகப் பெரிய மாற்றத்தை உண்டாக்கும். நாம் உறவுத் தொழிலில் உள்ளோம், நாம் ஒருவரை ஒருவர் கவனித்துக் கொண்டால், உண்மையான அக்கறையைக் காண்பித்தால், வாழ்நாள் நண்பர்களாவோம். அந்த நட்பு வட்டத்தை அகலமாக்க நாம் எதையும் செய்வோம்.

ரோட்டரி தலைமையில் உள்ள என்னைப் போன்றவர்கள் உங்கள் சங்க அனுபவத்தை இன்னும் மதிப்புமிக்கதாக ஆக்குவது பற்றிப் பல அறிவுரைகளைச் சொல்லலாம். ஆனால், அவற்றையெல்லாம் விட மிக முதன்மையானது, ஒவ்வொரு ரோட்டரி சங்கத்திலும் உள்ள ஒவ்வொருவரும் பேசவேண்டும், பிறர் பேசுவதைக் கேட்க வேண்டும். நம் சங்கத்தில் உறுப்பினராக இருப்பதன் மூலம் நாம் எதை எதிர்பார்க் கிறோம் என்பதை நம் சக ரோட்டரி உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், அதை எப்படிச் சாத்தியமாக்குவது என்பது பற்றிய ஒரு திறந்த விவாதத்தை நடத்தவும் நாம் எப்போதும் அஞ்சக்கூடாது.

ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள் இதுபோன்ற உரை யாடல்களை வரவேற்கவேண்டும், புதிய அணுகுமுறைகளை முயன்று பார்க்கத் தயாராக இருக்க வேண்டும். நல்ல தலைமை என்பது, பிறருக்கு ஆதரவு அளிப்பது. பிறர் வெற்றியை உணர அனுமதிப்பது.

சங்கத் தலைவர்களுக்கு நான் இன்னொரு கோரிக்கையையும் முன்வைக்கிறேன். நம் பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கையை மிகுதியாக்க நாம் உலக அளவில் இன்னும் நிறையச் செய்ய வேண்டும். இந்த ஆண்டு அது சற்று உயர்ந்துள்ளது, ஆனால், நாம் இன்னும் நன்கு செயல்படலாம். மிகச் சிறந்த புதிய உறுப்பினர்களின் மூலம் நம் சங்கங்களை வலுவாக்க, அதன்பிறகு, வசதி மற்றும் பரா மரிப்பை வழங்குவதன்மூலம் அவர்களை வாழ்நாள் உறுப்பினர் களாக ஆக்க நம் முயற்சிகளை உறுதியாக்குவோம்.

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்



# வேடிக்கயான தருணங்களும் வெளிப்படையான பேச்சுகளும்!

தொற்றுக்காலத்துக்குப் பிறகு ரோட்டரியின் மெகா கூட்டங்கள் முழுவீச்சில் நடந்து வருகிறது. ஒருவரை ஒருவர் சந்திப்பதும் பேசுவதும் அதிகரித்துள்ளது. சமீபத்தில் விசாகப்பட்டினத்தில் நடந்த விசாகா விஸ்டா மண்டல மாநாட்டுக் கூட்டம் இதை நிரூபித்துள்ளது. சுமார் 1,000 பேர் இதில் பங்கேற்றனர். ரோட்டரி இயக்குநர் மற்றும் மாநாட்டு அமைப்பாளர் மகேஷ் கோட்பாகியின் துணிச்சலான செயல்பாடுகள் மற்றும் தலைவர் PDG கிஷோர் குமாரின் ஒத்துழைப்பில் மாநாடு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிகழ்ச்சியாகவும் அது இருந்தது. கோட்பாகி கூறியது போல் ரோட்டரி இப்போது 7வது பகுதியான சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தி வருவதால், குப்பைகள் போடுவது, பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பிற குப்பைகளை உருவாக்குவது என்பதற்கு வாய்ப்பே இல்லை. மாநாட்டு நிகழ்ச்சி நடைபெறும் இடத்தை சுத்தமாக வைத்திருப்பதற்கு ஏற்பாட்டாளர்கள் முன்னுரிமை தர வேண்டும் என்பதில் அவர் குறியாக இருந்தார். பிளாஸ்டிக் பேனர்கள், போஸ்டர்களுக்கு அங்கு இடமில்லை. பேனர்கள் கட்டுவதற்கும், விளம்பரங்களை வைப்பதற்கும் துணி மற்றும் மீண்டும் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்களே பயன்படுத்தப்பட்டன. பொதுவாக இதுபோன்ற மாநாடுகள் நடைபெறும் போது அதுபற்றி நிகழ்ச்சி நிரல்கள் அடங்கிய கையேடுகள் காகிதத்தில் அச்சிடப்பட்டு வழங்கப்படும். மாநாட்டுக்கு வருவோர் அதை அங்கேயே போட்டுவிட்டு செல்வார்கள். குப்பைகள் மலைபோல் அங்கேயே தேங்கிக் கிடக்கும். இதற்கும் முடிவு கட்டும் வகையில் நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் டிஜிட்டல் முறையில் தெரிவிக்கப்பட்டன. மேலும் மேடையின் இரண்டு பக்கங்களிலும் ஆங்காங்கே டிஜிட்டல் LED போர்டுகள் வைக்கப்பட்டு நிகழ்வுகள் வண்ணமயமாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதை பார்வையாளர் கண்டு ரசித்தனர்.

விசாகப்பட்டினத்தில் எந்த ஹோட்டலிலும் 1,000 பேர் தங்க முடியாது என்பதால் பல ஹோட்டல்கள் தேர்வு செய்யப்பட்டிருந்தன. மாநாட்டு பிரதிநிதிகளை அழைத்து வருவதிலும் விரிவான போக்குவரத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மாநாட்டில் பங்கேற்ற பெண் பிரதிநிதிகளுக்கு கிஷோர் குமாரின் மனைவி ஷோபா, பல வண்ணங்களில் அழகிய வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்ட மர வளையல்களை இலவசமாக வாங்கிக் கொடுத்தது மறக்க முடியாதது. இதேபோல மாநாட்டில் பங்கேற்ற அனைவருக்கும் இலவசமாக கோலி-சோடா வழங்கப்பட்டது. இளம் பெண்கள் அரங்கம் முழுவதும் விளக்குகள் ஏந்தி நடந்து சென்றபோதும், ஆபரேஷன் இமாஜின் திட்டத்தை தொடங்கிவைத்து ஆயிரக்கணக்கான சக்கர நாற்காலிகள், தையல் இயந்திரங்கள் வழங்கிய போதும் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸின் கண்கள் மகிழ்ச்சியில் ஒளிர்ந்தன.

ஆனால், என்னைப் போன்ற ஒரு பத்திரிகையாளர் நல்ல செய்தி எங்கிருக்கிறது என்றுதான் தேடுவர். இந்தியாவின் தண்ணீர் மனிதர் என்று சொல்லப்படும் ராஜேந்திர சிங், சில உண்மைகளைக் கூறி பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தார். இந்தியாவில் உள்ள நீர்நிலைகள் வேகமாக வற்றி வருவதாகக்கூறி எச்சரிக்கை மணியை அடித்தார். எந்தவித ஒளிவு மறைவும் இல்லாமல் வெளிப்படையாக பேசுவதாக குறிப்பிட்ட அவர், தன்னைப் போன்ற நீர் ஆர்வலர்களுக்கும் அரசுக்கும் இடையே ரோட்டரி பாலமாக இருந்து செயல்பட முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சுற்றுச்சூழல் பாதிப்புக்கும், இந்தியாவில் விவசாயத்துக்கு அதிகம் தண்ணீர் செலவிடப்படுவதற்கும் பெரும்பாலும் அரசே பொறுப்பு என்றும் குறிப்பிட்டார். ஒருங்கிணைந்த வேளாண்மைதான் இதற்கு எளிமையான தீர்வாகும். ஒப்பந்த அடிப்படைக்கு பதிலாக நீர் மேலாண்மையில் சமூகத்தினரை பங்குபெறச் செய்ய வேண்டும். விவசாயத்திலும், நீர் மேலாண்மையிலும் உங்களுக்கு லாபம் கிடைக்கிறது என்றால் வானத்திலிருந்து விழும் ஒவ்வொரு துளியையும் நீங்கள் சேமிப்பீர்கள். தண்ணீரை எப்படி சிக்கனமாக பயன்படுத்துவது என்பதையும் தெரிந்துகொள்வீர்கள் என்றார்.

அவரின் பேச்சு மனதைத் தொட்டது.



ரஷீதா பகத்

**ஆளுநர் குழு**

RID 2981 செல்வநாதன் V
RID 2982 சரவணன் P
RID 3000 ஜெரால்ட் I
RID 3011 அசோக் கண்டூர்
RID 3012 Dr லலித் கன்னா
RID 3020 பாஸ்கர் ராம் V
RID 3030 Dr ஆனந்த் ஜுன்ஜுனுவாலா
RID 3040 ஜினேன்தர ஜெயின்
RID 3053 ராஜேஷ்குமார் சூரா
RID 3054 பல்வந்த் S சிரானா
RID 3060 ஸ்ரீகாந்த் இந்தானி
RID 3070 Dr துஷ்யந்த் சௌத்ரி
RID 3080 கல்டா V P
RID 3090 குல்பர் சிங் சௌத்ரி ரெடோல்
RID 3100 தினேஷ் குமார் சர்மா
RID 3110 பவன் அகர்வால்
RID 3120 அனில் அகர்வால்
RID 3131 Dr அனில் லால்சந்த் பார்மர்
RID 3132 ருக்மேஷ் ஜகோட்டியா
RID 3141 சந்தீப் அகர்வல்லா
RID 3142 கைலாஷ் ஜித்தானி
RID 3150 டல்லா ராஜசேகர் ரெட்டி
RID 3160 வொமினா நாக சதீஷ்பாபு
RID 3170 வெங்கடேஷ் H டேஷ்பாண்டே
RID 3181 N பிரகாஷ் காரன்த்
RID 3182 Dr ஜெயகௌரி ஹடிகல்
RID 3190 ஜிதேந்திரா அனேஜா
RID 3201 ராஜ்மோகன் நாயர் S
RID 3203 இளங்குமரன் B
RID 3204 ப்ரமோத் நாயனார் V V
RID 3211 பாபுமோன் K
RID 3212 முத்து V R
RID 3231 பழனி J K N
RID 3232 Dr நந்தகுமார் N
RID 3240 குஷாநாவா பாபி
RID 3250 சஞ்ஜீவ்குமார் தாகூர்
RID 3261 ஷஷங்க் ரஸ்டோகி
RID 3262 பிரவுதத்தா சுபதி
RID 3291 அஜய்குமார் லா

துகார் டவர்ஸ், 3-வது தளம், மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை-8. முகவரியில் இயங்கும் ரோட்டரி நியூஸ் டிரஸ்டுக்காக, P T பிரபாகரால், "ராசி கிராபிக்ஸ் P Ltd., 40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை-14" என்ற முகவரியில் அச்சிடப் பட்டு வெளியிடப்படுகிறது.

**ஆசிரியர்:** ரஷீதா பகத்.

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக் களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரை களை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

# RI இயக்குனர்



## சிறப்பான ஒரு ரோட்டரி சந்திப்பு

விசாகப்பட்டினத்தில் மிகப் பெரிய வெற்றியடைந்த ரோட்டரி சந்திப்பாகிய விசாகா விஸ்டா மற்றும் Zones 4, 5, 6, 7, 1B, 9 மற்றும் 10ஐ சேர்ந்த 25 நாடுகளுடன் இணைந்து நடத்தப்பட்ட, அபு தாபியில் ஃபார்முலா ஒன் பந்தயப் பாதையில் நடைபெற்ற ஃபுல் த்ராட்டில் என்ற GETS மற்றும் GNTS நிகழ்வுகளை முன்னிட்டு அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

சுற்றுச்சூழலுக்கு இதமான மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில் மிகவும் மேம்பட்ட இந்தச் சந்திப்பில் 1,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்றார்கள், இணையத்தில் 15,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதைப் பார்த்தன. 4,000 பலன் பெறு வோருக்கான 'ஆபரேஷன் இமாஜின்' சேவைத் திட்டம், ரோட்டராக்ட் கருத்தரங்கில் 8,000 இளைஞர்கள், 400 ரோட்டராக்டர் களைக் கொண்ட 'ரன் டு மீட்', 'ரோட்டரியில் பெண்கள்' கருத்தரங்கில் 400 பெண்கள், Major Donor அங்கீகாரக் கருத்தரங்கில் 400 பங்கேற்பாளர்கள், ஆண்டு இடை ஆய்வில் 41 DGக்களும் கலந்துகொள்ளுதல், மற்றும் 50 மூத்த தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு விருந்தினர்கள்... பெருமகிழ்ச்சி, வெற்றிக்குப் பொறுப்பாக அமைந்தவை இவை.

சுனில் கவாஸ்கர், ரகுநாத் மஷெல்கர், S B மஜும்தர் மற்றும் Dr கிருஷ்ணா எல்லா போன்ற மிகச் சிறந்த பேச்சாளர்களும் துறை சார்ந்த வல்லுனர்களும் தங்கள் துறைகளில் மிகச் சிறந்த பணியாற்றியதற்குப் பெருமைப்படுத்தப்பட்டார்கள். திரைப்பட இயக்குநர் சுபாஷ் கை பழைய பாலிவுட் வெற்றிப் படங்களை நினைவுபடுத்தினார், மலரும் நினைவுகளை உருவாக்கினார், சரியான இயக்கம், கதை சொல்லலின் முக்கியத்துவத்தைப்பற்றி நமக்குச் சொன்னார்.

இந்திய முன்னாள் தலைமை நீதிபதி N V ரமணா, காயத்ரி பரிவாரைச் சேர்ந்த சின்மயி பான்ட்யா, இந்தியாவின் நீர் மனிதர் ராஜேந்திர சிங், போன்ற நல்ல நோக்கமுள்ள பேச்சாளர்கள் நம்மிடையில் பேசினார்கள்.

உங்கள் முயற்சிகளால் தான் இதுபோன்ற ஒரு நேர்த்தியான, கம்பீரமான நிகழ்ச்சியை நம்மால் நடத்த இயலுகிறது. சந்திப்பு நடத்தப்பட்ட விதம் மற்றும் அது வழங்கிய பொருளுள்ள உள்ளடக்கத்தைப்பற்றிப் பாராட்டியும் வியந்தும் பலர் தொலைபேசியில் அழைத்துள்ளார்கள், செய்தி அனுப்பியுள்ளார்கள்.

மொத்தத்தில், விசாகா விஸ்டா மதிப்பு நிறைந்த ரோட்டரி சந்திப்பாக அமைந்தது.



**மகேஷ் கோட்பாகி**
RI இயக்குனர், 2021–23

# ஒருவரின் சக்தி!



நாம் மற்றொரு வருடத்திற்குள் நுழைய, நம்மில் பெரும்பாலோர் புத்தாண்டுக்கான சொந்த தீர்மானங்களைப் பற்றி யோசித்துக்கொண்டிருப்போம். இந்தப் புத்தாண்டில் ஒருவரின் சக்தியை முழுமையாகப் பயன்படுத்த உறுதி ஏற்போம். ஒருவரால் மிகக் குறைவாகவே செய்ய முடியும் என்றும், ஒருவருக்கு தாக்கத்தை ஏற்படுத்துவது எதையும் மாற்றாது என்றும் நான் நினைத்துக்கொண்டிருந்தேன். அது பகவத் கீதையின் தோற்றம் எனக்கு நினைவுக்கு வரும் வரை தான் இருந்தது. அது ஒரு நபரால் ஒரு நபருக்கு மட்டுமே வழங்கப்பட்ட போதனைகளின் தொகுப்பாகும், இப்போது அதன் தாக்கம் என்ன என்று நீங்களே அறிவீர்கள்!

உலகில் நல்லது செய்வது என்பது பெரிய அளவிலான முயற்சியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒருவரின் சக்தியைப் பற்றி நிறைய சொல்லலாம். நம் ஒவ்வொருவருக்கும் நமது வார்த்தைகள் அல்லது செயல்கள் அல்லது இரண்டின் மூலம் குறைந்தது ஒருவரையாவது சாதகமாக பாதிக்கும் திறன் உள்ளது. நாம் ஒவ்வொருவரும் ரோட்டரியின் பிராண்ட் அம்பாசிடராக நம் நிறுவனம் செய்யும் நன்மைகளைப் பற்றி பரப்ப முடியும். ஒரு பால் ஹாரிஸ் தனது மூன்று நண்பர்களுடன் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள ரோட்டரி பிறந்தது. தாராளமாக இருக்க, பெரிய பணப்பையை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை நிரூபிக்கும் திறன் நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. நமக்குத் தேவை பெரிய இதயம் மட்டுமே. ரோட்டரியில் உள்ள நன்கொடையாளர்களின் பட்டியலைப் பார்த்தால், பல சாத்தியமில்லாத பெயர்களை பார்க்கலாம். அவை தன்னால் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும் என நம்பியவர்களின் பெயர்கள்.

எல்லா பெரிய விஷயங்களும் ஒரு தனி நபரின் கனவாகவே தொடங்கியவை. நம் பிரசித்திபெற்ற போலியோ ஒழிப்பு பிரச்சாரமும் அப்படித்தான். உலகை மாற்றக்கூடிய ஒரு விஷயத்தை நாம் கனவு காணலாம். அவ்வாறு செய்வதற்கான திறன் நம் ஒவ்வொருவருக்குள்ளும் உள்ளது. நாம் ஒவ்வொருவரும் நம்மைச் சுற்றிப் பார்த்து, தற்போது இல்லாத, நியாயமான மற்றும் சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கும் விஷயங்களை செயல்படுத்த வேண்டும் என்று கனவு காணலாம்.

ஒரு துளி நிச்சயமாக கடலை உருவாக்காது. ஆனால் அந்த துளி இல்லாவிட்டால் கடல் நிச்சயமாக ஒரு துளி ஏழையாக இருக்கும். நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் ஒருவரின் சக்தியை இந்தப் புத்தாண்டில் கட்டவிழ்த்து விடுவதற்கு தீர்மானம் எடுக்குமாறு உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


அறங்காவலர் குழுவினர்

| | |
|---|---|
| A S வெங்கடேஷ் RI இயக்குனர் மற்றும் RNT தலைவர் | RID 3232 |
| Dr மகேஷ் கோட்பாகி RI இயக்குனர் | RID 3131 |
| Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| பாண்டுரங்க செட்டி | RID 3190 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| PT பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |
| **RI இயக்குனர் தேர்வு** | |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| TN சுப்ரமணியன் | RID 3141 |

செயற்குழு
உறுப்பினர்கள் (2022–23)

| | |
|---|---|
| Dr துஷ்யந்த் சௌத்ரி தலைவர், ஆளுநர் குழு | RID 3070 |
| வெங்கடேஷ் H தேஷ்பாண்டே செயலாளர், ஆளுநர் குழு | RID 3170 |
| Dr N நந்தகுமார் பொருளாளர், ஆளுநர் குழு | RID 3232 |
| தினேஷ்குமார் சர்மா ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3100 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்



ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*


இதழ்

# புதிய தொடக்கங்கள், சேவை செய்யப் புதிய வாய்ப்புகள்



புத்தாண்டு தொடங்குகிறது. புதிய தொடக்கங்கள், அனுபவங்களை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிற இந்த நேரத்தில், புதுமையாகச் சிந்திப்போம், ரோட்டரியின் வழியாகச் சேவை செய்யப் புதிய வாய்ப்புகளைக் கண்டறிவோம்.

இந்த ஆண்டு ஒரு சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை நடத்த முயலுங்கள். இந்த ரோட்டரி கவனப்பகுதியில் நாம் சமூகங்கள் வளங்குன்றாத ஒரு வழியில் தங்களுக்குத் தாங்களே உதவிக்கொள்ள உதவுகிறோம், தொழில் முனைவோர் எண்ணத்தை முன்னிறுத்துவதன் மூலம் நம்முடைய தொழில் வல்லுனர் அனுபவத்தைப் பயன்படுத்துகிறோம். இந்தத் திட்டங்கள் கால்நடை வளர்ப்புத் தொழிலைத் தொடங்குவதற்கான நுண்கடன்களாக இருக்கலாம், அல்லது, சமூகங்களுடன் சேர்ந்து "ஒரு கிராமத்தைத் தத்தெடுத்தல்" அணுகுமுறையாக இருக்கலாம். 2000ல், திமோர்-லெஸ்டெ விடுதலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த நேரம், அந்த நாடு அரசியல் வன்முறை, சேதத்தால் தடுமாறியது. அங்கிருந்த சமூகங்களுக்குப் பாதுகாப்பும் மேம்பட்ட வாழ்க்கைச் சூழல்களுடன் ஒரு புதிய பொருளாதாரமும் தேவைப்பட்டது.

அப்போது, ஆஸ்திரேலிய ரோட்டரி சங்கங்கள் கிழக்கு திமோர் கூரையிடல் திட்டத்தைக் கொண்டுவந்தன. இதன் மூலம், கூரைகள் உருவாக்கப்பட்டன. பின்னர், தண்ணீர்த் தொட்டிகள், உணவு கிடங்குகள் உருவாக்கப்பட்டன. இந்தத் திட்டம் வளர வளர, பிற நிறுவனங்கள் இதில் இணைந்தன. ரோட்டரி அறக்கட்டளையும் இதில் இணைந்து ஒரு நல்கையை வழங்கியது.

விரைவில், கிழக்கு திமோர் கூரையிடல் நிதியளவில் சாத்தியமாகக்கூடிய நிறுவனமாக ஆனது, வீடுகள், பள்ளிகள், ஆதரவற்றோர் இல்லங்கள், வணிகக் கட்டடங்களுக்குக் கூரைகளை அமைக்கப் போதுமான பணத்தைத் திரட்டியது. ஏழை விவசாயிகள் தங்கள் பயிர்களைச் சேமித்து வைக்க உணவு கிடங்குகளை பெற்றார்கள். திமோரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் தொழில்முறைப் பயிற்சி பெற்றார்கள். ஆயிரக்கணக்கான புதிய தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டதால், சிறுமிகள் தண்ணீர் பிடிக்கச் செல்லாமல் பள்ளிக்குச் செல்ல இயன்றது.

கூரையிடல் திட்டமாகத் தொடங்கியது இன்றைக்கு உள்ளூர் மக்கள் பணியாற்றும் வணிக நிறுவனமாக உள்ளது, இதற்கான வழியை உங்கள் அறக்கட்டளை அமைத்தது. 2023ல் உங்களுக்கு முன்னால் இருக்கும் அனுபவங்கள் என்ன? ஒரு மாவட்ட அல்லது பன்னாட்டு நல்கையா? இல்லாவிட்டால், நீங்கள் 2023 RI மாநாட்டுக்கு மெல்பர்ன் வரலாம், அது என் வீட்டுக்கு அருகில்தான் உள்ளது, அங்கு நீங்கள் புதிய நண்பர்களைப் பெறலாம், பழைய நண்பர்களுடன் மீண்டும் இணையலாம், திட்டங்களுக்குக் கூட்டாளர் களைக் கண்டறியலாம். கற்றுக்கொள்கிற, வளர்கிற மற்றும் சேவை செய்கிற வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக்கொள்வேன் என்று நாம் புத்தாண்டு உறுதிமொழி எடுத்துக்கொள்வோம். அதைச் செய்யும் போது, மகிழ்ச்சியாகவும் செய்வோம். ஏனெனில், இது ரோட்டரி!

**இயன் ரிஸ்லி**
TRF அறங்காவலர் தலைவர்



# TRF மூலம் மகிழ்ச்சியை பரப்புதல்



TRFன் திட்டங்களின் மூலம் நாம் மற்றவர்களின் வாழ்க்கையில் ஒளியையும் மகிழ்ச்சியையும் கொண்டு வர முடியும், அவ்வாறு செய்வதன் மூலம் நமது சொந்த வாழ்க்கை ஒளிரும் மற்றும் மகிழ்ச்சியாக மாறும்.

நீரிழிவு சிகிச்சைக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முழுமையான ஐந்து அடுக்கு மருத்துவமனை; இரத்த வங்கிகள், கண் வங்கிகள் மற்றும் தோல் வங்கிகளை நிறுவுதல்; நாடு முழுவதும் WASH திட்டங்களை நிறுவதல் அல்லது கதிரியக்க சிகிச்சை பிரிவை அமைத்தல், இது எதுவாக இருந்தாலும் TRF மூலம் நாம் செய்யும் பணி பல வாழ்க்கைகளை தொட்டு சமூகங்களை மாற்றுகிறது. ஆனால் நிச்சயமாக TRF அந்த நல்ல வேலைகளை செய்வதற்கு ரோட்டேரியன்களை சார்ந்துள்ளது.

நவம்பர் மாதம் 4, 5, 6 மற்றும் 7 மண்டலங்களின் டிஸ்டிரிக்ட் மேஜர் கிப்ட்ஸ் மற்றும் CSR தலைவர் களுக்கான பயிற்சியை நாம் பெற்றோம். இது நன்றாக ஏற்பாடு செய்யப்பட்டு, மிகவும் பயனுள்ளதாக கட்டமைக்கப்பட்ட திட்டமாகும். மேலும் வரும் மாதங்களில் மேஜர் கிப்ட்ஸ் மற்றும் CSR-இந்தியா மானியங்களில் நல்ல முடிவுகளைப் பார்ப்போம் என நான் உறுதிபட நம்புகிறேன்.

ஸ்டார் வார்ஸின் தொடர்ச்சியான தி எம்பயர் ஸ்டிரைக்ஸ் பேக்கில், ஜெடை ஆசிரியர் யோடா ஹீரோ லூக் ஸ்கைவாக்கருக்கு பிரபஞ்சத்தின் மிகப்பெரிய சக்தியாக இருக்கும் "ஃபோர்ஸ்"ஐ எவ்வாறு எதிர்த்துப் போராடுவது என்று கற்பிக்க முயற்சிக்கிறார். எதிர்க்க முயற்சிப்பேன் என்று லூக் பதிலளிக்க, அதற்கு "முயற்சி என்று ஏதும் இல்லை, ஒன்று செய் அல்லது செய்யாதே" என யோடா கூறுகிறார். ரோட்டரி அறக்கட்டளைக்கும் இதே நிலைதான். அது வளர்ந்து வலுவாகவும், உலகம் முழுவதும் அறியப்பட்டதாகவும் இருக்க வேண்டும். அதை ரோட்டேரியன்களாகிய நம்மால் மட்டுமே உறுதிப்படுத்த முடியும்.

ரோட்டரி அறக்கட்டளை ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சமூகங்களையும் நாடுகளையும் மாற்றி வருகிறது. அதற்கு காரணம் ரோட்டரியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வமே. புத்தாண்டு பிறக்கும்போது, சில தீர்மானங்களைச் செய்ய நாம் தயாராகி வருகிறோம், எனவே ஒவ்வொரு ஆண்டும் TRFக்கு வழங்குவோம் என்று உறுதிகொள்வோம்.

**பரத் பாண்ட்யா**
அறங்காவலர், TRF 2022–26




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

REFER A NEW MEMBER
my.rotary.org/member-center

Rotary

FIND A CLUB
ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


## District Wise TRF Contributions as on November 2022 (Interim)

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| | | | **India** | | |
| 2981 | 16,581 | 512 | 0 | 625 | 17,717 |
| 2982 | 8,988 | 1,695 | 3,001 | 33,116 | 46,799 |
| 3000 | 17,499 | 2,680 | 0 | 0 | 20,179 |
| 3011 | 20,229 | 9,193 | 127 | 155,057 | 184,607 |
| 3012 | 10,153 | 752 | 65,235 | 108,709 | 184,848 |
| 3020 | 89,467 | 3,773 | 30,000 | 0 | 123,240 |
| 3030 | 22,474 | 286 | 0 | 1,275 | 24,035 |
| 3040 | 14,442 | 1,790 | 0 | 16,105 | 32,337 |
| 3053 | 19,956 | 136 | 0 | 0 | 20,092 |
| 3054 | 4,221 | 25 | 0 | 0 | 4,246 |
| 3060 | 25,348 | 400 | 0 | 62,635 | 88,383 |
| 3070 | 41,537 | 2,253 | 33,929 | 8,967 | 86,686 |
| 3080 | 17,465 | 2,134 | 0 | 38,163 | 57,762 |
| 3090 | 4,054 | 0 | 4,447 | 0 | 8,501 |
| 3100 | 42,574 | 400 | 25,012 | 0 | 67,986 |
| 3110 | 11,720 | 454 | 25,317 | 531,923 | 569,414 |
| 3120 | 7,549 | 289 | 0 | 0 | 7,839 |
| 3131 | 209,662 | 6,724 | 35,303 | 133,183 | 384,872 |
| 3132 | 11,410 | 2,191 | 50,000 | 1,000 | 64,601 |
| 3141 | 356,385 | 28,281 | 87,003 | 734,886 | 1,206,555 |
| 3142 | 132,478 | 3,138 | 20,512 | 25 | 156,154 |
| 3150 | 36,228 | 1,993 | 17,000 | 313 | 55,534 |
| 3160 | 2,432 | 2,338 | 0 | 2,100 | 6,870 |
| 3170 | 47,611 | 22,284 | 7,006 | 380 | 77,281 |
| 3181 | 48,491 | 56 | 25 | 912 | 49,485 |
| 3182 | 26,079 | 388 | 100 | 0 | 26,568 |
| 3190 | 16,602 | 4,259 | 250 | 985 | 22,096 |
| 3201 | 65,398 | 18,551 | 12,195 | 258,901 | 355,044 |
| 3203 | 2,537 | 10,758 | 1,000 | 26,479 | 40,773 |
| 3204 | 3,825 | 350 | 0 | 152 | 4,327 |
| 3211 | 60,379 | 0 | 10,000 | 1,049 | 71,428 |
| 3212 | 77,913 | 19,156 | 0 | 31,646 | 128,714 |
| 3231 | 45,938 | 20,713 | 32,025 | 569 | 99,246 |
| 3232 | 46,000 | 32,196 | 18,138 | 56,014 | 152,348 |
| 3240 | 23,738 | 13,854 | 1,000 | 3,622 | 42,214 |
| 3250 | 9,966 | 200 | 0 | 10,500 | 20,666 |
| 3261 | 11,203 | 673 | 0 | 5,277 | 17,153 |
| 3262 | 6,906 | 453 | 700 | 27,771 | 35,830 |
| 3291 | 24,276 | 1,089 | 15,033 | 8,190 | 48,589 |
| **India Total** | **1,639,713** | **216,420** | **494,359** | **2,260,528** | **4,611,020** |
| 3220 **Sri Lanka** | 21,353 | 3,333 | 2,000 | 226 | 26,913 |
| 3271 **Pakistan** | 25 | 11,125 | 0 | 250 | 11,400 |
| 3272 **Pakistan** | 405 | 61 | 0 | 5,000 | 5,466 |
| 3281 **Bangladesh** | 45,685 | 2,396 | 20,125 | 62,333 | 130,539 |
| 3282 **Bangladesh** | 39,029 | 6,701 | 2,000 | 4,319 | 52,049 |
| **South Asia Total** | **1,746,210** | **240,036** | **518,484** | **2,332,657** | **4,837,387** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

# விசாகப்பட்டினத்தில் ஏராளமான சேவை திட்டங்கள்

**ஜெய்ஸ்ரீ**

ஆயிரக்கணக்கான மிதிவண்டிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சக்கர நாற்காலிகளால் நிரம்பி வழியும் RI மண்டலக் கழகத்தின் பரந்து விரிந்த ஆபரேஷன் இமேஜின் கூடத்திற்கு நடந்து சென்ற RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் வாவ்! என்று வியந்தார். விசாகப்பட்டினத்தில் 1,000 மாணவிகளுக்கு சைக்கிள்கள், 1,000 ஆதரவற்ற பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் 1,000 மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்ட மெகா சேவை திட்டங்களை ஜோன்ஸ் தொடங்கி வைத்தார்.

படித்த பெண் அதிகாரம் பெற்ற பெண். இந்தப் புதிய மிதிவண்டிகள் உங்களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லும், அங்கு நீங்கள் உங்கள் எதிர்காலத்தில் கவனம் செலுத்த முடியும், என்று கூறி, பள்ளிச் சீருடையில் இருந்த இளம் பெண்களுக்கு கை அசைத்தார். பெண்களிடம், தையல் தொழிலில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் நீங்கள் அனைவரும் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்க முடியும். ரோட்டரி இதையெல்லாம் சாத்தியமாக்கியிருப்பதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது என்று கூறினார்.

RIPN ஸ்டெஃபானி அர்ச்சிக், RI இயக்குநர்கள் மகேஷ் கோட்பாகி, ட்ரூ கெஸ்லர் மற்றும் விக்கி புலிஸ், TRF அறங்காவலர் ஆர்கே ஒஃபிராங்க், PRIP சேகர் மேத்தா, PRID கமல் சங்வி, RIDE அனிருதா ராய்சௌத்ரி மற்றும் இன்ஸ்டிட்யூட் தலைவர் கிஷோர் குமார் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.2.5 கோடி என்று ஆபரேஷன் இமேஜின் தலைவர் PDG லக்கராஜு

*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் ஆபரேஷன் இமாஜின் திட்டத் திறப்பு விழாவில்.*





*பள்ளி மாணவிகளுடன் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் அமிதா.*

சத்யநாராயன் தெரிவித்தார். திட்ட ஆலோசகராக PDG ரவி வட்லமணி இருந்தார்.

சைக்கிள்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் RID 3020ல் ஸ்பான்சர் செய்யப்பட்டன. “பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில், ஒரு ரோட்டரி சங்கம் மூலம் வழங்கப்படும் ஒவ்வொரு சைக்கிள்/தையல் இயந்திரத்திற்கும் இணையாக மாவட்டம் மூன்று வழங்கும் என்று அறிவித்தோம். மாவட்டத்தில் உள்ள 80 ரோட்டரி சங்கங்களில், 49 சங்கங்கள் பங்கேற்றன,’’ என்றார் சத்தியநாராயன்.

சுமார் 1,200 சைக்கிள்கள் மற்றும் 3,190 மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள், ஒவ்வொன்றும் சுமார் ரூ.6,000 விலையில் வாங்கப்பட்டன. மீதமுள்ள சைக்கிள்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் விஜயவாடாவில் விநியோகிக்கப்படும்.






PRIP *சேகர் மேத்தா பயனாளிகளிடம் பேசுகிறார். உடன் திட்டத் தலைவர்* PDG *லக்கராஜு சத்தியநாராயணன்,* RI *தலைவர் ஜோன்ஸ்,* PDG *ரவி வட்லாமணி, ராஷி,* PDG *கிஷோர் குமார்,* RI *இயக்குனர் விக்கி புலிஸ் மற்றும் சோனல் சங்வி ஆகியோரும் உள்ளனர்.*

RI மாவட்டம் 3020 ஆறு வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கியது மற்றும் தகுதியான பயனாளிகளை தேர்வு செய்வது மிகப்பெரிய பணியாகும் என்று அவர் கூறினார், 8–10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு சைக்கிள் மற்றும் அரசாங்கத்தின் திட்டங்களில் சலுகைகளைப் பெறாத பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் பரிசளிக்க முடிவு செய்தோம். இரண்டு பரிசுகளுக்கும் பயனாளிகள் வறுமைக்கோடிற்கு கீழுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். ரோட்டரியர்கள் அடங்கிய குழு விண்ணப்ப படிவங்களை மதிப்பிட்டு தேர்வு செய்தது.

சக்கர நாற்காலிகளை ரோட்டரி இந்தியா மனிதநேய அறக்கட்டளை நிதியுதவி செய்தது

*மிதிவண்டிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் விசாகா விஸ்டா மைதானத்தில்.*



ரஷீதா பகத்



பள்ளி மாணவிகள் மிதிவண்டிகளுடன்.



தையல் இயந்திரங்களுடன் பெண்கள்.



RI இயக்குனர் கோட்பாகி பள்ளி மாணவியுடன் செல்ஃபி எடுக்கிறார்.

என்று சத்யநாராயன் கூறினார். இன்ஸ்டிட்யூட்டில் உள்ள 1,000 சக்கர நாற்காலிகளில், 500 விசாகப்பட்டினத்தின் இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு வழங்கப்பட்டது; 250 இந்திய ரயில்வேக்கு வழங்கப்பட்டது, மேலும் 250 தகுதியான மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்குவதற்காக பொது சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டது.

RID 3030ல் நிதியுதவி செய்யப்பட்ட புகையில்லா அடுப்புகள், 500 பழங்குடிப் பெண்களுக்கு அவர்களின் சமையலறை அனுபவத்தை வசதியாக்கவும் எளிதாக்கவும் வழங்கப்பட்டது.

ஆபரேஷன் இமேஜின் நிகழ்வை DG பாஸ்கர் ராம் விஸ்வநாத் ஒருங்கிணைத்தார்.

*தையல் தொழிலில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் நீங்கள் அனைவரும் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருக்க முடியும். ரோட்டரி இதையெல்லாம் சாத்தியமாக்கியிருப்பதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது*

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்

புகைப்படங்கள்:
ஹேமந்த் குமார்

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்



VISAKHA VISTA

# குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றும் கவாஸ்கரின் மூன்றாவது இன்னிங்ஸ்

ரஷீதா பகத்

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் இரண்டாவது வாய்ப்பு தேவைப்படுகிறது. மேலும் குழந்தைகளுக்கு வாழ்க்கையின் பரிசு விலைமதிப்பற்றது. ஒரு சிலரால் மட்டுமே இரண்டாவது வாய்ப்பின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள முடிகிறது. ஒருவருக்கு இரண்டாவது வாய்ப்பு இல்லாவிட்டால் அவர் எப்படி இருந்திருக்க வேண்டுமோ அப்படி இருந்திருக்க முடியாது என்று விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற விசாகா விஸ்டா மண்டல கழக மாநாட்டில் உரையாற்றுகையில் கிரிக்கெட் ஜாம்பவான் கவாஸ்கள் கூறினார்.

பிறவியிலேயே இதயக்குறை பாடுகளுடன் பிறக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளித்து வரும் ஸ்ரீ சத்யசாய் சஞ்சீவனி மருத்துவமனையின் அறங்காவலரான கவாஸ்கர், ரோட்டரியுடன் ஒரு

சுனில் காஸ்கருக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருதை RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் PRIP சேகர் மேத்தா வழங்குகின்றனர். உடன் (இடமிருந்து) PDGs கிஷோர் குமார், ரவி வட்லாமணி, PRID கமல் சங்வி மற்றும் சத்ய சாய் சஞ்ஜீவனி மருத்துவமனை அறங்காவலர் விவேக் கௌர் ஆகியோரும் உள்ளனர்.



புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளார். இந்த மூலம் இந்த மருத்துவமனையில் 2025ம் ஆண்டு வரை 2025 குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சை செய்ய ரூ.5 கோடி வழங்குவதை ரோட்டரி உறுதிசெய்துள்ளது.

கவாஸ்கருக்கு ரோட்டரியின் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கப்பட்டது. அந்த விருதை அவர், ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் PRIP சேகர் மேத்தா முன்னிலையில் ரோட்டரி இயக்குநர் மகேஷ் கோட்பாகியிடமிருந்து பெற்றுக் கொண்டார்

கிரிக்கெட் வீரரான கவாஸ்கர், இரண்டாவது வாய்ப்பு என்றால் என்ன? என்று விரிவாக விளக்கினார். மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணியின் சார்பில் முதன் முதலாக களத்தில் இறங்கியபோது 12 ரன்கள் எடுத்த நிலையில், ஒருபந்தை அடித்து விளையாடியபோது பந்து, மட்டையின் வெளிப்புற விளிம்பில் பட்டு இரண்டாவது ஸ்லிப்புக்குச் சென்றது. அங்கே பிரபல கிரிக்கெட் வீரரான கேரி ஸோபர்ஸ் பீல்டிங் செய்துகொண்டிருந்தார். கிரிக்கெட் வட்டாரத்தில் அதை டாலி கேட்ச் என்பார்கள். அதாவது பந்தை அடித்து அதை பீல்டரின் கையில் கொடுப்பது. ஆனால், எனது அதிர்ஷ்டம் ஸோபர்ஸ் அந்த கேட்சை பிடிப்பதற்கு தவறிவிட்டார். அதன் மூலம் கிரிக்கெட் ஆட்டத்தில் எனக்கு இரண்டாவது வாய்ப்பைக் கொடுத்ததன் மூலம் நான் தொடர்ந்து ஆடி 50 ரன்களை எடுக்க முடிந்தது. மேலும் அடுத்த டெஸ்ட் போட்டியில் அணியில் இடம் பெறுவதை உறுதி செய்தேன் என்று பார்வையாளர்களிடம் கூறினார். அவரின் ஒவ்வொரு வார்த்தையையும் அவர்கள் ஆர்வத்துடன் கேட்டறிந்தனர்.

கவாஸ்கர் தொடர்ந்து பேசினார். நான் 6 ரன்னில் விளையாடிக் கொண்டிருந்தபோது, வேகப்பந்து வீச்சாளர் வீசிய பந்தை சிரமப்பட்டு தடுத்து ஆடினேன். பந்து மட்டையின் ஓரத்தில் பட்டு மீண்டும் சர் காரிபீல்டு பக்கம் சென்றது. இந்த கேட்சை பிடிப்பது கடினம்தான். பந்து அவரது மார்பில் பட்டு, அவர் அதை பிடிப்பதற்குள் தரையில் விழுந்துவிட்டது. இந்த முறை நான் டெஸ்ட் போட்டியில் எனது முதல் சதத்தை எடுத்தேன்.

அதன் பிறகு, அடுத்த 17 ஆண்டுகளுக்கு தொடர்ந்து அணியில் இடம் பெறும் வகையில் ஆடினேன். இன்னும் சொல்லப்போனால் போதும் என்கிறவரை அணிக்காக விளையாடினேன் என்றார் கவாஸ்கர்.

நான் புட்டபர்த்தி ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் தீவிர பக்தன் என்று குறிப்பிட்ட கவாஸ்கர், சாய் பக்தர் என்ற போதிலும், ஒரு குழந்தைக்கு வாழ்க்கையில் இரண்டாவது வாய்ப்பு கிடைப்பது அசாதாரணமானது என்பதால் இது என்னுள் அதிர்வலையை ஏற்படுத்தியது என்று விளக்கினார். அறுவைச்சிகிச்சைக்குப் பிறகு உங்கள் குழந்தை உடல்நலத்துடன் ஆரோக்கியமாக இருக்கும் என்று மருத்துவர் கூறும் போது குழந்தையின் பெற்றோருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை பார்க்கும் போது மனதுக்கு நெகிழ்ச்சியாக இருந்தது. இங்கு சிகிச்சைக்கு வரும் குழந்தைகளின் பெற்றோர்களில் 99 சதவீதம் பேர் பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பத்தினர். மேலும் அவர்கள் சிறிய நகரங்களையும், கிராமங்களையும் சேர்ந்தவர்களாக இருந்தனர். சில சமயங்களில் இங்கிருந்து வீடு திரும்பக்கூட அவர்களிடம் பணம் இருக்காது. அவர்கள் குழப்பத்துடன் பீதியடைந்த நிலையில் மருத்துவமனைக்கு வருகிறார்கள். முதலில் குழந்தையைப் பற்றிய கவலை அவர்களுக்கு. அடுத்து இங்கு பல மனிதர்கள் வந்துபோவது, பல கட்டடங்கள் இருப்பது மற்றும் கார்கள் வரிசை கட்டி நிற்பது மற்றும் அழுகுரல்கள் கேட்பதைக் கண்டு கவலையும் பதற்றமும் அடைகிறார்கள். உலகம் முழுவதும் சுற்றும் நம்மில் ஒருவருக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டால் மருத்துவனையில் மருத்துவர் வரும்வரை ஒருவித பதற்றம் ஏற்படுகிறது. அப்படியிருக்கையில், இந்தக் குழந்தைகளின் பெற்றோர்களின் நிலை எப்படி இருக்கும்? என்று நினைத்துப் பாருங்கள் என்றார்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு உங்கள் குழந்தை உடல் ஆரோக்கியத்துடன் மற்ற எல்லோரையும் போல வழக்கமான வாழ்க்கை வாழ்வார்கள் என்று மருத்துவர்கள் பெற்றோரிடம் கூறும்போது அவர்கள் கவலைகளை மறந்து மகிழ்ச்சியில் திளைப்பதை பார்க்க வேண்டுமே!. நான் அதைப் பார்த்தேன். அது எனக்கு, இந்திய அணிக்காக நான் விளையாடி இரட்டை சதம் எடுத்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மேலானது. இந்த மருத்துவமனையில் 99.4 சதவீதம் அறுவைச்சிகிச்சைகள் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. இங்கு சிகிச்சைக்காக வரும் ஒவ்வொரு குழந்தையையும் காப்பாற்றுவதுதான் முக்கிய நோக்கமாகும் என்றார்.

கவாஸ்கர் மேலும் கூறுகையில், இது என் வாழ்க்கையில் மூன்றாவது இன்னிங்ஸ். ஒரு கிரிக்கெட் வீரராக எனது முதல் இன்னிங்ஸை முடித்தேன். இரண்டாவது இன்னிங்ஸ் நிர்வாகம், ஊடகம், டி.வி. வர்ணனையாளர், கிரிக்கெட் விளையாட்டை பற்றி

எழுதுவது என தொடர்கிறது. சில வருடங்களுக்கு முன்பு எனது மூன்றாவது இன்னிங்ஸை தொடங்கினேன். இது எனக்கு மனநிறைவையும், ஊக்கத்தையும் அளிக்கிறது.

ஏழைக் குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தி வரும் ரோட்டரிக்கு எனது நன்றி. என்னுடைய முதல் இன்னிங்ஸில் என்னுடன் சேர்ந்து விளையாடப் போகும் நபர் யார் என்பதை அறிய ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பேன். என்னுடன் சேர்ந்து பலரும் விளையாடினார்கள். இந்திய அணிக்காக விளையாடிய போது 19 பேர் என்னுடன் சேர்ந்து தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கியுள்ளனர். சிலர் சிறப்பாக ஆடினார்கள். சிலர் வெற்றிகரமாக ஆடினார்கள். சிலர், இரண்டு அல்லது மூன்று டெஸ்டுகள் விளையாடிவிட்டு ஒதுங்கிக் கொண்டுவிட்டார்கள். ஆனால், ரோட்டரியுடன் நான் ஏற்படுத்திக் கொண்டுள்ள கூட்டுறவு நீண்டநாள் நீடித்திருக்கும். நாம் இருவரும் சேர்ந்து ஆயிரக்கணக்கான குழந்தைகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவோம்.



PRIP மேத்தா, கவாஸ்கர் மற்றும் RID கோட்பாகி.

இப்போது இந்தியாவில் இது போன்று நான்கு மருத்துவமனைகள் உள்ளன. தவிர ஃபிஜியில் ஒன்றும் கொழும்புவில் ஒன்றும் உள்ளது. இவை போன்று பல மருத்துவ மனைகள் வருங்காலங்களில் உருவாகும். எங்களின் குறிக்கோள் ஒன்றுதான். அது 'தில்' (இதயம்), பில் அல்ல என்று தெரிவித்தார் கவாஸ்கர்.

முன்னதாக மண்டல கழக மாநாட்டுக்கு வருகைதந்த கிரிக்கெட் ஜாம்பவான் சுனில் கவாஸ்கரை, அதன் அமைப்பாளர் மகேஷ் கோட்பாகி வரவேற்றார். வாழ்க்கையில் நான் சந்தித்த இரண்டு ஹீரோக்களில் ஒருவர் கவாஸ்கர். மற்றொருவர் அமிதாப்பச்சன். ஆனால், அவர் இங்கு வரவில்லை. சஞ்சீவனி மருத்துவமனை ஒன்றுக்கு நான் சென்றபோது, அங்கு கட்டணம் வசூலிக்கும் கவுன்ட்டர், காப்பீடுத்தொகை கோரும் கவுன்டர் இல்லை என்ற உண்மையை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். அங்கு இருப்பதெல்லாம் அன்பும் கருணையும்தான் அதனால்தான் ரோட்டரி இந்த மருத்துவமனையுடன் கூட்டாண்மை சேர்ந்து கிப்ட் ஆஃப் லைஃப். திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்தது என்றார் அவர்.■

## பெங்களூரில் அடுத்த ரோட்டரி இன்ஸ்டிட்யூட்



**இடதிலிருந்து:** PDG KP *நாகேஷ், உமா,* RIDE TN *சுப்ரமணியன், வித்யா, ஷிப்ரா,* RIDE *அனிருதா ராய்சௌத்ரி,* TRF *அறங்காவலர் பரத் பாண்ட்யா, மாதவி, ரூபா மற்றும்* PDG *சமீர் ஹரியாணி.*

நம்ம பெங்களூருவுக்கு உங்களை வரவேற்கிறோம் என்கிறார் RIDE T N சுப்பிரமணியன். இவர் தான் ரோட்டரி இன்ஸ்டிட்யூட் 2023, RISEன் அமைப்பாளர். 2023 டிசம்பர் 15 முதல் 17 வரை பெங்களூரில் உள்ள சாமர வஜ்ரா மாநாட்டு மையத்தில் மண்டல மாநாடு நடைபெறும். GETS, GNTS தொடர்புடைய கருத்தரங்களுகள் டிச. 12 முதல் 14 வரை நடைபெறும் என்று தெரிவித்த அவர், மாநாட்டு குழு உறுப்பினர்களையும் அறிமுகப் படுத்தினார்.

RIDE அனிருதா ராய்சௌத்ரி இணை அமைப்பாளர்.PDG KP நாகேஷ் மாநாட்டுத் தலைவர். PDG சமீர் ஹரியானி, மாநாட்டுத் செயலாளர். RID AS வெங்கடேஷ் பயிற்சியாளர். PDGக்கள் தீபக் புரோஹித் மற்றும் குர்ஜீத் சிங் சிக்கோன் GETS மற்றும் GNTS தலைவர்களாக இருப்பார்கள்.■

# RI-இன் ஐந்தாண்டு நிதி முன்கணிப்பு

**V முத்துகுமரன்**

ரோட்டேரியர்களிடம் இருந்து சேகரிக்கப் படும் பணத்தின் வெளிப்படையான நிர்வாகத்தை உறுதி செய்ய ரோட்டரி இண்டர்நேஷனலில் ஒரு வலுவான நிதி அமைப்பு உள்ளது மற்றும் பங்கேற்பாளர்களின் அனுபவத்தை மேம்படுத்த நிதி நன்கு செலவிடப்படுகிறது என்று RI வாரியத்தின் பொருளாளர் மற்றும் RI இயக்குனர் A S வெங்கடேஷ் கூறினார்.

மண்டல நிறுவனத்தில் ரோட்டரியின் நிதிக் கண்ணோட்டத்தை அளித்த அவர், "ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே பட்ஜெட் செய்யப் படுகிறது. இந்த காலகட்டத்தில் உறுப்பினர்களின் வளர்ச்சி மற்றும் தனிநபர் நிலுவைத் தொகைகள் குறித்த இரண்டு அனுமானங்களுடன் அது கணிக்கப்படுகிறது" என்றார்.

நாம் முன்னோக்கிச் செல்ல, ஐந்தாண்டு வளர்ச்சிக் கணிப்பு களுக்கு தகவலறிந்த யூகங்கள் மட்டுமே செய்யப்படுகின்றன மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடும் கவுன்சில் ஆஃப் லேஜிஸ்லேஷேன், அடுத்த இரண்டு ஆண்டுகளில் உறுப்பினர் ஆண்டு சாந்தைவை $4 மற்றும் $3.5 உயர்த்த முடிவு செய்துள்ளது என்று வெங்கடேஷ் கூறினார். RI வாரியமானது வருவாய் மற்றும் செலவுகள் பொருந்திய ஒரு சமநிலையான வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறது, மேலும் அது அந்த நிதிச் செயல்முறையைக் கண்காணித்து உறுப்பினர்கள், சங்கங்கள் மற்றும் மாவட்டங்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்வதை உறுதி செய்கிறது.

"வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் நிலுவைத் தொகையிலிருந்து கிடைக்கிறது, ஆனால் 2019 நிதியாண்டில் எதிர்பார்க்கப்பட்டதை விட 2022 (2021–22) நிதியாண்டில் உறுப்பினர் எண்ணிக்கையில் சிறிது குறைவு உள்ளது," என்றார். RI வாரியம் 2027 நிதியாண்டில் $93 மில்லியன் வருவாயை மதிப்பிட்டுள்ளது, இது 2023 நிதியாண்டின் $74 மில்லியனிலிருந்து (தற்காலிகமானது) அதிகமாகும். RI திட்டங்கள், செயல்முறைகள் மற்றும் உறுப்பினர் ஆதரவில் தொடர்ந்து முதலீடு செய்யும். *rotary.org*ல் உள்ள ரோட்டரி கற்றல் மையம், உறுப் பினர்களுக்கான தலைமைப் பயிற்சி மற்றும் ஆதரவு முயற்சி களுக்கான அனைத்து ஆதாரப் பொருட்களையும் கொண்டுள்ளது, என்றார்.

வருவாயில் 57 சதவீதம் ரோட்டேரியன்கள் மற்றும் அவர்களின் ஆதரவு திட்டங்களுக்கு செலவிடப்படுகிறது, 21 சதவீதம் சொத்துக்கள், பிராண்டிங் போன்ற வற்றிலும், 22 சதவீதம் நிர்வாகம் மற்றும் இணக்கச் செலவுகளிலும் முதலீடு செய்யப்படுகிறது, ஏனெனில் RI ஏழு நாடுகளில் அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

221 நாடுகளில் 37,000 சங்கங்களைக் கொண்டுள்ள ரோட்டரி, அதன் டிஜிட்டல் இருப்பை மேம் படுத்தவும், அதன் உறுப்பினர்களின் எதிர்பார்ப்புகளை மேலும் பூர்த்தி செய்யவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது, என்றார். வெவ்வேறு சந்தர்ப்பங்களில், ரோட்டரி சேகரித்த பணத்தை எவ்வாறு செலவிடுகிறது என்று உறுப்பினர்கள் என்னிடம் கேட்பார்கள். கவலை வேண்டாம், எங்களிடம் நிதி அமைப்பு உள்ளது, அதனால் உங்கள் பணத்தில் எந்த தவறும் செய்ய முடியாது, என்றார்.■

V முத்துகுமரன்



*RID 3212 DG V R முத்து RI இயக்குனர் A S வெங்கடேஷ் அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்குகிறார். உடன் வினிதா மற்றும் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி ஆகியோரும் உள்ளனர்.*

# பெறும் தேசத்திலிருந்து கொடுக்கும் தேசமாக இந்தியா மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது

ரஷீதா பகத்




பள்ளி குழந்தைகளுடன்
RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்.

வைசாக் இன்ஸ்டிட்யூட்டின் தொடக்க அமர்வில், RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், "நீங்கள் செய்யும் அற்புதமான சேவை திட்டங்களுக்காக இந்தியாவின்" ரோட்டேரியன்களை வாழ்த்தினார், மேலும் அவர்களின் கதைகளை உலகின் பிற பகுதிகளுடன் பகிர்ந்து கொள்ளுமாறு அவர்களை வலியுறுத்தினார். கடந்த பல வருடங்களாக இந்தியாவிற்கு பலமுறை பயணங்களை மேற்கொண்டதன் மூலம் இந்தியாவின் மாற்றத்தை கண்டு தான் வியந்ததை வெளிப்படுத்திய அவர், தற்போது தான் காணும் மாற்றமடைந்த இந்தியா குறிப்பிடத்தக்கது என்றார்; "பெற்றுக்கொள்ளும் தேசத்திலிருந்து நீங்கள் இப்போது கொடுக்கும் தேசமாகிவிட்டீர்கள்."

உலகெங்கிலும் தனது இமேஜின் இம்பாக்ட் சுற்றுப்பயணத்தின் விவரங்களையும் அவர் ஏன் அதை மேற்கொண்டார் என்பதையும் விளக்கிய அவர், ரோட்டரியின் ஏழு கவனம் செலுத்தும் பகுதிகளில் உலகெங்கிலும் ரோட்டேரியன்கள் செய்யும் அற்புதமான சேவைத் திட்டங்களின் மீது கவனத்தை திருப்புவதற்கே என்றார்.

இவற்றில் ஒன்றான ஆரோக்கியம், குறிப்பாக தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியம் மற்றும் போலியோவை ஒழிப்பது தொடர்ந்து முன்னுரிமையாக இருக்கிறது. எனவே நான் செய்த முதல் பயணம் ஆகஸ்ட் 2022ல் பாகிஸ்தானுக்கு; நான் அங்கு சென்று நம் ரோட்டரி கதைகளைச் சொல்ல விரும்பினேன். போலியோ பாதிப்புக்குள்ளான எஞ்சியிருக்கும் இரண்டு நாடுகளில் இதுவும் ஒன்று என்பதால், அந்த நாட்டிற்குச் செல்ல விரும்பினேன். அதுமட்டுமில்லாமல், முன்னணி போலியோ பணியாளர்களை சந்தித்து அவர்களுக்கு இரண்டு முக்கியமான வார்த்தைகளை வழங்க விரும்பினேன் "தங்களுக்கு நன்றி". உங்களுக்குத் தெரியும், அந்த இரண்டு உயிர்காக்கும் சொட்டுகள் தேவைப்படும் கடைசி குழந்தைகளைக் கண்டுபிடிக்க அவர்கள் தெருக்களுக்குச் சென்று ஒவ்வொரு நாளும் தங்களைத் தாங்களே ஆபத்தில் ஆழ்த்துகிறார்கள்.

இன்ஸ்டிடியூட்டில் கலந்துகொண்ட 1000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளிடம் உரையாற்றிய அவர், இந்தப் பணி எவ்வளவு முக்கியமானது என்பதை உலகில் உள்ள மற்றவர்களை விட இந்த அறையில் உள்ள நீங்கள் நன்கு அறிவீர்கள். நீங்கள் இங்கு ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுகிறீர்கள். நான் இங்கே இருந்திருக்கிறேன், உங்களுடன் இதைச் செய்திருக்கிறேன். இந்த சொட்டு மருந்துகளை குழந்தைகளுக்கு கொடுக்க நாம் ஒன்றாக நடந்துள்ளோம். போலியோவைக் கடைசியாக முடிவுக்குக் கொண்டுவரும் நாடு நீங்ககளாக தான் இருக்கும் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் பத்தாண்டுகளுக்கு முன்பே உங்களால் அதைச் செய்ய முடிந்தது. அதைப் பற்றி நீங்கள் மிகவும் பெருமைப்பட வேண்டும், என்று அவர் கூற, பார்வையாளர்கள் இடி போன்ற கைதட்டல்களை எழுப்பினர்.

ஜோன்ஸ் தனது இரண்டாவது பயணத்தில் ஜாம்பியாவிற்குச் சென்றதை பற்றி கூறினார், அங்கு RI 'மலேரியா இல்லாத ஜாம்பியா' திட்டத்தை மேற்கொண்டுள்ளது. "இது ஒரு சுவாரஸ்யமான அனுபவமாக இருந்தது, ஏனெனில் இந்த அளவில் இதுவே முதல் திட்டமாகும், மேலும் எங்கள் மானியத்துடன் நாங்கள் செய்யும் சோதனையாகும்." இத்திட்டத்திற்கு RI $2 மில்லியன் வழங்க, கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் வேர்ல்ட் விஷன் ஒவ்வொன்றும் $2 மில்லியன் வழங்கியுள்ளது. $6 மில்லியன் டாலர் தொகை கொண்டு போலியோவிற்கான பொது சுகாதார உள்கட்டமைப்பில் RI உருவாக்கிய அதே மாதிரியைப் பயன்படுத்தி, 2,500 சமூக சுகாதார ஊழியர்களைக் கண்டுபிடித்தது. இது "ஜாம்பியா நாட்டிலிருந்து மலேரியாவை அகற்ற முடியுமா என்று சோதிக்க செயல்படுத்தப்பட்டது."

இவை "உயர்ந்த இலக்குகள் மற்றும் ஒரு பெரிய கனவு" என்று ஒப்புக்கொண்ட RI தலைவர், குறிப்பிடத்தக்க முடிவு என்னவென்றால், ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்தில், இந்த திட்டம் தொடங்கப்பட்ட இரண்டு மாகாணங்களில் சோதனைகள் செய்யப்பட்டபோது, நாம் ஒரு வருடத்திற்குள் 50 சதவீதம் மலேரியாவை ஒழித்திருக்கிறோம் என்று தெரிந்தது. இது மிகப் பெரியது இந்த வெற்றியின் அடிப்படையில் நாம் அதை நாடு முழுவதும், அண்டை நாடுகள் மற்றும் உலகின் பிற பகுதிகளில் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும்.

பின்னர் ஜோன்ஸ் ஒரு சுவாரசியமான கதையைச் சொன்னார். ஜாம்பியாவின் மாகாணங்களில் ஒன்றில் உள்ள ஒரு கிராம சதுக்கத்தில், அவர் திமோதியையும் அவரது 11 வயது மகன் நாதனையும் சந்தித்தார், நாதன் மலேரியாவின் அறிகுறிகளைக் காட்டத் தொடங்கிய அதிர்ச்சிகரமான காலத்தை பற்றி திமோதி அவரிடம் கூறினார். இந்த திட்டத்தால் அடையாளம் காணப்பட்ட சமூக சுகாதார பணியாளர்கள் பணி அமர்த்தம் செய்வதற்கு முன்பு இது நடந்தது. "அவர் தனது மகனை முதுகில் ஏற்றி, நீண்ட மணிநேரம் தனது இரு சக்கர வாகனத்தை ஒட்டி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். குழந்தை அவரது உடலைப் பிடித்துக் கொண்டிருந்தது, பல மணிநேரங்களுக்குப் பிறகு தனது மகனின் கால்கள் குளிர்ச்சியடைவதை அவர் உணர்ந்தார், மெதுவாக தனது மகன் தனது முதுகில் தள்ளாடுவதை உணர ஆரம்பித்தார். அவர் இறுதியாக கிளினிக்கை அடைந்து, 'எனது மகனுக்கு உதவுங்கள்' என்று கத்தினார். மருந்துகள் கொடுத்து அவர்களால் நாதனின் உயிரைக் காப்பாற்ற முடிந்தது."

ஆனால், திமோதி அழுதுகொண்டே சொன்னார்: என் முதல் மகனுக்கும் அப்படித்தான் நடந்தது. ஆனால் அவன் உயிர் பிழைக்கவில்லை; என் மகனை இழந்தேன்.

இந்த விஷயங்கள் நடக்காமல் இருப்பதை உறுதி செய்யும் திறனை பெற்றிருப்பதை ரோட்டேரியன்கள் அதிர்ஷ்டமாக உணர வேண்டும் என்று ஜோன்ஸ் கூறினார். "நான் திமோதியையும் நாதனையும் சந்தித்தது எனது வாழ்க்கையை மிகவும் மேம்படுத்தியது... இங்குள்ள உங்கள் ஒவ்வொருவருக்கும் இது மாதிரியான கதைகள் உள்ளன என்பதை நான்

அறிவேன்; தயவுசெய்து அதை சொல்லுங்கள்.''

அவர் ரோட்டரியின் மற்றொரு கவனம் செலுத்தும் பகுதியான - அமைதி- பற்றி பேசினார். "அடுத்து நாங்கள் தைவானுக்குச் சென்று அங்குள்ள விவசாயிகளைப் பார்க்க போகிறோம், அவர்கள் பாரம்பரிய பயிர்களுக்கு பதிலாக அறுவடை செய்வதற்கு மிகவும் எளிதானதை பயிர் செய்துள்ளனர். ஏனெனில் கிராமப்புறங்களில் ஆண்களில் பலர் நகரங்களுக்குச் சென்றுள்ளனர், இதனால் பெண்கள் வயலில் வேலை செய்கின்றனர். நாங்கள் சுற்றுச்சூழலிலும் கவனம் செலுத்துகிறோம்; பின்னர் கல்வி மற்றும் அடிப்படை கல்வியறிவுத் திட்டங்களின் தாக்கத்தைக் காண குவாத்தமாலாவுக்கும், தண்ணீர் மற்றும் சுகாதார திட்டத்தை காண ஹைட்டிக்கும் செல்கிறேன்.



ஜோன்ஸ் பகிர்ந்த அடுத்த கதை, ஜோர்டானில் நடந்த ஜோன் இன்ஸ்டிட்யூட்டில் கலந்து கொண்ட போது இதய அறுவை சிகிச்சை நிபுணர் Dr மார்க்கைச் சந்தித்தது. அவர் ஒரு வார கால பணிக்காக அங்கு வந்திருந்தார்; அவர் குழந்தை களுக்கு எப்படி இதய அறுவை சிகிச்சை செய்கிறார் என்பது பற்றி அவருடன் விரிவாக உரையாடினார். அவரது பயணம் முடிந்து, விமான நிலையத்திற்குச் செல்லவிருந்தபோது, Dr மார்க் ஒரு அறுவை சிகிச்சையைத் தொடங்கப் போவதாகவும், அதை அவர் பார்க்க விரும்புகிறாரா என்று கேட்கப்பட்டிருக்கிறார். "நிச்சயமாக நான் அதை செய்ய விரும்பினேன், அதனால் நாங்கள் மருத்துவமனைக்கு விரைந்தோம். மிக விரைவாக நான் மருத்துவமனை கிரீன் ஆடையில் மாறி, சில நொடிகளில் அறைக்குள் நுழைந்தேன், மூச்சு விடக்கூட விருப்பமின்றி அமைதியாக அங்கேயே நின்றேன்.''

6 மாதங்களே ஆன சிறிய செல்மா மற்றும் சிரியாவிலிருந்து அகதியாக வந்த ஒருவருக்கு Dr மார்க் திறந்த இதய அறுவை சிகிச்சை செய்ததை அவர் கண்டார். அவர் துல்லியமாக தைப்பதை நான் பார்த்தேன், அவள் இதயத்தை சிறிது அசைத்து, மேலும் தைத்து... இன்னும் கொஞ்சம் அசைத்தார். இறுதியாக அவர் ஒரு முடிச்சு போட்டு, குழந்தையின் இதயத்தின் கீழ் தனது கையை வைத்து நன்றாக அசைத்தார். செல்மாவின் இதயம் துடிக்கத் தொடங்கியது. அவள் மீண்டும் உயிர் பெறுவதை நான் பார்த்தேன்... நீங்கள் எத்தனை குழந்தை செல்மாக்களுக்கு உதவி செய்திருக்கிறீர்கள் என்று பாருங்கள், 2025ம் ஆண்டுக்குள் குழந்தைகளுக்கு 2,025 இலவச இதய அறுவை சிகிச்சைகள் செய்வதற்கு ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவ மனையின் அறங்காவலர் சுனில் கவாஸ்கருடன் ரோட்டரி இந்தியா ரூ.5 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டதை நினைவு கூர்ந்து ஜோன்ஸ் கூறினார்.

ரோட்டரியின் 7 கவனம் செலுத்தும் பகுதி ஐ.நா.வின் நன்கு பரிச்சயமான நிலையான வளர்ச்சி இலக்குகளைப் போன்றது என்று சொல்லி, ரோட்டரியைப் பற்றி விரிவாக சமூகத்திடம் பேசுமாறு மக்களைத் தூண்டினார். நம் கதைகளைச் சொல்வதன் மூலம் நாம் ஒரு சங்கம் அல்லது ஒரு மாவட்டத்தை விட பெரியவர்கள்... நாம் ஒரு இயக்கம் என்று உலகிற்குச் சொல்ல வேண்டும்''.

இந்நிறுவனத்தின் தொடக்க நிகழ்வில் கன்வீனரும் RI இயக்குநருமான மகேஷ் கோட்பாகி கூறுகையில், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மூன்று நாள் நிகழ்ச்சியானது, கூடியிருக்கும் ரோட்டரி தலைவர்களுக்கு சிறந்த பொழுதுபோக்கு மற்றும் விருந்தோம்பல், தங்கள் அறிவை மேம்படுத்தும் மற்றும் பல புதிய யோசனைகளை சிந்திக்க வைக்கும் சிறந்த பேச்சாளர்கள், மற்றும் புதிய நண்பர்கள் மற்றும் நெட்வொர்க்கை உருவாக்க ஒரு வாய்ப்பு ஆகியவற்றின் கலவையை வழங்கும்.

இன்ஸ்டிட்யூட் தலைவர் PDG கிஷோர் குமார் வரவேற்றுப் பேசுகையில், பிரதிநிதிகளின் ஒவ்வொரு எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்ய மிகுந்த அக்கறை எடுக்கப்பட்டதாகவும், 1,000க்கும் அதிகமானோர் இந்த நிகழ்விற்கு பதிவு செய்திருப்பதாகவும் கூறினார்.

தலைவர் ஜோன்ஸ் தவிர, RIPN ஸ்டீபனி அர்ச்சிக், PRIP சேகர் மேத்தா, அறங்காவலர் பிரதிநிதி மற்றும் அறங்காவலர் ஆர்கே ஆஃப்ராங்க், RI இயக்குனர்கள் விக்கி புலிஸ், வெங்கடேஷ் மற்றும் ட்ரூ கெஸ்லர், RIDEs T N சுப்ரமணியன் மற்றும் அனிரூதா ராய்சௌத்ரி ஆகியோர் இன்ஸ்டிட்யூட்டில் கலந்து கொண்டனர்.

மேலும் மாநாட்டு கட்டுரைகள் அடுத்த இதழில்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# மெல்பர்ன் நினைவுகள்

**EVA ரெமிஜன்டோபா**

மே 27 முதல் 31 வரை நடைபெறவுள்ள 2023 மாநாட்டில் உங்களுக்குப் பல புதிய நண்பர்கள் கிடைப்பது உறுதி. மெல்பர்ன் வழங்கும் வியக்கவைக்கும் நகரக் காட்சிகள் அவர்களுடன் புகைப்படங்கள் எடுக்க மிகச் சிறந்த பின்னணியாக அமையும்.

மெல்பர்னுடைய Skydeck தெற்கு அரைக்கோளத்தின் மிக உயரமான காட்சி இடமாகும். Arts Centre கோபுரத்தில் தொடங்கி மெல்பர்ன் கிரிக்கெட் அரங்கம்வரை இந்த நகரத்தின் முக்கியப் பகுதிகளை 360 டிகிரியில் பார்க்க, Eureka Towerன் மின் உயர்த்தியில் ஏறி 88வது தளத்துக்குச் செல்லுங்கள். வானத்தில் மேகங்கள் இல்லாதபோது



*மெல்பர்னுடைய Skydeck-யிலிருந்து ஒரு காட்சி.*

Port Philip Bayயிலிருந்து பார்த்தால் தொலைவிலுள்ள தாழ் மலைகளாகிய Dandenongs-ஐ நீங்கள் பார்க்கலாம்.

Shrine of Remembrance போர் நினைவகக் கட்டடத்தின் முகப்பிலிருந்து நீங்கள் வானத்தைப் பார்வையிடலாம். Albert Parkல் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் மரங்கள் நிறைந்த, வளைந்து நெளிந்து செல்லும் பாதைகளில் நடந்து ஏரியின் தெற்குப் பக்கம் வாருங்கள், இன்னும் அழகான நகர்ப்புறத் தொடுவானக் காட்சிகளைக் காணுங்கள்.

இடை நிகழ்ச்சிகள் மற்றும் நட்பு இல்லம் நடைபெறும் மெல்பர்ன் மாநாடு மற்றும் கண்காட்சி மையத்துக்கு வெளியில் வந்தால், South Wharf Promenade ஆற்றோரச் சலசலப்பைப் பார்க்கலாம், அருகில் புகைப்படம் எடுக்க ஏற்ற Polly Woodside என்ற உயரமான கப்பல் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டத்துக்குள் நீங்கள் மிகப் பெரிய சாளரங்களின் வழியாக நகர்ப்புற வானம் மற்றும் ஆற்றைப் பார்க்கும்போது, மெல்பர்னில் மூழ்கியதுபோல் உணர்வீர்கள்.

ஆஸ்திரேலிய ஓபன் போட்டிகள் நடைபெறும் Rod Laver Arenaவில் நடைபெறும் பொது நிகழ்வுகளின் போது, நீங்கள் மெல்பர்னின் விளையாட்டு வளாகத்தைப் பார்ப்பீர்கள்.

**மேலும் அறிய, பதிவு செய்ய:** convention.rotary.org.

---

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

### PHF அங்கீகாரத்தைச் செயல்படுத்துதல்

அறக்கட்டளை அங்கீகாரப் புள்ளிகளை மாற்றுவதற்கான கோரிக்கை கொடையாளர் சேவைகள் குழுவால் செயல்படுத்தப்படுகிறது, இணையத்தில் சங்க அங்கீகாரச் சுருக்கத்தில் அது மாற்றப்படுவதற்கு 5 முதல் 10 பணி நாட்கள் ஆகிறது. இந்த அறிக்கையைச் சங்கத் தலைவர்கள், செயலாளர்கள், சங்க அறக்கட்டளைத் தலைவர்கள் *www.rotary.org*ல் உள்ள உறுப்பினர் அணுகல் வழியாகக் காணலாம். அனைத்து உறுப்பினர்களும் PHF அங்கீகார நிலைக்குத் தகுதி பெறாமல்/அதை எட்டாமல் இருக்கலாம். அதனால், சங்க அலுவலர்கள் இந்த அறிக்கையை ஆராய்ந்து, ஏதும் கேள்விகள் இருந்தால் எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

PHF அங்கீகாரப் புள்ளிகள் பரிமாற்றக் கோரிக்கையைச் செயல்படுத்துவதற்கு நீங்கள் அதைக் (PDF வடிவத்தில் மட்டும்) கொடையாளர் கையொப்பத்துடன் மஞ்சு ஜோஷி அவர்களுக்கு *Manju.Joshi@rotary.org* என்ற மின்னஞ்சல் முகவரியில் அனுப்பலாம்.

சேவைகளை மேம்படுத்த எங்களுக்கு உதவுவதற்கும், தகவல் தொடர்பின் நேர்விதப் பண்பாட்டை ஊக்குவிக்கவும், உங்கள் கவலைப் பகுதிக்கு ஏற்பப் பின்வரும் நபர்களுக்கு உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்:

1. மஞ்சு ஜோஷி: *manju.joshi@rotary.org*-அங்கீகாரம், அதாவது, PHF/MPHF/கொடையளிப்பவர்/பரிமாற்றப் படிவங்கள்/துணைவர் இணைத்தல்/பல IDக்களை ஒருங்கிணைத்தல்
2. மது மம்கெயின்: *madhu.mamgain@rotary.org*-மிகப் பெரிய கொடையாளர்/பங்களிப்புத் திருத்தங்கள்/துணைவர் இணைத்தல்/பல IDக்களை ஒருங்கிணைத்தல் விஷயங்களை மேல் அலுவலர்களுக்கு அனுப்ப, *Ashwini.sharma@rotary.org*ஐ அணுகுங்கள்.

### வழிசெலுத்தப்படும் பரிசுகள்

Directed Gifts திட்டமிடப்பட்டுள்ள (இன்னும் அங்கீகரிக்கப்படாத) திட்டம் ஒன்றுக்கு வழங்கக்கூடாது. ஆனால், இந்தியாவில் கொடையாளர்கள் இதைப் பரவலாகப் பின்பற்றுகிறார்கள். இதற்குமுன் பல சூழ்நிலைகளில் கொடையாளர்கள்/ஆதரவாளர்கள் தாங்கள் ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்கு வழங்கிய ஒரு பரிசுடன் கூடிய நல்கை தகுதியற்றதாகத் தீர்மானிக்கப் பட்டு மறுக்கப்பட்டபோது வருந்தியது நிகழ்ந்துள்ளது. எனினும், கொடையாளர் இதைச் செய்ய விரும்பினால், சங்கங்கள் மற்றும் மாவட்டங்கள் குறிப்பிட்ட திட்டங்களுக்குப் பரிசுகளைப் பெறத் திட்டமிட்டால், தொடர்புடைய பகுதி நல்கை அலுவலர் ஒரு முன் ஆய்வைச் செய்யும் செயல்முறையை நாங்கள் வைத்துள்ளோம். அந்த விண்ணப்பம் முன் ஆய்வு செய்யப்பட்டபிறகுதான் பரிசை வழங்க இயலும்.■


UPLIFTMENT OF VILLAGE CLUSTER, VELHE
Project by
Rotary Club of Pune Riverside
CSR India Grant No. CS2200016
Supported by
DUROSHOX
INDIA



இடமிருந்து: ப்ரீதி நாயர், ரெயின்ட்ரீ ஃபவுன்டேஷன் மேலாளர் மஞ்சித் வரேக்கர், சங்க பொருளாலர் அனுராதா முங்கே, RC பூனே ரிவர்சைட் தலைவர் கணேஷ் நடராஜன், முன்னாள் சங்கத்தலைவர் நீரூ கோயல் மற்றும் உமேஷ் ஜலான் (தலைவர், 2023–24) சங்கம் நிறுவிய குளம் அருகே.

Rotary PEOPLE OF ACTION

# கிராமங்களை மேம்படுத்தும் புனே ரோட்டரி

**ரஷீதா பகத்**

*புனேவில் உள்ள இரு ரோட்டரி சங்கங்கள் RC புனே கார்வேநகர் மற்றும் RC புனே ரிவர்சைடு புனே மாவட்டத்தின் வெல்ஹே மற்றும் போர் தாலுகாக்களில் உள்ள கிராமங்களில் ஒரு தண்ணீர் மற்றும் சுகாதாரம், மற்றும் வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளன.*

ஜூலை 2019ல், RC புனே கார்வேநகர், RI மாவட்டம் 3131ன் அப்போதைய தலைவர் ஆஷா அமோன்கர் மற்றும் முன்னாள் தலைவர் ஷிரிஷ் பூராணிக் ஆகியோர், சின்ஜெண்டாவின் CSR தலைவரான P S ஜெகதீஷாவை, அவர் நிறுவனத்திடம் இருந்து CSR நிதியுதவி கோரி சந்தித்தனர். அவர் அதில் பங்களிப்பதாக கூறினார், ஆனால் அவரின் ஒரே நிபந்தனை அந்த நிதியில் சங்கம் செய்யும் சேவை திட்டம் தண்ணீருடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். இந்த நிபந்தனைக்கு காரணம் அந்த நிறுவனம் விவசாயப் பொருட்களை விநியோகிப்பவர்கள்.

இந்த நிபந்தனையை மனதில் கொண்டு சங்கம் புனே மாவட்டத்தில் உள்ள போர் மற்றும் வெல்ஹே தாலுகாக்களில் உள்ள தொலைதூர கிராமங்களில் கிராம தலைவர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்களிடம் பேசி ஒரு கணக்கெடுப்பை நடத்தியது. கணக்கெடுப்பின் போது, இந்த தொலைதூர கிராமங்களில் உள்ள ஜில்லா பரிஷத் பள்ளிகளில் மாணவர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்கவில்லை என்பதை சங்கம்

உணர்ந்தது. அவர்கள் அனைவரும் பள்ளிகளுக்கு தண்ணீர் பாட்டில்களை எடுத்து வந்தனர், ஆனால் பெரும்பாலும் பாட்டில்களில் உள்ள தண்ணீர் பள்ளி நேரங்களில் அவர்களின் தாகத்தைத் தணிக்க போதுமானதாக இல்லை.

பள்ளிகளில் தண்ணீர் தொட்டிகள் இருந்தன, ஆனால் இவை அருகிலுள்ள ஆறு மற்றும் ஓடைகளில் இருந்து சுத்திகரிக்கப்படாத தண்ணீரையே சேமித்து வைத்தன. இந்த தண்ணீர் குடிப்பதற்கு பாதுகாப்பற்றதாக இருந்ததால், பல மாணவர்கள் தண்ணீரால் பரவும் நோய்களால் பாதிக்கப்பட்டு, உடல் ஆரோக்கியம் மட்டுமின்றி அவர்களின் பள்ளி வருகை மற்றும் கற்றலும் பாதிக்கப்பட்டது. ஆண்டுதோறும் குழந்தை களுக்கு பாதுகாப்பான குடிநீரை உறுதிசெய்யும் நிலையான வசதியை வழங்குவதற்கு CSR நிதியைப் பயன்படுத்த சங்கத்தலைவர்கள் முடிவு செய்தனர்.

CSR பார்ட்னர் கிடைத்தவுடன், சங்கம் மேற்கோள்களுக்கு அழைப்பு விடுத்தது, பல சப்ளையர்களின் மதிப்பீட்டை மேற்கொண்டது மற்றும் சரியான நீர் சுத்திகரிப்பு வகையைத் தீர்மானிக்க தண்ணீரின் தரத்தைக் கண்டறிய தண்ணீர் மாதிரிகளை பரிசோதித்தது, இறுதியாக மணிக்கு 25 லிட்டர் தண்ணீர் அளிக்கும் UV வசதியுடன் கூடிய சுத்திகரிப்பானை தேர்ந்தெடுத்தது. இந்த சுத்திகரிப்பு மாதிரி, பொதுவாக வீடுகளில் பயன் படுத்தப்படுகிறது என்று தற்போது சங்கத்தின் IT இயக்குநராக இருக்கும் சச்சின் அமோன்கர் கூறுகிறார். இது நிலத்தடி நீருக்கு ஏற்ற RO யூனிட் அல்ல. இந்த கிராமங்களின் நதி நீரை உபயோகிக்கலாம் மற்றும் இந்த வகையான சுத்திகரிப்பு மாதிரி ஆற்று நீருக்கு உகந்தது என அவர் விளக்குகிறார்.

இரண்டு தாலுகாக்களிலும் உள்ள கிராமங்களில் உள்ள 52 பள்ளிகளில், இதுபோன்ற மொத்தம் 52 சுத்திகரிப்பு இயந்திரங்கள், ஒவ்வொன்றும் சுமார் ரூ.26,000 செலவில் நிறுவப்பட்டன. இதற்காக சின்ஜெண்டா நிறுவனம் ரூ.14.56 லட்சம் CSR நிதியுதவி அளித்தது. இப்போது தங்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பான குடிநீரைக் கொடுக்கும் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களில் கிராம மக்கள் பங்களிப்பதை உறுதிசெய்ய, ஆற்றில் இருந்து பள்ளிக்கு குழாய் அமைப்பதற்கு நிதி வழங்குமாறு அவர்களிடம் கேட்டோம். அது பெரும் தொகை அல்ல - வெறும் 4,000 ரூபாய். கிராம மக்களின் பங்கேற்பு நலத்திட்டங்களின் வெற்றிக்கு முக்கியமானது, ஏனெனில் அவர்கள் திட்டத்தின் உரிமையாளராக உணர்வதால் என்று நாங்கள் நம்புகிறோம்.

*₹26,000, மதிப்பில் 52 நீர் சுத்திகரிப்பான் 52 பள்ளிகளில் நிறுவப் பட்டுள்ளது.*

இந்த குடிநீர் திட்டத்தின் பலன் என்னவெனில், சில சமயங்களில் 3–4 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மலைப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு ஏறி செல்லும் பல குழந்தைகளின் தண்ணீர் பாட்டில்களில்



*RC புனே கார்வேநகர் தலைவர் கௌரி குல்கர்னி குஞ்சாவனே கிராம பள்ளியில் நீர் சுத்திகரிப்பானை துவக்கி வைக்கிறார். உடன் DGND ஷீதல் ஷா மற்றும் சின்ஜென்டாவின் CSR தலைவர் P S ஜகதீஷா அவர்களும் உள்ளனர்.*



இருந்து தண்ணீர் தீர்ந்துவிட்டால் கூட தாகம் தீர்க்க போதுமான பாதுகாப்பான தண்ணீர் இருப்பதாகும். பல கிராமங்களில், பள்ளியிலிருந்து வெகு தொலைவில் வசிக்கும் மாணவர்களுக்கு பேருந்து வசதி போன்ற போக்குவரத்து வசதிகள் இல்லை என்றும், பள்ளிக்கு செல்ல நடந்து செல்வதே ஒரே வழி என்றும் அமோன்கர் விளக்குகிறார்.

2019ல் விவாதம் தொடங்கப்பட்ட அத்திட்டத்தை செயல்படுத்துவதில் தாமதம் குறித்து, அந்த ஆண்டு சங்கத் தலைவராக இருந்த அமோன்கரின் மனைவி ஆஷா, கோவிட் காரணமாக திட்டத்தின் பணிகள் பல முறை தடைபட்டதாக கூறுகிறார். இரண்டு லாக்-டவுன்களில் பள்ளிகள் மூடப் பட்டிருந்ததாலும், ஊழியர்களோ அல்லது தொழிலாளர்களோ கிடைக் காததாலும் அவை மோசமாக பாதிக்கப்பட்டன.

ஆனால் பல நிச்சயமற்ற நிலைகள் இருந்தபோதிலும், நாங்கள் திட்டத்தை முடித்துவிட்டோம், ஆறு/ஓடைகளில் இருந்து பள்ளிகளுக்கு அனுப்பப்படும் தண்ணீர் இப்போது சுத்திகரிக்கப்பட்டு குழந்தைகள் குடிக்க பாதுகாப்பானதாக இருக்கிறது. இந்த நீர் சுத்திகரிப்பு திட்டத்தின் மூலம் மொத்தம் 2,500 குழந்தைகள் பயனடைவார்கள்.

சுத்திகரிப்பு சாதனங்களின் நிலைத் தன்மை மற்றும் நீண்டகால பயன் பாட்டை உறுதி செய்வதற்காக, சங்கம் இந்த சாதனங்களை இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிப்பதற்காக நிறுவிகளுடன் ஒரு AMC ஒப்பந்தம் செய்துள்ளது, என்று அவர் மேலும் கூறினார்.

இந்த திட்டம் 2021ம் ஆண்டின் இறுதியில் RID 3131 DGND ஷிதல் ஷாவால் தொடங்கப்பட்டது. தொற்றுநோயால் பல தடங்கல்கள் வந்தாலும் உன்னிப்பாகவும் விரிவாகவும் திட்டமிட்டதற்காக




குன்ஜாவனே கிராம பள்ளி தலைமை ஆசிரியர் ஹேமந்த் காம்ப்லே மாணவர்களுடன்.

சங்கத்தை அவர் பாராட்டினார். கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக சத்ரபதி சிவாஜியின் தலைநகராக இருந்த ராஜ்காட் கோட்டையின் அடிவாரத்தில் உள்ள குஞ்சவனே கிராமத்தில் அமைந்துள்ள பள்ளியில் இத்திட்டத்தின் தொடக்க விழாவில் சின்ஜென்டா CSR தலைவர் ஜெகதீஷா மற்றும் சங்கத்தலைவர் கவுரி குல்கர்னி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜெகதீஷா கூறியதாவது: நமது நாட்டின் தொலைதூர கிராமங்களில் உள்ள சமூகங்களின் முன்னேற்றத்திற்காக ரோட்டரி மேற்கொண்டுள்ள பணியை நான் மிகவும் பாராட்டுகிறேன். RC புனே கார்வேனகருடன் நாங்கள் தொடர்பு கொள்ளாமல் இருந்திருந்தால், எங்கள் நிறுவனம் இது போன்ற இடங்களை அறிந்திருக்காது. எதிர்காலத்திலும் ரோட்டரியுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். குஞ்சவனே பள்ளியின் முதல்வர் ஹேமந்த் காம்ப்ளே மற்றும் கிராம முதியோர்களும் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளாக பள்ளிக்கு ஆதரவளித்த சங்க உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

மற்றொரு RID 3131 திட்டத்தில், புனேயில் இருந்து 90 கிமீ தொலைவில் உள்ள வெல்ஹே தாலுக்காவில் உள்ள ஒன்பது கிராமங்களை RC புனே ரிவர்சைடு பராமரிக்கிறது, இது கிராம மக்களுக்கு பாதுகாப்பான குடி நீரை வழங்கவும், இந்த கிராமங்களில் பாசனத்திற்கு தண்ணீர் பெருக்கவும்

சுற்றுச்சூழலுக்கு உகந்த கிராம மேம்பாட்டை மேற்கொண்டு வருகிறது.

இந்த திட்டத்தை விளக்கும் சங்கத்தின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட உமேஷ் குமார் ஜலான் கூறுகையில், இந்த ரூ.52 லட்சம் திட்டமானது முக்கியமாக CSR நன்கொடையால் நிதியளிக்கப்படுகிறது, மேலும் மாவட்டத்தால் ரூ.7 லட்சம் திரட்டப்படுகிறது. இந்த கிராம மக்களை கணக்கெடுக்கும் போது, வெல்ஹே தாலுக்காவில் உள்ள ஒன்பது கிராமங்களில் சுமார் 4,000க்கும் மேற்பட்ட மக்கள் குடிக்கும் தண்ணீர் மிகவும் அசுத்தமானது என்பதை சங்க உறுப்பினர்கள் கண்டறிந்தனர். ‘‘அவர்களின் முக்கிய நீர் ஆதாரம் நதி, ஓடைகள் அல்லது சேமிக்கப் பட்ட மழைநீரில் இருந்து வருகிறது, அவர்கள் குடிக்கும் தண்ணீரை ஒரு துணியால் கூட வடிகட்டுவதில்லை என்பதை கண்டு நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்.’’

இதனால், நீர் மூலம் பரவும் நோய்களுக்கு அவர்கள் எப்போதும் ஆளாகினர். எனவே கிராமப்புற மக்களுக்கு குடிப்பதற்கும், சமைப்பதற்கும் பாதுகாப்பான குடிநீர் கிடைக்க இந்த கிராமங்களில் தண்ணீர் வழங்கும் ATMகளை வழங்க சங்க உறுப்பினர்கள் முடிவு செய்தனர்.

‘‘நாங்கள் ஒன்பது கிராம மக்களுக்கு எட்டு ATMகளை அமைத்துள்ளோம், இந்த சுற்றுச்சூழல் நட்பு திட்டத்தால் சுமார் 4,000 பேர் பயனடைவார்கள்,’’ என்கிறார் ஜலான். ஒவ்வொரு பரிவர்த்தனையிலும் ATMகளில் இருந்து 20 லிட்டர் பாதுகாப்பான மற்றும் வடிகட்டப்பட்ட தண்ணீரை ATM கார்டுகளைப் பயன்படுத்தி எடுக்க முடியும் என்று அவர் விளக்குகிறார். ‘‘அவை வங்கி ATM கார்டுகளைப் போலவே உள்ளன, மேலும் இந்த ATMகளைப் பராமரிக்கும் மற்றும் இயக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ள உள்ளூர் பஞ்சாயத்து தலைவர்கள், ஒவ்வொரு 20 லிட்டர் பெறுவதற்கு ரூ.3 அல்லது 5 வசூலிக்கலாமா என்பதை முடிவு செய்யலாம்.’’

*9 கிராமங்களில் 8 ATMகள் 4000 மக்களுக்கு பயனளிக்கும்.*

கிராமங்களில் மையமாக அமைந்துள்ள இடங்களில் ATMகள், இன்லெட் மற்றும் அவுட்லெட் நீர் சேமிப்பு தொட்டிகள், அக்வா பிளஸ் தயாரிக்கும் வடி கட்டுதல் அலகுகள், மூடிய அறை களுடன் நிறுவப்பட்டன.

இந்த ATMகள் தவிர, விவசாயிகள் தங்கள் பாசனத் தேவைக்கு தொடர்ந்து தண்ணீர் பெறுவதற்கு உதவ, சங்க உறுப்பினர்கள் மழை நீர் சேகரிப்பு மூலம் 20 பண்ணை குட்டைகளையும் அமைத்துள்ளனர். இவை முக்கியமாக ஓராண்டில் இரண்டாவது அல்லது



*வெல்ஹே தாலுக்கா கிராமம் ஒன்றில் ரோட்டரியின் பயோடைஜஸ்டர்.*

மூன்றாவது பயிரை திட்டமிடுவதற்கு விளிம்புநிலை விவசாயிகளுக்கு கிடைக்க பெற்றதாக ஜலான் விளக்கு கிறார். தொட்டியின் சேமிப்புத் திறன் 300,000 முதல் 500,000 லிட்டர். இந்த குளங்களில் அதிக நீர் இருப்பு இருப்பதால், விவசாயிகள் மீன் வளர்ப்பதன் மூலம் தங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்ளவும் வாய்ப்புள்ளது.

அடுத்த நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டமாக 60 பயோடைஜெஸ்டர் எரிவாயு ஆலைகளை அமைத்ததாகும். அவை மாட்டுச் சாணத்தில் இருந்து நிலையான மற்றும் நீண்ட காலத்திற்கு வாயுவை உருவாக்கக்கூடும். உயிர்வாயு ஆலை என்பது காற்றில்லா செரிமானம் ஏற்படக்கூடிய ஆக்ஸிஜன் இல்லாத நிலைமைகளை வழங்கும் ஒரு வசதி. எளிமையாகச் சொன்னால், இது ஒரு செயற்கை அமைப்பாகும், அங்கு நீங்கள் கழிவுகளை நிலையான ஆற்றலாகவும் உரங்களாகவும் மாற்றி, சுற்றுச்சூழலுக்கு ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தலாம். பயோடைஜெஸ்டர் தொட்டிகள் அல்லது குழிகளில் பசுவின் சாணம் மற்றும் தண்ணீரை ஊட்டுவதன் மூலம் சமையல் எரிவாயு உருவாக்கப்படுகிறது, அவை வீட்டில் வைக்கப் பட்டுள்ள எரிவாயு அடுப்புக்கு எரிவாயு குழாய் மூலம் இணைக்கப்படுகின்றன. இது விறகுகளை எரிப்பதைத் தவிர்த்து, விரைவாக சமைத்து, நேரத்தை மிச்சப்படுத்துகிறது. அதன் முக்கிய நன்மை கிராமவாசிகள் மற்றும் அவர்களின் கால்நடைகள் வாழ்வதற்கு சுத்தமான, சுகாதாரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு நட்பான சூழலைப் பெறுவதாகும் என்று ஜலான் கூறுகிறார்.



*சங்கத் தலைவர் கணேஷ் நடராஜன் ATM குடிநீர் வசதி ஒன்றை ஒரு கிராமத்தில் துவக்கி வைக்கிறார்.*

*ரூ.52 லட்சம் மதிப்பிலான இந்த CSR திட்டத்தின் பெரும்பகுதி டியுரோஷாக்ஸ் மூலமாக நிதியளிக்கப் பட்டது. இத்திட்டம் 9 கிராமங்களுக்கு பயனளிக்கும்.*

ரூ.52 லட்சம் மதிப்பிலான இந்த CSR திட்டத்தின் பெரும்பகுதி, சங்கத்தின் முன்னாள் தலைவர் நீரு கோயலின் சொந்த நிறுவனமான டியுரோஷாக்ஸ் மூலமாக நிதியளிக்கப் பட்டது, மேலும் RI மாவட்ட பங்களிப்பில் இருந்து ரூ.7 லட்சம் வந்ததாகவும் சங்கத் தலைவர் கணேஷ் நடராஜன் தெரிவித்தார். இது செப்டம்பர் 2020ல் நிறைவு பெற்றது.

RC புனே ரிவர்சைடு சங்க உறுப்பினர்கள் கிராமவாசி களின் தேவைகள் மற்றும் சங்கம் அவர்களுக்கு வழங்கக்கூடிய கூடுதல் ஆதரவை மதிப்பீடு செய்கிறார்கள். “இதனால் நாம் உண்மையிலேயே சுற்றுச்சூழல் நட்பு கிராம சூழ்நிலையை உருவாக்க முடியும்.” ■

# புதிய உலகில் விரைந்து செயல்படுவோம்: மஷேல்கர்

V முத்துகுமரன்

அறிவியல் தொழில்நுட்பத்தில் உலக அளவில் நாம் முன்மாதிரியாக இருக்க வேண்டுமானால் இரண்டாம் நிலை நகரங்களிலும், கிராமங்களிலும் புதிய கண்டுபிடிப்புகளில் நாம் இன்னும் உத்வேகம் காட்ட வேண்டும். அப்படிச் செய்தால் சமூகத்தில் நிலையான மாற்றத்தை கொண்டுவர முடியும் என்றார் பிரபல விஞ்ஞானியும், காந்தியத்தின் முன்னோடியுமான R A மஷேல்கர்.

விசாகா விஸ்டா மாநாட்டில் தொடக்க உரையாற்றிய மஷேல்கர், தொழில்முறையில் ரசாயனப் பொறியாளர். நமது நாடு தத்தி தத்தி செல்லும் நிலையிலிருந்து குதித்துச் செல்லும் நிலைக்கு மாறவேண்டும். அப்போதுதான் இளம் விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள, சிந்தனையாளர்கள் புதிய கண்ணோட்டத்தை உணர்ந்து செயல்பட முடியும். இந்த அதிரடி மாற்றம் புதிய உலகத்திற்கான பொருள்கள், சேவைகளை கொண்டுவந்து சமூக புரட்சியை ஏற்படுத்தும் என்றார். இந்திய விஞ்ஞானிகள் வெறும் செயல் பாட்டாளர்கள் என்பதுடன் நில்லாமல் அடுத்த செயல்பாட்டை நோக்கிச் செல்ல வேண்டும். ஆபத்தான யோசனைகளை நான் சோதித்துப் பார்த்த போது திறமை, தொழில் நுட்பம் மற்றும் நம்பிக்கை (Talent, Technology and Trust) ஆகியவைதான் வளர்ச்சிக்கு முக்கியம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மொபைல் தொலைபேசி தொழில்நுட்பத்தில் ரிலையன்ஸ் நுழைந்த பிறகு, கடந்த சில வருடங்களில் மொபைல் தகவல் பயன்பாட்டில் இந்தியா 155வது இடத்திலிருந்து முதலிடத்தை பெற்றுள்ளது. மொபைல் இணைப்பின் வேகம் புதிய உச்சத்தை எட்டியுள்ளது என்றார் அவர்.

உள்ளூர் அறிவியல் கண்டுபிடிப் பாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் ரிலையன்ஸ இன்னோவேஷன் கவுன்சில் (RIC), ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானியால் நிறுவப்பட்டது. அடிமட்ட அளவில் திறமைகளை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். கிராமப்புற இளைஞர்களின் திறமைகளை ஊக்குவித்து வழிகாட்டும் ஒரு திட்டத்தையும் RIC செயல்படுத்தி வருகிறது. உண்மையிலேயே புதிய யோசனைகளைத் தெரிவித்து

*விஞ்ஞானி R A மஷேல்கருக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருதை RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் RIPN ஸ்டிஃபனி அர்ச்சிக், PRIP சேகர் மேத்தா மற்றும் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி முன்னிலையில் வழங்குகின்றனர்.*





*மிசோரம் ஆளுநர் K ஹரி பாபு (இடமிருந்து 2வது) அவர்களுக்கு PRID P T பிரபாகர் மற்றும் RI இயக்குனர் கோட்பாகி நினைவு பரிசு வழங்குகின்றனர். உடன் இன்ஸ்டிட்யூட் தலைவர் கிஷோர் குமார் அவர் மனைவி ஷோபா மற்றும் PDG ரஞ்சன் டிங்ரா ஆகியோரும் உள்ளனர்.*

அதன் மூலம் உச்சத்தை தொடவும், நிலையான பொருள்களை உருவாக்கும் திறமையும் கொண்டவர்களுக்கு இது ஒரு நல்ல முயற்சியாகும், என்று CSIRன் முன்னாள் டைரக்டர் ஜெனரல் குறிப்பிட்டார். தற்போது ரிலையன்ஸின் நியூ எனர்ஜி கவுன்சிலின் தலைவராக உள்ள மஷேல்கர், பயோசென்ஸ் இணை நிறுவனர் மிஷ்கின் இங்காவாலே, அகஸ்தா நிறுவனத்தின் நிறுவனரும் தலைமைச் செயல் இயக்குநருமான ராகுல் ரஸ்டோகி போன்ற இளம் விஞ்ஞானிகள் தங்களின் புதிய தொழில்நுட்பங்கள் மூலம் சர்வதேச அளவில் புகழ்பெற்றுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இங்காவாலே, ஊசியில்லாத, வலியில்லாத ஹீமோகுளோபின் பரிசோதனை முறையும், சிறுநீரக பரிசோதனைக்கு ஸ்மார்ட் போன் வழியிலான செயலியையும் கண்டுபிடித்துள்ளார். அதே நேரத்தில் ரஸ்டோகி, கைக்கு அடக்கமான இ.சி.ஜி. கருவியையும், இதயத்தின் செயல்பாடுகளை அளவிட சங்கேத் லைஃப் கருவியையும், மார்பக புற்றுநோயை கண்டறிய புதிய வகை பரிசோதனை கருவியையும் கண்டுபிடித்துள்ளார். நமது கண்டுபிடிப்புகள் மலிவான தாகவும், அதிக பயன்பாடு கொண்டவை யாகவும், அனைவருக்கும் பொதுவான தாக இருந்தால் புதிய தொழில்நுட்ப உலகில் வெற்றிநடைபோடுவது நிச்சயம். ஆனால் பத்தை எதிர் நோக்கும் மனோநிலையில் உள்ளவர்கள் தீவிர மாற்றங்களை விரும்பி ஏற்கமாட்டார்கள்.

இந்தியாவில் தொழில் தொடங்க விரும்பும் தொழிலதிபர்கள் (unicorns), அதாவது 1 பில்லியன் டாலர் முதலீட்டில் தொழில் தொடங்கு பவர்களுக்கு புதிய அறிவியல் தொழில் நுட்பம் பயனுள்ளதாக இருக்கும். கோவாவில், மஷேல் கிராமத்தில், ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்த எனக்கு ஒரு நாளைக்கு இரண்டு வேளை உணவு கிடைப்பதே பெரும் சவாலாக இருந்தது. சாலை விளக்கொளியில்தான் நான் படித்தேன். பள்ளிப்படிப்பை நிறுத்திவிடலாம் என்று நினைத்தபோது, டாடா நிறுவனத்திலிருந்து மாதம் ரூ.60 உதவித் தொகை எனக்கு கிடைத்தது. இதையடுத்து பள்ளிப்படிப்பை முடித்தேன் என்றார் மஷேல்கர். சகிப்புத்தன்மை, விடாமுயற்சி, நல்ல கற்பனை இருந்தால் சாதனைகளுக்கு எல்லையே இல்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மண்டல நிறுவன கருத்தரங்கில் மிசோரம் ஆளுநர் K ஹரி பாபு பேசு கையில், உலக அளவில் போலியோ ஒழிப்பு நடவடிக்கையில் மனிதகுலம் ஒன்றுபட்டு நின்றது. ரோட்டரியும், அரசும் இணைந்து செயல்படாவிட்டால் இதில் முழு வெற்றி பெற்றிருக்க முடியாது என்றார்.

உலகம் முழுவதும் மகிழ்ச்சியான சமூகங்களை உருவாக்குவதில் பார பட்சமற்ற முறையிலும், பரந்துபட்ட அணுகுமுறையிலும் RI செயல்பட்டு வருவது அனைவரும் அறிந்த உண்மையாகும் என்றார்.

1980-களின் முற்பகுதியில் இணையத்தின் பரிணாம வளர்ச்சிக்கு வழிவகுத்த உயர்நிலை கல்வி ஆராய்ச்சிக்கு நிதியளித்த அமெரிக்க பல்கலைக்கழகங்கள் மற்றும் அமெரிக்க பாதுகாப்புத் துறைக்கும் இடையே இருந்த கூட்டாண்மையை அவர் நினைவுகூர்ந்தார். இப்போது நம்மிடம் அருமையான தொழில்நுட்பம் உள்ளது. நலத் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்த அரசுக்கு ரோட்டரி, செஞ்சிலுவை சங்கம் போன்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

படங்கள்: ரஷீதா பகத்.

# நீர் கல்வியறிவு மற்றும் சமூகத்தால் இயக்கப்படும் நீர் மேலாண்மையை அறிமுகப்படுத்துங்கள்

ரஷீதா பகத்

வைசாக் இன்ஸ்டிடியூட்டில், ரோட்டரியின் வரைபடத்தில் நீர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பை கொண்டுவந்த மறைந்த RI தலைவர் வேட்பாளர் சுஷில் குப்தாவின் நினைவாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அமர்வு மிகவும் ஈர்க்கக்கூடிய மற்றும் வெளிப்படையானதாக இருந்தது.

தண்ணீரை ''மரியாதையுடன்'' பயன்படுத்த மக்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும் என்று உணர்ச்சிவசப்பட்டு வேண்டுகோள் விடுத்தார், மகசேசே விருது பெற்ற 'இந்தியாவின் வாட்டர்மேன்'' என்று அழைக்கப்படும் ராஜேந்திர சிங், அவர் நீர் மேலாண்மை திட்டங்களில் ரோட்டரியுடன் இணைந்து பணியாற்றியவர். சில ஆபத்தான புள்ளிவிவரங்களை அங்கே வழங்கினார். இந்திய அரசாங்கத்தின் புள்ளிவிவரங்களின்படி, இந்தியாவின் நிலத்தடி நீராதாரத்தில் 72 சதவீதத்திற்கும் அதிகமானவை எடுக்கப்பட்டுள்ளன. ரோட்டரி இந்தியாவில் இருந்து போலியோவை ஒழிப்பதில் மகத்தான பணிகளைச் செய்துள்ளது, இன்னும் உலகம் முழுவதும் இருந்து அதை ஒழிக்கப் பாடுபட்டு வருகிறது. ஆனால் மிகவும் ஆபத்தான மற்றும் கவலைக்குரிய பிரச்சனை அதிகமான அளவில் எடுக்கப்படும் நீர்நிலைகள் ஆகும். உங்கள் பூமியில் தண்ணீர் இல்லை என்றால், ரிசர்வ் வங்கியின் நாணயத்திற்கு மதிப்பு இருக்காது, ஏனென்றால் தண்ணீர் இருந்தால் மட்டுமே நம் வாழ்க்கையை வசதியாக தொடர முடியும்.

''கழித்தல், மாசுபாடு மற்றும் ஆக்கிரமிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் நமது நவீன கல்வி முறை'' பற்றி கடுமையாக விமர் சித்த சிங், அன்று காலை வைசாக்கின் மிகவும் பிரபலமான கோவிலுக்கு தரிசனத்திற்காகச் சென்றபோது, ''கோயிலுக்கு எதிரே இருந்த முனி பர்வதம் மோசமாக சிதைந்திருப்பதைக் கண்டேன். இப்போது அந்த மலையை வெட்டியது யார்? ஆந்திரப் பிரதேச அரசு. இயற்கையையும் அதன் வளங்களையும் அழிக்கக் கல்வி கற்பிக்க வேண்டும் என்று நமது அரசாங்கங்களும் சமூகங்களும்



நினைக்கின்றன; மற்றும் நமது தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் ஆகியவை குறைந்தபட்ச நேரத்தில் எப்படி மண்ணிலிருந்து அதிகபட்சமாக எடுக்க முடியும் என்பதை நமக்குக் கற்பிக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு பொறியாளர்/எக்ஸ்ட்ராக்டருக்கு மிகப்பெரிய சன்மானம் கிடைத்தால், நமது நவீன கல்வி முறை குறைபாடுடையது ஆகும்.

பார்வையாளர்கள் மத்தியில் PRIP சேகர் மேத்தாவை சுட்டிக்காட்டி, சேகர் மிகவும் உற்சாகமாக இருக்கிறார், அடுத்த 10 ஆண்டுகளில் அவர் ஆயிரக்கணக்கான குளங்கள், தடுப்பணைகள், நீர்நிலைகள் ஆகியவற்றைக் கட்ட விரும்புகிறார், மேலும் நம் அரசாங்கமும் சிறிது நேரத்தில் அனைவருக்கும் தண்ணீர் வழங்குவதில் மிகவும் உற்சாகமாக உள்ளது.பிரபலமான முழக்கம் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு குழாய் மற்றும் தண்ணீர். ஆனால் இவை அனைத்தும் வெற்று வார்த்தைகள், ஏனென்றால் உங்கள் நீர் வங்கி அத்தகைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தண்ணீர் இல்லை. என்று கூறினார்.

இங்கு தான் ரோட்டரியின் பங்கு மிக முக்கியமானது; ‘‘எடுப்பதில் கவனம் செலுத்தும் கல்விக்கு பதிலாக, அதை இயற்கைக்கு ஏற்றதாக மாற்ற வேண்டும் என ரோட்டேரியர்கள் அரசாங்கத்தை நம்ப வைக்க வேண்டும். நீங்கள் கல்வி முறையை மாற்றாத வரை மாசு, எடுத்தல் அல்லது ஆக்கிரமிப்பு ஆகியவற்றை உங்களால் தடுக்க முடியாது. இன்று மிகப்பெரிய அத்துமீறுதலும் சுரண்டலும் செய்வதே அரசு தான். இந்த நாடு நீர் வளம் மிக்கதாக இருக்க வேண்டும் என்றால், அனைவரின் நலனையும் நாம் சிந்திக்க வேண்டும், ரோட்டரி போன்ற அமைப்புகளால் மட்டுமே நமது அரசாங்கத்தை ஈடுபட செய்து அவர்களுக்கு அதன் காரணங்களை புரிய வைக்க முடியும்.

இன்ஸ்டிடுயூட்டில் மூத்த ரோட்டேரியன்களுக்கு சிங் கூறிய முக்கியமான செய்தி: மிகவும் தேவைப்படும் பாலமாக மாறுங்கள்; நான் பேசும் போது, எப்பொழுதும் நேராக பேசுவேன், ஆனால் நீங்கள் சரியான விதத்தில் வாதிடுவீர்கள், என்னால் அது முடியாது, ஏனென்றால் நான் அதைக் கற்றுக் கொள்ளவில்லை!’’

மேகங்களிலிருந்து வரும் ஒவ்வொரு துளி நீரையும் அன்புடன் பிடிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை ரோட்டேரியர்கள் அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால், அந்தத் தண்ணீரை எப்படி மரியாதையுடன் செலவழிக்க வேண்டும் என்பதை உணர்வோம்.

ரோட்டரி போன்ற அமைப்புகள் அரசாங்கத்துடன் பேசும்போது எத்தனை அணைகள் அல்லது நீர்நிலைகளை கட்டினாலும் நீரை திறமையாக பயன்படுத்தினால் தவிர தண்ணீர் போதுமானதாக இருக்காது என்பதை புரிய வைக்க முடியும்.

பரவலாக்கப்பட்ட நீர் மேலாண்மைக்கான கோரிக்கையை முன்வைத்த பிறகு, மற்றொரு முக்கியமான தேவையை பற்றி அவர் அறிவுறித்தினார் : நீர் கல்வியறிவு இயக்கம். அது இல்லாமல், பெரிய நீர் திட்டங்கள் வெற்றியடையாது, ஏனென்றால் நமது பயிர் முறைகள் அதிக அளவு தண்ணீரை எடுக்கிறது. மேலும், நமது ஓடைகளை மாசுபடுத்தும் மற்றும் நமது நீர் ஆதாரங்களை அழிக்கும் தொழில்களுக்கு நாம் ஆதரவளிக்கிறோம். கோதாவரி நதி எப்படி மாசுபட்டுள்ளது என்று பாருங்கள் என்றார்.

ரோட்டரி நீர் கல்வியறிவு இயக்கத்தை தொடங்க வலியுறுத்தி, பெரும்பாலான தண்ணீர் பணிகள் சிறு ஓடைகள் மூலம் செய்யப்பட வேண்டும். இந்த இயக்கத்தை எளிமையாகவும் ஏகபோக

*இந்தியாவின் வாட்டர்மேன் ராஜேந்திர சிங் மற்றும் நேஷனல் வாட்டர் மிஷன் இயக்குனர் அர்ச்சனா வர்மா.*



ஹேமந்த் குமார்

# நம் பயிர்களை மழையுடன் ஒருங்கிணைக்கவும்

*இந்தியா எதிர்கொள்ளும் ஒரு பெரிய பிரச்சனையான அதிகரித்து வரும் தண்ணீர் பற்றாக்குறைக்கு காரணம் இந்தியாவில் விவசாயத் திற்கு ஏராளமான தண்ணீரைப் பயன்படுத்துவது என "இந்தியாவின் வாட்டர்மேன்சு ராஜேந்திர சிங் கூறினார். 80 சதவீத நீர் விவசாயத் திற்குப் பயன்படுத்தப்படும்போது, உங்கள் விவசாயம் உங்கள் தொழிலாக மாறும்போது, உங்கள் விவசாயத்திற்கு மட்டுமே அதிக அளவு தண்ணீரைச் செலவிடுவீர்கள்.*

*இந்தியா பல புவி-சுற்றுச்சூழல் காலநிலை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, நமது நீரியல் பன்முகத்தன்மை மதிக்கப்பட்டு, நமது பயிர் முறை நமது மழை பாங்குடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று கடந்த 15 ஆண்டுகளாக நான் நம் அரசாங்கத்திடம் கூறி வருகிறேன். இந்தியா தனது விவசாய முறையை மழை பாங்குடன் ஒருங்கிணைக்கும் போது, நாம் இப்போது விவசாயத்தில் பயன்படுத்தும்*



வார்த்தைகள் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார். இந்த இன்ஸ்டிடியூட் பரவலாக்கப்பட்ட நீர் பாதுகாப்பு, மேலும் திறமையான மற்றும் சிந்தனையுடன் நீரைப் பயன்படுத்துவதைத் தூண்டினால், "உலக வறட்சி மற்றும் வெள்ள ஆணையத்தின் சமீபத்தில் நியமிக்கப்பட்ட தலைவராக, 10 வருட காலத்திற்கு, உலக ஆணையம் உங்களை ஆதரிப்பதை உறுதி செய்வேன்," என்றார்.

அவர் தனது உரையை முடித்ததும், PRIP மேத்தா, "நாங்கள் 10,000 நீர்நிலைகள் மற்றும் நீர் புத்துயிர் திட்டங்களைச் செய்ய திட்டமிட்டுள்ளோம், மேலும் அனைத்துப் பணிகளும் சமூகப் பங்கேற்பின் மூலம் மட்டுமே செய்யப்படும் என்று உறுதியளித்தார்.

நீர் அமர்வில் உரையாற்றிய நேஷனல் வாட்டர் மிஷன் இயக்குனர் அர்ச்சனா வர்மா,



**இடமிருந்து:** PDG *ரஞ்சன் டிங்ரா, ராஜேந்திர சிங் மற்றும்* RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி.*

*தண்ணீரில் 40 சதவீதத்தை சேமிக்க முடியும் என்று அவர் கூறினார்.*

*இந்த வேலையை யார் செய்வார்கள் என்று சந்தேகம் கொண்ட ஒரு குறிப்பை எழுப்பி, யாரும் இல்லை, ஏனென்றால் இந்த வேலையில் பணமும் இல்லை, ஒப்பந்தங்களும் இல்லை; அரசாங்கங்கள் பெரிய பணம் சம்பந்தப்படாத வேலைகளை மேற்கொள்வதில்லை! என்றார். ரோட்டரி போன்ற வலுவான மற்றும் செல்வாக்குமிக்க அமைப்புகள் அழுத்தம் கொடுக்கும் போதுதான் அரசாங்கங்கள் செவிசாய்க்கும்.*

*நாட்டில் நல்லதைச் செய்ய ரோட்டேரியன்கள் குரல் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்திய சிங், இது பேச வேண்டிய நேரம்; இந்தியாவின் அழிந்து வரும் நிலத்தடி நீர்நிலைகள் நீங்கள் பேச வேண்டும் என்று கோருகின்றன என்றார்.*

*கடந்த எட்டு ஆண்டுகளில் 127 நாடுகளுக்குச் சென்று, தண்ணீருடன் தொடர்புடைய பல்வேறு காரணங்களால் மக்கள் எவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர் என்பதைப் பார்த்ததாக அவர் கூறினார். இன்று உலகில் எத்தனையோ துயரங்கள் உள்ளன. வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாக மக்கள் பெரிய அளவில் இடப்பெயர்ச்சி செய்யும் நிலை உள்ளது. "மக்கள் தங்களை வரவேற்காத பிற நாடுகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இத்தகைய இடப்பெயர்ச்சியால் ஆப்பிரிக்கர்கள் ஐரோப்பாவுக்குச் செல்லும்போது, ஐரோப்பியர்கள் அவர்களை காலநிலை அகதிகள் என்று அழைக்கிறார்கள்.*

*எனவே பதட்டங்கள் அதிகரிக்கும்; முந்தைய இரண்டு உலகப் போர்கள் செங்குத்தாக இருந்தன, ஆனால் மூன்றாம் உலகப் போர், தண்ணீருக்காக போராடப்படும், இது செங்குத்தாக இருக்காது, ஆனால் ஒரு கிடைமட்டமாக இருக்கும் மற்றும் எல்லா இடங்களிலும் சண்டையிடப்படும்; இந்த மூன்றாம் உலகப் போரில் இருந்து யாரும் தப்பிக்க முடியாது. என மகசேசே விருது பெற்ற அவர் எச்சரித்தார்.*



நிலையான சுற்றுச்சூழல் அமைப்பிற்காக தண்ணீரை சேமிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். அவர் தயார் செய்த பேச்சை தூக்கி எறிந்துவிட்டு, அதீதமாகச் சென்று, தலைப்பு தண்ணீராக இருக்கும் போது, வார்த்தைகள் "இதயத்திலிருந்து வர வேண்டும்" என்று கூறினார்.

குடிமக்கள் அனைவரும் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு வலியுறுத்தினார். தண்ணீர் இயற்கையான பொருளாக இருப்பதால், அதை குழிகளில் கருத்தரிக்கவோ சிந்திக்கவோ முடியாது. தண்ணீர் உள்ள குழிகளை உடைப்பது மட்டுமே எனது பணி. என்னைப் பொறுத்தவரை மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர், குடிநீர் என்ற வேறுபாடு எதுவும் இல்லை. தண்ணீர் தண்ணீர் தான், ஆனால் கொள்கை அமலாக்க நோக்கங்களுக்காக நாம் அதை பிரித்துள்ளோம், அங்கு தான் பிரச்சினை இருப்பதாக நான் உணர்கிறேன், ஏனென்றால் மனிதர்களைப் போன்று நீராலும் குழிகளில் இருக்க முடியாது.

நீர் இயக்கத்தின் இயக்குநராக அவரது நோக்கம், "குழிகளில் உள்ள செங்குத்தான தன்மையை உடைப்பது" என்பதாகும், அதற்காக, ஜனவரி 5 மற்றும் 6ம் தேதிகளில், போபாலில் நீர்வளங்களுக்கான மாநில அமைச்சர்களின் முதல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நீர் இயக்கத்தின் முக்கிய நோக்கங்களான நீர் நிர்வாகம், உள்கட்டமைப்பு, பாதுகாப்பு, சமூகப் பங்கேற்பு போன்ற தலைப்புகளில் இங்கு விவாதம் நடைபெறும். பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடிய நீர் தரவுகளை ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் விவாதிப்பார்கள்.

அவரின் மற்றொரு கனவு நீர் பாதுகாப்பு மற்றும் அங்கே தான் குடிமக்களான உங்களின் பங்கு இருக்கிறது. PDG ரஞ்சன் டிங்ரா தலைமையிலான ரோட்டரி இந்தியா நீர் பாதுகாப்பு அறக்கட்டளையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான இறுதி கட்டத்தில் உள்ளோம்.

அமர்வில் உரையாற்றிய PDG டிங்ரா மறைந்த PRID குப்தாவுக்கு அஞ்சலி செலுத்தினார், மேலும்

## ரோட்டரியை பற்றி உரக்க பேசுங்கள்

*நீர் ஆர்வலர் ராஜேந்திர சிங் பார்வையாளர்களிடம் சில கடினமான கேள்விகளை எழுப்பினார். நிலத்தடி நீர்நிலைகளில் 72 சதவீதம் நீர் எடுக்கப்பட்ட ஒரு நாடு எப்படி உயிர் வாழும்? அப்படிப்பட்ட நாட்டு மக்களுக்கு நீங்கள் எப்படி ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய் மற்றும் தண்ணீர் போன்ற பொய்யான முழக்கங்களை கொடுக்க முடியும்? ஒவ்வொரு குழாயிலும் தண்ணீர் வர வேண்டுமெனில், முதலில் உங்கள் குளங்களுக்கு தண்ணீர் கொடுங்கள்.*

*PRIP மேத்தாவை நோக்கி அவர் கூறினார்: ரோட்டரி அர்த்தமுள்ள வேலையைச் செய்ய விரும்பினால், ரோட்டரியர்கள் பேச வேண்டும், அரசாங்கத்துடன் ஒரு உரையாடலை மேற்கொண்டு, சமூகத்தால் இயக்கப்படும், பரவலாக்கப்பட்ட நீர் மேலாண்மையின் முழுமையான தேவை குறித்து நம்ப வைக்க வேண்டும், இது ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தண்ணீர் திட்டங்கள் விடுவிக்கப் பட்டால் மட்டுமே செயல்படும்.*

*ஒப்பந்தக்காரர்கள் இல்லாத நீர் மேலாண்மைக்கு ஒரு வெற்றிகரமான உதாரணத்தை அளித்த சிங், தேவேந்திர ஃபட்னாவிஸ் மகாராஷ்டிராவின் முதலமைச்சரான போது (அது பெரும் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் மாநிலம்) “அவர் என்னை அழைத்து, “இப்போது நான் முதல்வராகிவிட்டேன், சொல்லுங்கள். மகாராஷ்டிராவின் தண்ணீர் பிரச்சனைகளுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றார். எனவே நான் அவரிடம், “முதலில் பெரிய அணைகள்/நீர்நிலைகள் கட்டுவதை நிறுத்திவிட்டு ஜல் யுக்தா சிவார்ஸ்களை அமைக்க வேண்டும்” என்று அவரிடம் கூறினேன். அவர் என்னிடம் வழிகாட்டுதல்களையும் அடிப்படை விதிகளையும் வகுக்கும்படி கேட்டுக் கொண்டார். இந்த முறை வேலையை ஒப்பந்தக்காரர்கள் செய்யாமல், சமூகம் செய்தால் நான் அதைச் செய்வேன் என்ற என் நிபந்தனையை கூறினேன்.*

*ஒப்பந்தக்காரர்கள் மீதான அவரது ஆட்சேபனை என்னவென்றால், நீர் திட்டங்களைச் செய்யும் போது, அவர்களின் ஒரே நோக்கம் லாபம் மட்டுமே, ஆனால் சமூகம் ஈடுபடும் போது, அனைவருக்கும் தண்ணீர் கிடைப்பதைப் பற்றி கவலைப்படுவார்கள். நிச்சயமாக, சமூகத்திலும் ஊழல்வாதிகள் உள்ளனர், இருப்பினும் அத்தகைய வேலையைச் செய்யும்போது அவர்கள் பொது நன்மையைப் பற்றி சிந்திப்பார்கள்.*

*ஃபட்னாவிஸ் அவரது ஆலோசனையைப் பின்பற்றி ஜல் யுக்தி சிவார்ஸ்க்கு முதல் ஆண்டில் ரூ.300 கோடியும், அடுத்த ஆண்டு ரூ.700 கோடியும் ஒதுக்கினார். ஆனால், திடீரென ரூ.3 லட்சத்துக்கும் மேலான அனைத்துப் பணிகளையும் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட, அதில் ஊழல் ஏற்பட்டு, பணிகள் மூடப்பட்டன.*

*ஆனால், ரோட்டரி நீர் பாதுகாப்பு அல்லது பெருக்குதல் பணிகளை மேற்கொள்ளும்போது, அது உள்ளூர் சமூகத்தை ஈடுபடுத்தும் என்பதை நான் அறிவேன். ராஜஸ்தானில் உள்ள ஷிகாரில் PDG ரஞ்சன் டிங்ரா என்ன செய்தார் என்பதை நான் அறிவேன், சுஷில் குப்தா உயிருடன் இருந்தபோது, அவர் தண்ணீர் தொடர்பான அனைத்து வேலைகளையும் சமூகத்தால் செய்து வந்தார். சமூகம் அத்தகைய வேலையை தன் கையில் எடுத்து செய்யும்போது, ஊழல் பின்னால் தள்ளப்படும். என சிங் மேலும் கூறினார்.*

நீர் பாதுகாப்பு தொடர்பான அனைத்து விஷயங்களிலும் அவர் கொண்டிருந்த ஆர்வத் தையும், டெல்லியில் அவர் ஏற்பாடு செய்திருந்த சர்வ தேச மாநாட்டையும், அதில் அப்போதைய ஜனாதிபதி APJ அப்துல்கலாம் பங்கேற்றதையும் நினைவு கூர்ந்தார். குப்தா ரோட்டரி இந்தியா நீர் பாதுகாப்பு அறக்கட்டளையை நிறுவினார், அதன் பின்னர் 500க்கும் மேற்பட்ட தடுப்பு அணைகள் மற்றும் பிற நீர்நிலை கட்டமைப்புகளை உ.பி., ஹரியானா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள கிராம மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக அமைத்துள்ளார். நீர் விழிப் புணர்வு, பாதுகாப்பு, திறமையான பயன்பாடு மற்றும் மழை நீர் சேகரிப்பு ஆகியவற்றிற்கான விரிவான மற்றும் முழுமையான திட்டத்திற்கு அவர் தான் முக்கிய காரணம், இது இப்போது PRIP மேத்தா தலைமையில் உள்ளது.

இப்போது நீர்நிலைகளைப் பாதுகாத்தல் மற்றும் புத்துயிர் பெறுதல் ஆகியவற்றில் இன்னும் பெரிய மற்றும் தைரியமான இலக்குகள் குப்தாவின் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்ல காத்துக்கொண்டிருக்கின்றன. “அவர் தண்ணீருக்காக மிகவும் அர்ப்பணிப்புடன் இருந்தார், அவருடைய வாழ்க்கையின் கடைசி நாட்களில் கூட, நாங்கள் என்ன வேலை செய்கிறோம், எதிர்காலத்தில் என்ன செய்ய திட்டமிட்டுள்ளோம் என்பதைப் பற்றி விளக்கமளிக்கும்படி என்னிடம் கேட்டார்,” என டிங்ரா கூறினார்.

புகைப்படங்கள்:
ரஷீதா பகத்

# தில்லியில் பயிற்சி பெற்ற ரஷ்ய ரோட்டரி தலைவர்கள்

**ரோட்டரி செய்திக்குழு**

RID 2223ஐச் சேர்ந்த ரஷ்ய ரோட்டரி தலைவர்கள் DG அலெக்சாண்டர், DGE மரியா, DGN அலெக்ஸி மற்றும் அவர்களுடைய 5 பகுதி இயக்குநர்கள் தில்லியில் உள்ள ரோட்டரி இன்டர்நேஷனலின் தெற்கு ஆசிய அலுவலகத்தில் பயிற்சி பெற்றார்கள் என்றார் இந்தியாவைச் சேர்ந்த PRID மனோஜ் தேசாய்.

தில்லியில் PRID தேசாய், PRID மைக்கேல் அஹ்ல்பெர்க், (RID 2410), மற்றும் PDG பீனா தேசாய், இவர்களுக்குப் பயிற்சி யளித்தார்கள். இந்தியாவில் ரஷ்யர்களுக்குப் பயிற்சி அளிப்பதை RI ஊழியர் லௌரி மற்றும் ஃபரா ஆதரித்தார்கள்.

ராஜீவ் ரஞ்சன் தலைமையில், இந்தப் பயிற்சி நிகழ்ச்சியை வெற்றிகரமாக, நினைவில் நிற்பதாக ஆக்குவதற்குக் கடினமாக உழைத்த தில்லி RISAO ஊழியர்களுக்கு தேசாய் நன்றி தெரிவித்தார். இந்தப் பயிற்சி நவம்பர் 30 முதல் டிசம்பர் 2 வரை நடத்தப்பட்டது. “நாங்கள் அவர்களை ஆக்ரா-வில் உள்ள தாஜ் மகாலைப் பார்க்க அழைத்துச்சென்றோம் அவர்கள் அதைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார்கள்” என்று அவர் தொடர்ந்து சொன்னார்.



PRIDs *மனோஜ் தேசாய் (வலதிலிருந்து 4வது) மிக்கேல் ஆல்பர்க் (வலது) ரஷ்ய ரோட்டரியினருடன் ஆக்ரா தாஜ்மகால் அருகே.*

இந்தப் பயணத்தின் போது ரஷ்ய ரோட்டரி தலைவர்கள் இந்திய ரோட்டரி சமூகத்தில் குறிப்பிடக் கூடிய தாக்கத்தை எப்படி உண்டாக்குகிறது என்பதைக் கற்றுக்கொண்டார்கள்.■



PRIDs *தேசாய், ஆல்பர்க் மற்றும்* PDG *பீனா தேசாய் (வலது) ரஷ்ய ரோட்டரியினருடன்.*

# எப்போதும் தயாராக இருங்கள்: ஜோன்ஸ்

**ஜெய்ஶ்ரீ**

நீங்கள் எல்லோரும் உங்கள் பதவிக் காலத்தை மறக்கமுடியாததாக மாற்றும் வகையில் பல யோசனைகள் மற்றும் திட்டங்களுடன் இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன் என்று அபுதாபியில் நடைபெற்ற GETS/GNTS கருத்தரங்கில் DGEs, DGNsகளிடையே உரையாற்றுகையில் ஜெனிஃபர் ஜோன்ஸ் கூறினார். உங்கள் வேலையை சிறப்பாகச் செய்ய முடியும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், உங்களுடன் பணிபுரியக் கூடியவர்களை தயார்படுத்தி, வளர்த்து, வேலை செய்வதற்கான ஈடுபாட்டையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தாவிட்டால் செலவிடாவிட்டால் நீங்கள் உங்கள் முயற்சியில் வெற்றி பெற முடியாது என்று குறிப்பிட்ட அவர், நோய் வாய்ப்பட்டிருந்த தன் சங்கத்தின் உறுப்பினரை பார்த்து விட்டு வந்த பின்னர் அது எப்படி இருவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது என்பதை தொடர்பு படுத்தி அவர் பேசி னார். சமீபத்தில் எங்கள் சங்கத்தின் கூட்டத்தில் பங்கேற்ற போது, சங்க உறுப்பினர் ஒருவர பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்தேன். உடனே, நாம் எல்லோரும் அவரைச் சென்று பார்க்க வேண்டும் என்று யோசனை கூறினேன். ஆனால், சிலர், நீண்டதூரம் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும், மேலும் போக்குவரத்து நெரிசல் இருக்கும் என்று கூறினர். வேறு சிலர், அந்த பெண்மணியை மெய்நிகர் முறையில் தொடர்புகொண்டு பேசலாம் என்று கருத்துத் தெரிவித்தனர். நான் அந்த பெண்மணியை சந்தித்தேன். அது எங்கள் இருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. சந்திப்பின் முடிவில் அவளது முகத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் இருந்ததைக் காண முடிந்தது.



RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்

உள்வரும் மாவட்டத் தலைவர்களுக்கு தமது செய்தியை வலியுறுத்தும் வகையில் பேசிய ரோட்டரி தலைவர் ஜெனிஃபர், உங்களுடன் இருக்கும் உறுப்பினர்கள் மீது அக்கறை காட்டுங்கள். அவர்களிடம் கூடுதல் அக்கறை செலுத்துங்கள். உங்களுக்காக நான் இருக்கிறேன் என்பதை அவர்கள் மனதில் பதியவையுங்கள். அப்போது தான் அவர்கள் நீங்கள் இருக்கும்வரை உடன் இருப்பார்கள். நாம் எல்லோரும் ரோட்டரியில் அரசியல் இல்லை என்று சொல்கிறோம். ஆனால், பல்வேறு குற்றச்சாட்டுகளும் புகார்களும் இருப்பதை நாம் காண்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் சிறந்தவராக இருக்க வேண்டும். ரோட்டரிக்கு நற்பெயர் கிடைக்கும் வகையில் செயல்பட வேண்டும். இது நம்ம ரோட்டரி என்பதால், என்னுடைய ஆண்டு என்று பேசுவதை கைவிடுங்கள்.

களைகளுக்கு தண்ணீர் விடவேண்டாம் என்று ஜோன்ஸ் அறிவுரை கூறினார். உங்களுக்கு நீண்ட மின்னஞ்சல் கடிதம் வரும். அவற்றில் நீங்கள் செய்யும் செயல்பாடுகளைக் குறைகூறி விமர் சித்திருப்பார்கள். அதில் கவனம் செலுத்தாமல் உங்களுடன் சேர்ந்து வளர விரும்புபவர்களிடம் நேரத்தை செலவிடுங்கள். இப்படிச் செய்தால் உங்கள் பதவிக்காலத்தின் முடிவில் நீங்கள் ஒரு பரிணாம வளர்ச்சி அடைந்த நபராக இருப்பீர்கள். ஐந்து மாதங்களுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது நான் வித்தியாசமான நபராக இருப்பது எனக்குத் தெரியும்.

தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் அமெரிக்கா விலிருந்து வந்து கருத்தரங்கில் கலந்துகொண்ட RI இயக்குநர் ட்ரூ கெஸ்லர் பற்றி ஜெனிஃபர் கூறுகையில், உங்கள் மாவட்டங்களில் நிகழ்ச்சிகளைத் திட்டமிடும் போது அவற்றுக்கு உங்கள் குடும்பத்தினரை அழைத்துச் செல்லுங்கள் என்றார். இதன் மூலம் அடுத்த தலைமுறை தலைவர்களை நாம் பெறமுடியும்.

கடந்த காலத் தலைவர்களின் சேவைகளை அங்கீகரித்து அதை அடிக்கடி நினைவுகூருமாறு கருத் தரங்கில் பங்கேற்ற பிரதிநிதிகளிடம் ஜோன்ஸ் வலியுறுத்தினார். இளம் தலைமுறையினரை உள்ளே இழுப்பதில் நாம் கவனம் செலுத்தி வரும் அதே



*இடமிருந்து: PRID கமல் சங்வி, சோனல், RI தலைவர் ஜோன்ஸ், DGN நிக் க்ரயாசிச், அமிதா, RI இயக்குனர்கள் மகேஷ் கோட்பாகி மற்றும் A S வெங்கடேஷ், வினிதா, உஸ்மா, RI இயக்குனர் ஃபயிஸ் கித்வாய், RIDEs அனிருதா ராய்சௌத்ரி மற்றும் T N சுப்ரமணியன் ஆகியோர் அபுதாபியில் நடைபெற்ற GETS/GNTS நிகழ்வில்.*

நேரத்தில் நாம் கடந்த காலங்களை மறந்துவிடக்கூடாது. இன்றைக்கு இந்த அறையில் நாம் இருப்பதற்கு வழியேற்படுத்தியவர்களை நாம் கொண்டாடி பெருமைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தொழில் முறையில் சிறந்த மக்கள் தொடர்பாளராகவும், செய்தித் தொடர்பாளராகவும் இருந்த ஜெனிஃபர் பேசுகையில், ஒரு நல்ல புகைப்படம் ரோட்டரி மீதான தாக்கத்தை எவ்வாறு ஏற்படுத்தும் என்று உள்வரும் மாவட்ட தலைவர்களுக்கு விளக்கினார். நாம் செயல் வீரர்கள். நாம் யார் என்பதையும், நாம் செய்யும் வேலை என்ன என்பதையும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். உங்கள் மாவட்டத்தில் சேவைத் திட்டங்களைத் தொடங்கி வைக்கும் போது பயனாளிகள் மீது உங்கள் கேமராவின் லென்ஸ் இருக்கட்டும். அவர்கள் முகத்தில் ஏற்படும் மகிழ்ச்சியை படம்பிடியுங்கள். நீங்கள் பயிற்சி அமர்வில் இருக்கும் போது உரையாடலில் இருக்கும் ரோட்டேரியன்களின் புகைப்படங்களை எடுக்கவும் என்றார்.

RI துணைத் தலைவர் நிக்கி ஸ்காட், பொதுச் செயலர் ஜான் ஹூகோ மற்றும் RIDs மகேஷ் கோட்பாகி, A S வெங்கடேஷ், முஹமது ஃபயஸ் கித்வாய், விக்கி புலிட்ஸ் மற்றும் கெஸ்லர் ஆகியோரின் வருகையை அங்கீகரித்த ஜோன்ஸ், ஏறக்குறைய RI வாரிய உறுப்பினர்களில் 90 சதவீதம் பேர் இங்கு குவிந்துள்ளனர். வாரியத்தின் கூட்டத்தை இங்கேயே நடத்திவிடலாம் என்று நான் நினைக்கிறேன் என்று நகைச் சுவையாகக் குறிப்பிட்டார்.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கம் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற விசாகா விஸ்டா மண்டல கழக கூட்டத்துக்கு முன்னோடியாக அமைந்திருந்தது. இதை RI இயக்குநர்கள் கோட்பாகி மற்றும் கித்வாய் இருவரும் இணைந்து 4,5,6 மற்றும் 7வது மண்டல DGE/DGNகளுக்காகவும் (இந்தியா, இலங்கை மற்றும் நேபாளம்) மற்றும் 1B, 9 மற்றும் 10 (பாகிஸ்தான், இந்தோனேசியா, வங்கதேசம், பிலிப்பின்ஸ், தைவான் மற்றும் ஹாங்காங்) DGE/DGNகளுக்காகவும் கூட்டியிருந்தனர். PRID கமல் சங்வி கருத்தரங்கின் பொது பயிற்சியாளராக இருந்தார்.

நீங்கள் தொடர்பில் இருந்து திறந்த மனதுடன் கற்றுக்கொண்டால் அற்புதங்களை உருவாக்க முடியும். உங்களை திறம்பட வழிநடத்தவும், இலக்குகளை நிர்ணயித்து வென்று நீங்கள் மகிழ்ச்சியடையவுமே உங்களை இந்த பாதையில் கொண்டு வந்துள்ளோம் என்றார் கோட்பாகி. ரோட்டரி தலைவர், தலைமைப் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளவர், ரோட்டரி பொதுச் செயலாளர் மற்றும் வாரிய இயக்குநர்கள் இங்கு உங்களுக்கு வழிகாட்டி, ஆதரவு தர இருப்பதால் நீங்கள் தைரியமாக களத்தில் இறங்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் 1B, 9 மற்றும் 10-வது மண்டலங்களின் மாவட்டத் தலைவர்களுக்கு முதன் முறையாக நேரிடையாக கருத்தரங்கு நடைபெறுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கித்வாய் வலியுறுத்தினார். மரக்கன்றுகளை நடுவதைத் தாண்டி நாம் செல்ல வேண்டும். பருவநிலை மாற்றத்தின் விளைவாக சந்தித்து வரும் வளரும் நாடுகளுக்கு ஆதரவு அளிக்க கொள்கை வகுப்பாளர்களிடம் செல்வாக்கை செலுத்த நாம் குரல் கொடுக்க வேண்டும். உலகில் உள்ள 1.4 மில்லியன் ரோட்டேரியன்களிடம் மக்கள் மீது செல்வாக்கு செலுத்தும் வல்லமை உள்ளது என்று நான் நம்புகிறேன். எனவே உங்கள் சக்தியை காட்டுங்கள்.

பொது பயிற்சியாளரான PRID கமல் சங்வி பேசுகையில், மற்றவர்களால் செய்ய முடியாததை நாம் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை பார்க்க வேண்டும் என்று மாநாட்டு பிரதிநிதிகளிடம் வலியுறுத்தினார். உலகை சமநிலைப்படுத்துவது என்பது செங்குத்தான மலையில் ஏறுவதைப் போன்றது. ஆனால், அதைச் செய்யும் ஆற்றல் உங்களிடம் உள்ளது. நீங்கள் தான் உங்கள் ரோட்டரி மாவட்டத்தின் செயற்பாட்டாளர்கள் என்பதால் முழு மூச்சில் களத்தில் இறங்குங்கள் என்றார்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

# விசாகா விஸ்டா — சிறப்பு துளிகள்

**ரஷீதா பகத்**

**ரூ.45 லட்சத்துக்கு விலைபோன கிரிக்கெட் பேட்!**

ஸன்னி என்று செல்லமாக அழைக்கப் படும் சுனீல் கவாஸ்கர், தனது பேச்சை முடித்துக்கொண்டவுடன், அவரிடம் பேட் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. ரோட்டரி இயக்குநர் மகேஷ் கோட்பாகி உள்ளிட்ட சில ரோட்டேரியன்கள் டென்னிஸ் பந்து வீசினர். அதை லிட்டில் மாஸ்டர் பார்வையாளர் பக்கம் மெதுவாக தட்டிவிட்டார்.

கவாஸ்கர் பேட்டை கையில் எடுத்ததும் பார்வையாளர்கள் உற்சாகத்தில் குதூகலித்தனர். ரோட்டரி தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் தெரிவித்த யோசனையின் பேரில், PRIP சேகர் மேத்தா கிரிக்கெட் பேட்டில் கையெழுத்திடு மாறு கவாஸ்கரை கேட்டுக் கொண்டார். பின்னர் அந்த பேட் ஏலம் விடப்பட்டது. நிபந்தனை என்னவென்றால் ஒவ்வொரு ஏலமும் இதயக் குறைபாடுள்ள குழந்தைகளின் அறுவைச் சிகிச்சைக்கு நிதியுதவி செய்யப்படும் எண்ணிக்கையின் அடிப்படையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும் ரூ.1.3 லட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டது. ஐந்து அறுவைச் சிகிச்சைகள் என்ற அடிப்படையில் ஏலம் தொடங்கியது. RID 3110ன் DG பவன் அகர்வால் 35 அறுவைச் சிகிச்சைக்கு (ரூ.45.5 லட்சம்) ஆதரவு தருவதாக உறுதி அளித்து பேட்டை வீட்டுக்கு எடுத்துச் சென்றார்.

விரிவான அறிமுகம், பாராட்டுப் பத்திரம், வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் மூத்த ரோட்டரி தலைவர்கள் அளித்த நினைவுப் பரிசுகளால் பெரு மகிழ்ச்சி அடைந்தார் கவாஸ்கர். ஒரு நாள்தானே தங்கப் போகிறோம் என்று நான் சிறிய பையை எடுத்துக் கொண்டு வந்தேன். ஆனால், நீங்கள் எனக்கு பல பரிசுகளை அளித்துவிட்டீர்கள். நான் இன்னும் கொஞ்சம் பெரிய பையை கொண்டுவந்திருக்கலாம் போல் இருக்கிறது என்று நகைச்சுவை உணர்வுடன் கூறினார். இந்த பரிசு களைவிட நீங்கள் எனக்கு அளித்த வரவேற்பும், உபசரிப்பும், அன்பும் என்னை வெகுவாக கவர்ந்துவிட்டது.

இங்கு எனக்கு சிறந்த அறிமுகம் வழங்கப்பட்டது. பொதுவாக இந்தியாவில் நான் ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டால், நிகழ்ச்சி தொகுப்பாளர் அல்லது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் சுனீல் கவாஸ்கருக்கு அறிமுகம் தேவையில்லை என்று ஒரே வரியில் கூறிவிடுவார்கள் என்றார்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு**

விசாகா விஸ்டாவின் அமைப்பாளரும் ரோட்டரி இயக்குநருமான மகேஷ் கோட்பாகி, சமீபகாலமாக ரோட்டரி கவனம் செலுத்தி வரும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விஷயத்தில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இந்த மாநாட்டை திட்டமிட்டு செயல்படுத்தும்போது PDG கிஷோர் குமாரும் நானும் மற்றும் குழுவினரும் இந்த நிகழ்ச்சியை நடத்தும்போது



ரஷீதா பகத்

*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், PRIP சேகர் மேத்தா, சுனீல் கவாஸ்கர் மற்றும் RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி.*

சுற்றுச்சூழல் பாதிப்பு பிரச்னை வந்துவிடக்கூடாது. பிளாஸ்டிக் கழிவுகள் உருவாகிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தோம். பிளாஸ்டிக் பேனர்களையோ அல்லது பிளாஸ்டிக் கொடிகளையோ இங்கு நீங்கள் பார்த்திருக்க முடியாது. பேனர்கள் துணியிலும் பேட்ஜுகள் கார்டுபோர்டிலும் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் கழிவுகள் குறைவாகவே இருந்தன என்றார்.

எழுத்தறிவை ஊக்குவிக்கும் மராத்தான் நிகழ்ச்சியில் ஏறக்குறைய 1,000 பேர் பங்கேற்றனர். மராத்தான் ஓட்டம் நடைபெற்ற பகுதியில் சாலையில் கிடந்த குப்பைகள் உடனடியாக தன்னார்வ தொண்டர்கள் மற்றும் மாநகராட்சி துப்புரவாளர்களால் உடனடியாக அகற்றப்பட்டன. வழக்கமாக இதுபோன்ற நிகழ்ச்சி நடைபெறும் போது நிகழ்ச்சி பற்றிய குறிப்புகள் அச்சிடப் பட்டு விநியோகிக்கப்படும். பார்வையாளர்கள் அதை நிகழ்ச்சி முடிந்த பின்னர் அங்கேயே குப்பையாக போட்டுவிட்டு சென்று விடுவார்கள். அதனால் இந்த முறை நிகழ்ச்சி தொடர்பான விவரங்களை டிஜிட்டல் முறையில் வெளியிட்டிருந்தோம் என்றார் கோட்பாகி.

### வண்ண வண்ண மர வளையல்கள், கோலி-சோடா

விசாகப்பட்டினம் மாநாடு பிரதிநிதிகளுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் சரியான நேரத்தில் இசைநிகழ்ச்சிகளையும் வழங்கியது. சில சம்பவங்கள் மனதைத் தொட்டன. உதாரணமாக நிறுவனத்தின் தலைவர் PDG கிஷோர் குமாரின் மனைவி ஷோபா, அருகில் உள்ள எட்டிகொப்பகா கிராமத்திலிருந்து கைவினைக் கலைஞர்களால் அழகுற வடிவமைக்கப்பட்ட மர வளையல்களைப் பெறுவதில் அக்கறை எடுத்துக் கொண்டார். கண்காட்சியின் ஒரு ஓரத்தில் இந்த ஸ்டால் அமைந்திருந்தாலும் பெண் பிரதிநிதிகள் அங்கு சென்று ஆர்வத் துடன் வளையல்களை வாங்கினர். மேலும் சில வளையல்கள் விலைக்கு கிடைக்குமா? என்று எனது நண்பர் ஜெய்ஸ்ரீ உள்பட பலர் கேட்டது என் காதில் விழுந்தது. இல்லை மேடம். இது இலவசம். ஆனால், ஒருவருக்கு ஒன்று மட்டுமே என்று உறுதிபட பதில் கூறினர்.

இங்கு கோலி-சோடா கிடைத்தது மற்றொரு மனதிற்கு இனிய சம்பவமாகும். இதற்காக மாநாட்டு அமைப்பாளர் கோட்பாகிக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். பின்னர் அவர் ரோட்டரி செய்திக்குழுவிடம்,



*எட்டிகொப்பாக்கா கிராமத்திலிருந்து மர வளையல்கள்.*

நாங்கள் வளர்ந்து வரும் காலத்தில் கோலி-சோடா பிரபலமாக இருந்தது. நான் இங்கு ஒருமுறை வந்தபோது கோலி-சோடா விற்கப்படுவதை அறிந்தேன். பின்னர் எங்கள் குழுவினரிடம் இதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றேன். அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது, என்றார்.



ஜெய்ஸ்ரீ

RI *இயக்குனர் கோட்பாகி,* RI *இயக்குனர் ட்ரூ கெஸ்லரின் மகன்கள் ஜாக்சன் மற்றும் ப்ராண்டனுடன்.*

### இளம் பிரதிநிதிகள்

ரோட்டரி இயக்குநர் ட்ரூ கெஸ்லர் தமது மனைவி மற்றும் இரண்டு மகன்கள்- ஜாக்ஸன் மற்றும் பிராண்டன் இருவருடன் விசாகப்பட்டினம் மாநாட்டில் கலந்துகொண்டார். வெகு சீக்கிரத்திலேயே அவர்கள் இருவரும் மற்றவர்களின் கண்களை ஈர்த்தனர். மாநாட்டு அமர்வு முழுவதும் அமைதியாக இருந்த அந்த இருவரையும் எந்த மாநாட்டுப் பிரதிநிதியும் பார்க்காமல் இருந்திருக்க முடியாது. மாநாட்டு பிரிதிநிதிகளைவிட அவர்கள் தான் முழு அமர்விலும் பங்கேற்றார்கள் என்று சொல்லலாம். இயக்குநர் கோட்பாகி அவர்கள் இருவரையும் மேடைக்கு அழைத்து பெர்ராரி காரின் மாடலை பரிசாக வழங்கினார். இன்றைய இளைஞரின் கனவில் இருப்பது அந்த கார்தானே! ■

விளம்பரம்



**Prachi & Pawan Agarwal**
District Governor, RID 3110

# District 3110

## Approved Global Grants for Rotary 2022-23

It is heartening to note that 3 Global Grants have so far been approved by TRF in our district. The brief description of these Grants is as below :



**PDG Devender Kr. Agarwal**
ARRFC



**PDG Sharat Chandra**
DRFC

**RC Rudrapur**

Grant Title : **"To Treat Varicose Veins, Foot Ulcers, and Other Associated Diseases at a Charitable Hospital at Rudrapur".**

**Project Cost : US$ 38,500**

**RC Nainital**

Grant Title : **"To Provide Medical Equipment & Ambulance for a Charitable Hospital at Bhimtal, Uttarakhand".**

**Project Cost : US$ 38,131**

**RC Mathura Central**

Other Clubs : RC Kashipur, RC Bareilly Heights, RC Aligarh Central & RC Kanpur

Grant Title : **"Thermal Coagulation Equipment and Training for Pre-Cervical Cancer Treatment in 5 Hospitals in UP & Uttarakhand".**

**Project Cost : US$ 30,038**




प्रज्ञान RYLA

ROTARY YOUTH LEADERSHIP AWARDS - 2022-23

Host Club : Rotary Club of Mathura Central
6, 7 & 8 January 2023

Host Club : Rotary Club of Bareilly Central
11, 12 & 13 January 2023

Host Club : Rotary Club of Atulya Kanpur
6, 7 & 8 January 2023

Do follow us: @Rotary3110

# District 3110 in ACTION



Mobile Mammography Van



Health Check-up Camp



Cyber Crime Workshop


Children Day Celebration


Traffic Awareness - Slogan


Children Day Celebration



E Learning Kit Distribution


Anti Rabbies Vaccination


Food Items Distribution


Eye Check-up Camp


**Rtn. Raj Mehrotra**
*CDS (Admin)*

# வைசாக் மாநாட்டின் தருணங்கள்



*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் RIPN ஸ்டெஃபனி அர்ச்சிக். DGN நிக் க்ரயாசிச் மற்றும் TRF அறங்காவலர் ஆர்கே ஓஃப்ரான்க் அவர்களும் படத்தில் உள்ளனர்.*



*சோனல் சங்வி, PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷி.*



*RIDE அனிருதா ராய்சௌத்ரி, அவர் மனைவி ஷிப்ரா மற்றும் RIDE T N சுப்ரமணியன்.*



RI இயக்குனர்கள் மகேஷ் கோட்பாகி மற்றும் A S வெங்கடேஷ் அமிதா மற்றும் வினிதாவுடன். RI இயக்குனர் விக்கி புலிஸ் இடதில் அமர்ந்துள்ளார்.


RI இயக்குனர் ட்ரு கெஸ்லர், அவர் மனைவி விக்கி மற்றும் மகன்கள் ஜேக்சன் மற்றும் ப்ராண்டன்.


வினிதா வெங்கடேஷ் மற்றும் அமிதா கோட்பாகி.


ஆந்திர மாநிலத்தின் திம்சா என்னும் பழங்குடியினர் நடன கலை நிகழ்ச்சி.


**இடமிருந்து:** RID 3141 DG சந்திப் அகர்வல்லா, மாதவி, TRF அறங்காவலர் பாத் பாண்ட்யா, RID 3232 PDG S கிருஷ்ணசாமி மற்றும் அவர் மனைவி ஜனக்.


மாநாட்டின் தலைவர் PDG கிஷோர் குமார், RIPN ஸ்டெஃபனி அர்ச்சிக் மற்றும் ஷோபா கிஷோர் குமார்.




RI இயக்குனர் கோட்பாகி மற்றும் அமிதா ப்ரேசில் நாட்டு RRFC ஹிரோஷி ஷிமுட்டா மற்றும் Rtr லியோனார்டோ ஆகியோருடன்.



RID கோட்பாகி மற்றும் அமிதா PRID கமல் சங்வி மற்றும் சோனலுடன்.



RI இயக்குனர் கெஸ்லர், அமிதா, RID கோட்பாகி, TRF அறங்காவலர் ஆர்கே ஓஃப்ராங்க், DGN க்ரயாசிச், RI இயக்குனர் விக்கி புலிஸ், RI தலைவர் ஜோன்ஸ் மற்றும் RIPN ஸ்டெஃபனி அர்ச்சிக் ஆகியோருடன்.



RID கோட்பாகி, PRID P T பிரபாகர், RID விக்கி புலிஸ், அவர் கணவர் டிமோதி மற்றும் நனிளி பிரபாகர்.



RID கோட்பாகி, ஷோபா, அமிதா மற்றும் PDG கிஷோர் குமார்.



RID விக்கி புலிஸ் மற்றும் அமிதா.





**வலதிலிருந்து:** *வினிதா, அமிதா, PDG ராஜ்யலஷ்மி வட்லாமணி, ஷோபா கிஷோர் குமார் மற்றும் ஜீஜா வல்ஸ்ராஜ்.*





*சார்ஜன்ட் அட் ஆர்ம்ஸ் (இடமிருந்து): சுதிர் லடுரே, PDG ஷிரிஷ் ரயடே, டாக்கின் ஜமிந்தார், ரிஜ்வானா ஜமிந்தார், PDG அனிஷ் ஷா, DG ஜினேந்திர ஜெயின், அஞ்சனா மைத்ரா, PDG சிவநாராயண ராவ் மற்றும் நிதின் குடலே.*



*RI இயக்குனர் வெங்கடேஷ் மற்றும் சுனில் கவாஸ்கர். TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா இடப்புறம் உள்ளார்.*



*RID 3232 PDG J ஸ்ரீதர், அவர் மனைவி புனிதா, DRFC M அம்பலவாணன் RID 3232 விருதுகளுடன்.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் ஜெய்ஸ்ரீ

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# எழுத்தறிவை ஊக்குவிக்க மாரத்தான்!

**ரோட்டரி செய்திக்குழு**

சில மாதங்களுக்கு முன்பு மண்டல நிறுவனக் கூட்டத்தில் எழுத்தறிவை ஊக்குவிக்க மாரத்தான் ஓட்டம் நடத்தும் தமது கனவை ரோட்டரி இயக்குநர் மகேஷ் கோட்பாகி உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொண்டார். வழக்கமான திட்டங்களைத் தவிர அனைவரையும் ஒன்றுபடுத்தும் ஒரு பெரிய சேவைத் திட்டம், அதாவது பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றார். எனவே எழுத்தறிவு மற்றும் மகளிர் மேம்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 5 கி.மீ. அல்லது 10 கி.மீ. தொலைவு மாரத்தான் ஓட்டம் நடத்தலாம் என முடிவு செய்துதோம் என்றார் PDG G ஒளிவண்ணன். அவரின் இந்த யோசனை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்துக்கு அவரையே தலைமையேற்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதையடுத்து மண்டல நிறுவனத்தின் தலைவர் PDG கிஷோர் குமார், விசாகப்பட்டினத்தில் உள்ள பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்தார். RID 3212ன் DG V R முத்து இத்திட்டத்தின் பிரதான ஆதரவாளராக இருந்தார்.

இந்த மாரத்தான் நிகழ்ச்சியை நடத்த குறைந்தபட்சம் 5,000 பேராவது வேண்டும் என்று RID கோட்பாகி இலக்கு நிர்ணயித்திருந்தார். அதை எட்டுவதே எங்களுக்கு முதல் சவாலாக இருந்தது. இந்திய கடற்படை. கிழக்கு கடலோரக் காவல்படை, CISF மற்றும் ஆந்திர பல்கலைக்கழகம் மற்றும் கீதம் பல்கலைக்கழகத்திலிருந்து ஆட்களைத் திரட்டுவது என்கிற உத்தி, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் எழுத்தறிவு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்திற்கு உதவிகரமாக இருந்தது என்றார் அவர்.

நிகழ்ச்சிக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் பதிவு ஏமாற்றம் அளிக்கும் வகையில் இரட்டை இலக்கத்தில் இருந்தது. ஆனால், இது எங்கள் குழுவின் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் குறைக்கவில்லை. விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்யத் தொடங்கியதும் மெல்ல மெல்ல மொத்த எண்ணிக்கை 8,000-த்தை தொட்டது. அதாவது நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஒரு வாரம் முன்னரே ஏற்பாட்டாளர்கள் பதிவுகளை நிறுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அனைவரும் எழுத்தறிவு மாரத்தான் ஓட்ட நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிலையில், விசாகப்பட்டினத்தில் வானிலையில் மாற்றம் ஏற்பட்டது. எங்கும் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டன. முந்தைய நாள் மழை பெய்யத் தொடங்கியதால் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு பெரும் கவலை ஏற்பட்டது. டிசம்பர் 11ம் தேதி ஒளிவண்ணன் மற்றும் அவரது குழுவினர் வானம் மூடித்திறப்பதையும் காலை 4.45 மணி வரை மழை பெய்ததையும் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனாலும், மனம் தளராத குழுவினர், தங்கள் ஏற்பாடுகளைத் தொடர்ந்தனர் காலை 5.30 மணி அளவில் மழை நின்றது. ஆனாலும் லேசான தூறல் மழை பெய்தது.

ஆனால், என்ன மாயம். 20 நிமிடங்களுக்குப் பின்னர் சூரியன் பிரகாசிக்கத் தொடங்கியது. பங்கேற்பாளர்கள் பச்சை வண்ண டீ ஷர்ட்டுடன் உற்சாகத்துடன் நிகழ்ச்சியில் பங்கேற்க அணி திரண்டனர். விரைவிலேயே சுமார் 1,000 பேர் அங்கே கூடிவிட்டனர். மிஸோரம் ஆளுநர் K ஹரிபாபு, இந்திய கடலோரக் காவல்படை கூடுதல் இயக்குநர் ஜெனரல் பரமேஷ், PRIP சேகர் மேத்தா முன்னிலையில் RID மகேஷ் கோட்பாகி, எழுத்தறிவை ஊக்குவிக்கும் மாரத்தான் ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கிவைத்தார். மாநாட்டுத் தலைவர் கிஷோர் குமார்,




RI *இயக்குனர்கள் மகேஷ் கோட்பாகி மற்றும் ட்ரூ கெஸ்லர்.*




DG V R *முத்து, இந்திய கடலோர காவல்படை துணை இயக்குனர் சிவமணி பரமேஷ், மிஸோராம் ஆளுநர்* K *ஹரி பாபு,* PRIP *சேகர் மேத்தா,* RI *இயக்குனர் கோட்பாகி, அமிதா, நிகழ்ச்சித்தலைவர்* PDG G *ஒளிவன்னன், இன்ஸ்டிட்யூட் தலைவர் கிஷோர் குமார் ஆகியோர் மாரத்தான் நிகழ்ச்சியில்.*

கீதம் பல்கலைக்கழக துணைவேந்தர் கௌதம் ராவ் உள்ளிட்டோர் RI இயக்குநர் ட்ரூ கெஸ்லர் தலைமையில் நடந்த மாரத்தான் ஓட்டத்தை கண்டுகளித்தனர்.

இந்த நிகழ்ச்சியின் முடிவில் சாலையில் கிடந்த குப்பைகளை அகற்றிய தன்னார்வ தொண்டர்கள் மற்றும் நகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்த துடிப்பான அணியில் ரோட்டேரியன்கள் சுரேகா, பிரசாத் பட்நாயக், வெங்கடேஸ்வர கொண்டுபுடி, காப்டன் காளி பிரசாத், ஜீஜா வல்ஸராஜ், பிரமீளா ஜெயின், ராம்பாபு, ஜி.கே.மூர்த்தி, டி.வி.வர்மா, உஷா ரெட்டி, வர்மா ராஜு, ஜோஸ், ஜி.பி.ராஜு, அ.வேணுகோபால், சதீஷ், யு.எஸ்.சர்மா மற்றும் சுபோத் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.■

Rotary PEOPLE OF ACTION

# IFCR மினி உலகக் கோப்பையை வென்றது சென்னை அணி

நவம்பர் 14 முதல் 18 வரை டாக்காவின் நடைபெற்ற IFCR (கிரிக்கெட்டை விரும்பும் ரோட்டரியன்களுடைய பன்னாட்டுத் தோழமை) மினி உலகக் கோப்பைப் போட்டித் தொடரை விஸ்வநாத் கிருஷ்ணன் தலைமையிலான IFCR சென்னை அணி வென்றது.

நேபாளம், இலங்கை, போட்டியை நடத்திய பங்களாதேஷ், இந்தியாவிலிருந்து 8 போட்டியிடும் அணிகள், 4 கொண்டாட்ட அணிகளைக் கொண்ட இந்தப் போட்டித் தொடரின் போது எல்லா அணிகளுக்கிடையிலும் களத்திலும் அதற்கு வெளியிலும் நல்ல நட்பைக் காண இயன்றது. கிருஷ்ணன் தலைமையில் விளையாடிய சென்னை அணி தங்களுடைய லீக் ஆட்டங்கள் அனைத்தையும் இறுதிப் போட்டியையும் வென்றது. கடந்த பல ஆண்டுகளாக, IFCR சென்னை தலைவர்கள் ஒவ்வொருவரும் அணி வீரர்களுக்கிடையில் தோழமையை வளர்த்துள்ளார்கள். இப்போதைய தலைவர் ஜெகன்னாதன் மறைமலை என அழைக்கப்படும் ஜெகனும் அவருடைய குழுவும் தோழமையைப் புதிய உயரங்களுக்குக் கொண்டு சென்றுள்ளார்கள். “மினி உலகக் கோப்பையின் போது மட்டை வீச்சிலும் பந்து வீச்சிலும் தொடர்ந்து நன்கு விளையாடிய கௌரவ் ஜெயின் தொடர் நாயகர் ஆனார்” என்றார் ஜகன். கிரிக்கெட் அணிகளில் 11 வீரர்கள் தான் இருப்பார்கள். IFCR சென்னை 20 வீரர்களுடன் டாக்கா-வுக்குச் சென்றது. வீரர்களில் ஒருவரான ராம் N ராமமூர்த்தி, வெற்றி பெற்ற அணிக்குச் சென்னை விமான நிலையத்தில் சிறந்த வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருந்தார். TNCA சங்கத்தில் நடைபெற்ற IFCRன் நிலைக்குழு அவை கூட்டத்தில் DG நந்தகுமார், RID 3232, சென்னை அணியின் தலைவர் ஜெகனைப் பெருமைப்படுத்தினார்.■



# வாழ்க்கையை மாற்றும் சக்தி ரோட்டரியிடம் உள்ளது

**ஜெய்ஸ்ரீ**

ஒருவரது வாழ்வை மாற்றியமைக்கும் சக்தி நமக்கு உள்ளது என்பது மிகப்பெரிய அருட்கொடையாகும். நாம் ஒருங்கிணைந்து ஒரே மனத்துடன் செயல்பட்டால் லட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்க முடியும் என்றார் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற ரோட்டரி மண்டல மாநாட்டில் பேசிய PRIP சேகர் மேத்தா.

இனி பென்சில்கள், ரப்பர்கள் மற்றும் புத்தகப் பைகள் விநியோகம் கூடாது. பள்ளிகளை உருவாக்கவும், பள்ளிகளை சீரமைக்கவும் அரசுடன் இணைந்து செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. அடுத்த முறை அரசு, தனது கொள்கை திட்டங்களை- அதாவது குடிநீர், எழுத்தறிவு அல்லது சுகாதாரத் திட்டங்களாக இருந்தாலும் சரி- அதை செயல்படுத்தும் முன் கருத்து கேட்க ரோட்டரியை அழைக்க வேண்டும் என்றார் அவர்.

ஏழை மாணவிகளுக்கு 1,000 சைக்கிள், பெண்களுக்கு 1,000 தையல் இயந்திரங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு 1,000 சக்கர நாற்காலிகள், பழங்குடியின பெண்களுக்கு 1,000 புகையில்லா அடுப்புகள் வழங்கும் "ஆபரேஷன் இமாஜின்" நிகழ்வு பற்றி கருத்துத் தெரிவிக்கையில், சேவைதான் மண்டல மாநாட்டின் முக்கிய நோக்கம் என்பதை புரிந்துகொண்டதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது தொடர்பான ஏற்பாடுகளை சிறப்பாக செய்ததற்காக மாநாட்டு அமைப்பாளர் மகேஷ் கோட்பாகி மற்றும் தலைவர் கிஷோர் குமார் இருவரையும் பாராட்டுகிறேன் என்றார் மேத்தா.

கடந்த ஆண்டு தலைவர் பதவிக்காலத்தை பூர்த்தி செய்த நிலையில், ரோட்டேரியன்கள் நிறைந்த பெரிய கூட்டத்தில் முதன் முறையாக உரையாற்றுவதாக மேத்தா குறிப்பிட்டார். உங்கள் மாவட்டத்தில் பெரிய சேவை திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த உதவியதற்கு நன்றி. நீங்களும் உங்கள் மாவட்டத் தலைவர்களும் கடுமையாக உழைத்ததால்தான் ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. தற்போதைய தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் RIPE கோர்டன் மெக்னல்லி இருவரும் தங்கள் பதவிக்காலத்தில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

46 வாரங்களில் நானும் ராஷியும் 42 நாடுகளுக்கு பயணித்துள்ளோம். உலகம் முழுவதும் ரோட்டரியின் சேவைத் திட்டங்கள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி வருவது திருப்தி அளிக்கிறது. சானிடரி பேடுகள் தயாரிப்பது, பெண்களுக்கு தற்காப்புக்கலை பயிற்சி அளிப்பது என அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

ரோட்டரி தலைவர் என்ற முறையில் சேகர் மேத்தா, கடந்த ஆண்டில் 30 நாடுகளின் தலைவர்களைச் சந்தித்தார். இவை அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்வதற்காக இல்லை. ரோட்டரி சார்பில் பல்வேறு நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையை மாற்றும் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டும் என்பதில்

*RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி PRIP சேகர் மேத்தாவிற்கு நினைவு பரிசு வழங்குகிறார்.*






PDG *கிஷோர் குமார்*, RI *இயக்குனர் கோட்பாகி*, PRIP *மேத்தா*, RC *விசாகா கிரேடர் தலைவர்* G K *மூர்த்தி*, RILM *தலைவர்* PRID *கமல் சங்வி மற்றும்* RILM *ஊழியர்கள்* BYJU's*ன் டிஜிட்டல் கல்வி* app *பெறும் மாணர்வகளுடன்.*

ரோட்டரி உறுதியாக இருக்கிறது. இதன் ஒரு பகுதியாக சமீபத்தில் அவர் எத்தியோப்பாவில் அந்த நாட்டு பிரதமர் மற்றும் அதிபரை சந்தித்தார். நான் அவர்களிடம் இதயக் குறைபாடுகள் உள்ள 100 குழந்தைகளை எங்களிடம் அனுப்புங்கள். நாங்கள் அவர்களுக்கு இலவசமாக அறுவைச்சிகிச்சை செய்து நலமாக அனுப்பிவைக்கிறோம் என்று தெரிவித்தேன். இது தொடர்பாக எத்தியோப்பாவில் உள்ள ரோட்டேரியன்கள், அரசுடன் கூட்டாண்மை அமைத்து எத்தியோப்பியன் ஏர்லைன்ஸ் மூலம் அறுவைச்சிகிச்சை செய்துகொள்ளும் குழந்தைகளும் அவர்களின் பராமரிப்பாளர்களும் இந்தியா வர வழிவகுத்தனர். முதல்கட்டமாக நான்கு குழந்தைகள் இதய அறுவைச்சிகிச்சைக் காக பெங்களூரு வந்தடைந்துள்ளனர். அவர்களுக்கு விரைவில் அறுவைச் சிகிச்சை நடைபெற உள்ளது. இதேபோல, உகாண்டாவைச் சேர்ந்த 100 குழந்தைகளுக்கும் சிகிச்சை அளிப்பதாக உறுதியளித்துள்ளோம். அவர்களில் 35 குழந்தைகளுக்கு ஏற்கெனவே மும்பையில் உள்ள மருத்துவமனையில் அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக நடந்துமுடிந்துள்ளது என்றார் சேகர் மேத்தா. மாவட்ட ஆளுநர் சந்தீப் அகர்வாலா மற்றும் முன்னாள் மாவட்ட ஆளுநர் ராஜேந்திர அகர்வால் ஆகியோரின் சேவைகளுக்கும் மேத்தா பாராட்டுத் தெரிவித்தார்.

இந்த குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றுவதில் ரோட்டரியின் ஒரு அங்கமாக நாம் இருப்பதற்கு கொடுத்துவைத்தவர்கள் என்று குறிப்பிட்ட சேகர் மேத்தா, கடந்த 15 ஆண்டுகளில் ரோட்டரி இந்தியா 25,000 அறுவைச்சிகிச்சைகளை நடத்தி முடித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

எழுத்தறிவு திட்டம் பற்றி அவர் பேசுகையில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 மில்லியன் மக்களை எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றுவதை ரோட்டரி இந்தியா எழுத்தறிவு இயக்கம் (RILM) நோக்கமாக கொண்டுள்ளது. இது இந்திய அரசின் குறிக்கோளுடன் ஒத்துப்போகிறது. ரோட்டரியும், இந்திய அரசும் இணைந்து 2027ம் ஆண்டுக்குள் 100 மில்லியன் மக்களை எழுத்தறிவு பெற்றவர்களாக உருவாக்க திட்டமிட்டுள்ளது. அதைச் செயல்படுத்த நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்றார்.

ரோட்டரி சங்கத்தால் அடையாளம் காணப்படும் 10 லட்சம் மாணவர்களுக்கு கற்றல் பயன்பாட்டை வழங்கும் 'லக்ஷயா' உதவித்தொகைக்கான திட்டத்தைச் செயல்படுத்துவது தொடர்பாக BYJU's கல்வி நிறுவனம் மற்றும் RILM இரண்டும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. ரூ.8 கோடி மதிப்புள்ள உதவித்தொகை மூலம் 4 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு டிஜிட்டல் கல்வி பாடத்திட்டங்கள் வழங்கப்படும் என்றார்.

நேபாளத்தைச் சேர்ந்த PDG கிரண் லால் சிரேஷ்டா, இந்தியாவுக்கு 10,000 சக்கர நாற்காலிகளையும், நேபாளத்துக்கு 5,000 சக்கர நாற்காலிகளையும் வழங்க ஏற்பாடு செய்ததற்கும் மேலும் 20,000 இந்தியாவுக்கு வழங்க உறுதி தெரிவித்துள்ளதற்கும் மேத்தா நன்றி தெரிவித்துக்கொண்டார்.

நாடு முழுவதும் 50 கண் மருத்துவ மனைகள், 1,00,000 கண் அறுவைச் சிகிச்சைகள் மற்றும் நாடு முழுவதும் பயணிக்கும் வகையில் 100 நவீன வசதிகள் கொண்ட மருத்துவ சேவை வாகனங்கள் உள்ளிட்ட ரோட்டரி இந்தியாவின் குறிப்பிடத்தக்க திட்டங்களை மேலோட்ட பார்வையாக அவர் வழங்கினார். இந்திய அரசின் குடிநீர் திட்டங்களில் 10 சதவீதத்தை ரோட்டரி செய்து வருவதாக குறிப்பிட்ட அவர், தடுப்பணைகள் கட்டுவது. நீர் நிலைகளை சீரமைத்து புதுப்பிப்பது ஆகியவையும் இதில் அடங்கும். இந்த ஆண்டு நாங்கள் உறுதியேற்றுள்ள 10,000 குடிநீர் திட்டங்களில் 1,000 திட்டங்களைச் செயல்படுத்த உள்ளோம். அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 4,000 திட்டங்கள் செயல்படுத்தப்படும். குடிநீர் திட்டங்கள் அனைத்தும் 2027ம் ஆண்டுக்குள் முழுமையாக செயல்படுத்தப்படும் என்றும் மேத்தா கூறினார்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

# TRF விருந்து






RIPN *ஸ்டெஃபனி அர்ச்சிக் மற்றும் முன்னாள்* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி.*

**மேலே (இடமிருந்து)** PDG *சமீர் ஹரியாணி, பிரசில் நாட்டு* RRFC *ஹிரோஷி ஷிமுடா,* RI *தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ்,* RIDE *அனிருதா ராய்செயத்ரி,* TRF *அறங்காவலர் ஆர்கே ஓஃப்ராங்க்,* RID *மகேஷ் கோட்பாகி,* PRIP *சேகர் மேத்தா,* RI *இயக்குனர் விக்கி புலிஸ்,* PRID P T *பிரபாகர்,* TRF *அறங்காவலர் பரத் பாண்ட்யா,* PRID *கமல் சங்வி மற்றும்* PDG *ஜான் டேனியல்.*

**கீழே:** *அமிதா கோட்பாகி,* RI *தலைவர் ஜோன்ஸ் மற்றும்* PRID P T *பிரபாகர்.*







**மேலே:** PRIP *மேத்தா மற்றும் ராஷி.*

**கீழே:** RIDE TN *சுப்ரமணியன் மற்றும் வித்யா.*



RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் அமிதா.*



படங்கள்: ரஷீதா பகத்.

# TRF விருதுகள் (2021–22)

| Trophy | Zone 4 | Zone 5 |
|---|---|---|
| Highest Contribution to Annual Fund | Rajendra K Agarwal (3141) | Rajasekhar Srinivasan (3201) |
| Highest Contribution to Endowment Fund | Rajendra K Agarwal (3141) | Sridhar Jagannathan (3232) |
| Highest Contribution to Polio Fund | Rajendra K Agarwal (3141) | Sridhar Jagannathan (3232) |
| Highest Per Capita APF Contribution to TRF | Mayuresh P Warke (3142) | Rajesh Subash (3204) |
| Highest Total Contribution to TRF | Rajendra K Agarwal (3141) | Sridhar Jagannathan (3232) |
| Highest Donor Participation | Santosh S Pradhan (3060) | Rajesh Subash (3204) |
| Highest Club Participation | Santosh S Pradhan (3060)<br>Mayuresh P Warke (3142) | Rajasekhar Srinivasan (3201)<br>Sridhar Jagannathan (3232) |



*PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷியுடன் TRF விருது வென்றோர் PDGs கௌரிஷ் தோண்ட் (RID 3170), ராஜேஷ் சுபாஷ் (3204) சஞ்சய் மால்வியா (3053), J ஸ்ரீதர் (3232) மற்றும் ராஜசேகர் ஸ்ரீனிவாசன் (3201). ப்ரதீமா தோண்ட், தீஷ்மா சுபாஷ், புனிதா ஸ்ரீதர் மற்றும் ஷாந்தி ராஜசேகர் ஆகியோரும் உடன் உள்ளனர்.*



*PDG பங்கஜ் ஷா அவர்களை RIPN ஸ்டெஃபனி அர்ச்சிக் கௌரவிக்கிறார். மாநாட்டு தலைவர் PDG கிஷோர் குமார், TRF அறங்காவலர்கள் பரத் பாண்ட்யா மற்றும் ஆர்கே ஒஃப்ராங்க் ஆகியோரும் உடன் உள்ளனர்.*



*PDG ப்ரபீர் சாட்டர்ஜீ மற்றும் அவர் மனைவி ருபேனா, PRIP மேத்தா மற்றும் RID விக்கி புலிஸ் ஆகியோருடன்.*

## — Zones 4, 5, 6 and 7

| Trophy | Zone 6 | Zone 7 |
|---|---|---|
| Highest Contribution to Annual Fund | Mohan Shyam Konwar (3240) | Pankaj Arun Shah (3131) |
| Highest Contribution to Endowment Fund | Santosh Prasad Rijal (3292) | Mahmood Fazal (3190) |
| Highest Contribution to Polio Fund | Santosh Prasad Rijal (3292) | Rama Rao Madipalli (3020) |
| Highest Per Capita APF Contribution to TRF | Mohan Shyam Konwar (3240) | Pankaj Arun Shah (3131) |
| Highest Total Contribution to TRF | Santosh Prasad Rijal (3292) | Mahmood Fazal (3190) |
| Highest Donor Participation | Mohan Shyam Konwar (3240) | Gaurish Kumar Manohar Dhond (3170) |
| Highest Club Participation | Mohan Shyam Konwar (3240) | Pankaj Arun Shah (3131) |

| All India Trophies | RI District |
|---|---|
| Nitish Laharry Trophy for All India Highest Total Contribution to TRF | 3141 |
| Binota and Kalyan Banerjee Trophy for All India Highest Endowment Fund Contribution | 3190 |
| Usha and Raja Saboo Trophy for All India Highest Annual Fund Contribution to TRF | 3141 |
| Highest All India Polio Fund Contribution to TRF | 3232 |
| District with highest number of new AKS members | 3190 |



**மேலே:** AKS உறுப்பினர் DG பவன் அகர்வால் மற்றும் அவர் மனைவி ப்ராச்சி அவர்களை (இடமிருந்து) முன்னாள் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, அறங்காவலர் ஆர்கே ஓஃப்ராங்க், PRIP மேத்தா, RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ், RID மகேஷ் கோட்பாகி, TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா மற்றும் RIDE T N சுப்ரமணியன் கௌரவிக்கின்றனர்.



**வலது:** TRF அறங்காவலர் ஆர்கே ஓஃப்ராங்க், PDG ராஜேந்திர அகர்வால் (3141), RIPN ஸ்டெஃப்னி அர்ச்சிக், PDG தோண்ட் மற்றும் முன்னாள் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி.

உறுப்பினர் சேர்க்கை விருதுகள் அடுத்த இதழில்

**படங்கள்:** ஹேமந்த் குமார்



# மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்கிலிருந்து கட்டப்பட்ட பள்ளிக்கூடம்

**கைலி ஹாட்ஃபீல்ட்**

*மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பிளாக்குகளை பயன்படுத்தி ஒரு புதுமையான தொழில்நுட்பம் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட இந்தோனேசியாவில் பள்ளிகள் மற்றும் வீடுகளை மீண்டும் கட்டுகிறது - அதுவும் மின்னல் வேகத்தில்.*



*இந்தோனிசியாவில் உள்ள தமன் சாரியில் ஒரு ப்ளாஸ்டிக் ப்ளாக்குகளால் கட்டப்பட்ட பள்ளிகூடம்.*

2018ம் ஆண்டில், இந்தோனேசியாவின் லோம்போக் தீவு முழுவதும் நிலநடுக்கங்கள் கிராமங்களை அழித்தபோது, வீடுகள் மற்றும் பள்ளி கட்டிடங்கள் இடிந்து ஆயிரக்கணக்கான மக்களை இடம்பெயர செய்தது மற்றும் 4,000 மாணவர்களின் கல்வியை தற்காலிகமாக நிறுத்தியது. அதன் சுத்தம் மற்றும் மறுசீரமைப்பு முயற்சிகள் பல ஆண்டுகள் எடுத்தன. ஆனால் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு தொண்டு நிறுவனம், சேதமடைந்த கட்டிடங்களை விரைவாக மீண்டும் கட்டுவதற்கு ஒரு புதிய தீர்வைக் கண்டறிந்துள்ளது, அதே நேரத்தில் பிளாஸ்டிக் கழிவுகளையும் மறுசுழற்சி செய்கிறது.

கிளாஸ்ரூம் ஆஃப் ஹோப், வளரும் நாடுகளில் உள்ள சமூகங்களுக்கு பாதுகாப்பான, நிலையான பள்ளிகள் மற்றும் வீடுகளை உருவாக்குகிறது, இது மாணவர்கள் விரைவாக தங்கள் கல்விக்குத் திரும்புவதற்கு உதவுகிறது. டங்கன் வார்டு மற்றும் அவரது மனைவி நிக்கோலா கோர்டின் ஆகியோரால் 2012ல் நிறுவப்பட்ட கிளாஸ்ரூம் ஆஃப் ஹோப் கம்போடியா, லாவோஸ் மற்றும் மியான்மரில் 77 பள்ளிகளைக் கட்டியுள்ளது, இப்போது இந்தோனேசியாவில் பள்ளிகளை மீண்டும் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகிறது.

"400 பள்ளிகளை அழித்த 2018 லோம்போக் பூகம்பத்தால் 50,000 குழந்தைகள் தற்காலிக வசதிகளில் கல்வி கற்க வேண்டியிருந்தது" என்று அமைப்பின் CEO டங்கன் கூறினார். "தற்காலிகப் பள்ளியில் படிக்கும் ஒரு குழந்தை நிரந்தரப் பள்ளியில் படிப்பதைவிட பாதியை மட்டுமே கற்றுக்கொள்கிறது, கற்றல் இழப்பால் லோம்போக் பொருளாதாரம் ஆண்டுக்கு 72 மில்லியன் டாலர்கள் வரை எதிர்கால உற்பத்தித் திறனை இழக்கிறது."

2018ம் ஆண்டில் லோம்போக்கில் உள்ள சிறிய கிராமமான தாமன் சாரி





அறை மற்றும் கழிப்பறைகள் கொண்ட வீடு கட்டுவதற்கு ஆறு நாட்கள் ஆகும். மேலும், ஒன்று முதல் மூன்று டன் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும்.

“பூகம்பத்தில் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கும், அதிக வறுமை உள்ள பகுதிகளில் குறைந்த வருமானம் உள்ள குடும்பங் களுக்கும் நாங்கள் பிளாக் ஹோம்களை கட்டி வருகிறோம்'' என்று டங்கன் கூறினார்.

“கருத்து மிகவும் நல்லதாகவே இருக்கிறது, மேலும் உள்ளூர்வாசிகள் தங்கள் புதிய பள்ளிகளால் மகிழ்ச்சி யடைந்துள்ளனர்.''



நிலநடுக்கத்தால் பேரழிவிற்குள்ளான போது, நீண்ட கால தீர்வை உருவாக்கும் அதே வேளையில், குழந்தைகளை மீண்டும் கல்வி கற்க தற்காலிக பள்ளி கட்டிடங்களை கிராமத்தில் கட்டுவதற்கு உதவு வதற்காக கிளாஸ்ரூம் ஆஃப் ஹோப் நிவாரண முயற்சியில் இணைந்தது. அதன் தீர்வு புரட்சிகரமான பிளாக் சொல்யூஷன்ஸ் சிஸ்டம்ஸ் வடிவத்தில் வந்தது, இது பிளாஸ்டிக் கழிவுகளை எடுத்து, அதை ஒன்றோடொன்று இணைக்கும் இலகுரக பிளாக்களாக மாற்றுகிறது, அவை பூகம்பத்தை எதிர்க்கொள்ளும் கட்டிடங்களை உருவாக்குகின்றன.

ஃபின்லாந்தை தளமாகக் கொண்ட நிறுவனமான பிளாக் சொல்யூஷன்ஸ் அதன் மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பிளாக் தொழில்நுட்பத்தை ஆப்பிரிக்காவில் குடியிருப்பு திட்டங்களுக்குப் பயன்படுத்துகிறது மற்றும் கிளாஸ்ரூம் ஆஃப் ஹோப்புடன் கூட்டு சேர்ந்து அதன் பிளாக் அமைப்பை இந்தோனேசியாவுக்குக் கொண்டுவருகிறது.

2021ம் ஆண்டில், உலகின் முதல் பிளாக் பள்ளியானது கான்கிரீட் அடித்தளம், ஸ்டீல் கம்பிகள், கட்டமைப்பை வலுப்படுத்த U-ப்ரோ ஃபைல், துத்தநாகம் பூசிய ஸ்டீல் கூரை, கண்ணாடி ஜன்னல்கள் மற்றும் மரக் கதவுகளுடன் கட்டப்பட்டது.

300 சதுரமீட்டர், ஐந்து வகுப் பறைகள் கொண்ட பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு ஆறு நாட்கள் எடுத்தது (பொதுவாக செங்கல் மற்றும் சிமெண்ட் கட்டிடத்திற்கு மூன்று முதல் ஆறு மாதங்கள் ஆகும்) மற்றும் 15 டன் பிளாஸ்டிக் கழிவுகளை பிளாக் வடிவில் பயன்படுத்தியது. ஜூன் மாதத்தில் கட்டிடம் முடிக்கப்பட்டது. கோவிட்-19 கட்டுப்பாடுகள் நீக்கப்பட மாணவர்கள் தங்கள் புதிய பள்ளியில் கற்கத் தொடங்கினர்.

அமைப்பும் அதே பிளாக் சொல்யூஷன்ஸ் முறையைப் பயன் படுத்தி வீடுகளைக் கட்டி வருகிறது. இரண்டு படுக்கையறைகள், சமையல்



இந்தோனேசிய அரசாங்கம் பிளாக் பள்ளிகள் மற்றும் பிளாக் ஹோம்களை தொடர்ந்து கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது, மேலும் இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொது கழிப்பறைகள், நூலகங்கள் மற்றும் நிர்வாக கட்டிடங்களை கட்டுவதற்கான திட்டங்களும் உள்ளன.

இந்த பிளாக்குகள் தற்போது ஃபின்லாந்தில் இருந்து இந்தோனேசியா விற்கு அனுப்பப்படுகின்றன, இது ஒவ்வொரு திட்டத்தின் செலவு மற்றும் காலக் கெடுவை அதிகரிக்கிறது. இருப்பினும், இந்தோனேசியாவில் பிளாக்களை உற்பத்தி செய்ய ஒரு உள்ளூர் தொழிற்சாலை கட்டுவதே இதற்கு தீர்வு காணும் என்று நம்பப்படுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம், கிளாஸ்ரூம் ஆஃப் ஹோப், பிளாக் சொல்யூஷன்ஸ், முதலீட்டாளர்கள், நூசா தெங்கரா பராத்தின் அரசு, ஆஸ்திரேலிய துணைத் தூதரகம் மற்றும் ஃபின்லாந்து தூதரகத்தின் பிரதிநிதிகள் இடையே ஆசியாவின் முதல் பிளாக் சொல்யூஷன்ஸ் தொழிற்சாலையை லோம்போக்கில் உருவாக்குவதற்கான ஒரு ஒருங் கிணைந்த முயற்சியை குறிக்கும் வகை யில் ஒரு கடிதம் கையெழுத்தானது.

ஆசியா பசிபிக்கின் முதல் பிளாக் சொல்யூஷன்ஸ் தொழிற் சாலையை உருவாக்க முதலீட்டைப் பெற்றுள்ளோம். பிப்ரவரியில் நாங்கள் களமிறங்கினோம், மேலும் 2022ன் பிற்பகுதியில் தொழிற்சாலையை இயங்கச் செய்து, உள்நாட்டில் கிடைக்கும் பொருட்களிலிருந்து பிளாக்களை உற்பத்தி செய்வோம் என்று டன்கன் கூறினார்.





உள்ளூர் தொழிற்சாலை நிறுவப் பட்டதும், அதிகமான பள்ளிகள் மற்றும் வீடுகள் கட்டப்படும், பிளாக்களை உருவாக்க பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளூர் பகுதியிலிருந்து நேரடியாக எடுக்கப்படும்.

தற்போது, இந்தோனேசியா முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் 6.8 மில்லியன் டன் பிளாஸ்டிக் கழிவு உண்டாக்கப்படுகிறது. இதில் ஏறக்குறைய பாதி எரிக்கப்பட, அதன் நச்சுப்புகை காற்றை மாசு படுத்துகிறது, அதே நேரத்தில் குறிப்பிடத்தக்க அளவு கடல்களில் கலந்து கடல்வாழ் உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கிறது மற்றும் கடற்கரையோரங்களை மாசுபடுத்து கிறது, மற்றும் நிலப்பரப்புகளில் கொட்டப்படுகிறது.

“நாங்கள் பிளாக்களைப் பயன் படுத்தி மாதத்திற்கு நான்கு பள்ளிகள் மற்றும் பத்து வீடுகளை உருவாக்க உத்தேசித்துள்ளோம், மேலும் பிளாக் ஸ்கூல்ஸ் திட்டம் ஐந்தரை ஆண்டுகளில் 35,000 மாணவர்களுக்கு பயனளிக்கும் 200 பள்ளிகளை உருவாக்கும்'' என்று டங்கன் கூறினார்.

200 பள்ளிகள் சுற்றுச்சூழலில் இருந்து 3,000 டன் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும். 4,000 வீடுகளுக்கான திட்டம் 10 ஆண்டு களில் 24,000 மக்களுக்கு பயனளிக்கும் மற்றும் 12,000 டன் மறுசுழற்சி செய்யப் பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும்.

இதுவரை, நாங்கள் இரண்டு பிளாக் பள்ளிகள் மற்றும் இரண்டு பிளாக் வீடுகளை கட்டியுள்ளோம். எங்களுடைய மூன்றாவது பள்ளி நிறைவடையும் நிலையில் உள்ளது, ஃபின்லாந்தின் பிளாக்களுடன் மேலும் மூன்று பள்ளிகளைக் கட்டி, தொழிற்சாலை முடிந்ததும் போதுமான கட்டிட ஒப்பந்ததாரர்கள் உள்ளதை உறுதிபடுத்த திட்டமிட்டுள்ளோம்.

கிளாஸ்ரூம் ஆஃப் ஹோப் தற்போது நன்கொடையாளர்களை அவர்களின் திறன்-கட்டமைப்பு திட்டத்தின் இறுதி கட்ட நிதியுதவிக்காக நாடுகிறது, இந்த நிதி பிளாக் பள்ளிகள் மற்றும் பிளாக் ஹோம்கள் கட்டவும், பல உள்ளூர் ஒப்பந்ததாரர்களுக்கு பயிற்சி அளிக்கவும், தொழிற்சாலை திறப்பதற்கு முன் அவர்களுக்கு இந்த புதுமையான தொழில்நுட்பத்தில் போதுமான அறிவை வழங்கவும் உதவுகிறது.

“சராசரியாக, ஒரு பிளாக் பள்ளிக்கு சுமார் 60,000 செலவாகும், மேலும் எட்டு பள்ளிகளுக்கு நாங்கள் நிதி திரட்டுகிறோம்.'' என டங்கன் கூறுகிறார்.

கிளாஸ்ரூம் ஆஃப் ஹோப் பற்றிய கூடுதல் தகவல்: *www.classroomofhope.org.*

டன்கனை தொடர்புக்கொள்ள *duncan.ward@classroomofhope.org*

ரோட்டரி டவுன் அன்டர் இதழிலிருந்து மறுபதிவு.

# ரோட்டரி ஆளுநர்



**Dr அனில் லால்சந்த் பர்மர்**
மருத்துவர், RC நியூ பன்வெல், RID 3131

## பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதில் கவனம்

புணே மற்றும் அதைச் சுற்றியுள்ள மகாராஷ்டிரப் பகுதிகளைக் கொண்டுள்ள இந்த மாவட்டம் ஒவ்வோர் ஆண்டும் ரூ.100 கோடிக்குமேல் மதிப்புள்ள சேவைத்திட்டங்களை நடத்துகிறது. இந்த ஆண்டு, சங்கங்களிடமிருந்து ஆண்டுத் திட்ட நிதிக்கு 100% பங்களிப்புகளைப் பெற்ற முதல் இந்திய மாவட்டம் எங்களுடையதுதான். அதிலும் குறிப்பாக, $300,000க்கு மேல் மதிப்புள்ள இந்த நிதியை நாங்கள் ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்குள் திரட்டிவிட்டோம். உலக அளவில் இதைச் செய்த 4 RI மாவட்டங்களில் எங்களுடையதும் ஒன்று'' என்கிறார் அனில் பர்மர்.

5,900 ரோட்டரியன்களைக் கொண்ட 143 சங்கங்களை இவர் நிர்வகிக்கிறார், 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் 6 அல்லது 7 புதிய சங்கங்களைப் பதிவு செய்யவும் இலக்கு அமைத்துள்ளார். மம்தா திட்டம் 58 சங்கங்களின் வழியாக அரசு மற்றும் தொண்டு மருத்துவமனைகளில் 113 குழந்தைக் கதகதப்பான்களை (GG: $59,000) நிறுவும். அஸ்மிதா திட்டத்தின்கீழ் (ரூ.5 கோடி), GTPL ஹாத்வே வழங்கும் CSR நிதி, சங்க நன்கொடைகளின் துணையுடன் இந்தியாவில் 220 இடங்களில் பெண்கள் பள்ளிகளுக்குப் புத்தகங்கள் நன்கொடையளிக்கப்படுகின்றன.

$225,000 CSR நல்கை ஒன்றால் நிதியளிக்கப்படும் சமூக முன்னேற்றத் திட்டம் ஒன்றின் வழியாக 6 ரோட்டரி மாவட்டங்களில் திறன் வழங்கல் மற்றும் பணி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. பர்மர் TRFக்கு $2 மில்லியன் திரட்ட இலக்கு அமைத்துள்ளார். 1994ல், தன்னுடைய மறைந்த தந்தை லால்சந்த் M பர்மர் அவர்களால் ஊக்கம் பெற்று இவர் ரோட்டரியில் சேர்ந்தார்.■



**பிரவுதத்தா சுபுதி**
LPG வணிகர் மற்றும் விடுதி நடத்துபவர்
RC ஸ்ரீ ஜகன்னாத் தாம், RID 3262

## மக்களுடன் இணைய ஒரு ரோட்டரி செயலி

மற்ற NGOக்களைப்போலின்றி, ஒடிஷா மாநிலத்தில் ரோட்டரி நன்கு பரந்துள்ளது, இங்குள்ள 129 சங்கங்களும் தொலைதூரப் பகுதிகளில் பல திட்டங்களை நடத்துகிறார்கள் என்கிறார் பிரவுதத்தா சுபுதி. நாங்கள் 10லிருந்து 12 சங்கங்களைச் சேர்ப்போம், ஆனால், குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்களை வலுவான சங்கங்களுடன் இணைக்க உள்ளோம், என்கிறார் இவர். இவருடைய இலக்கு, 50 பெண்கள் உள்பட 400 ரோட்டரியன்களைச் சேர்த்து மொத்த ரோட்டரியன் எண்ணிக்கையை 4,369 ஆக்குவது.

பிளட் டேப்ஸ் என்ற செயலி ரத்த நன்கொடையாளர்களையும் நோயாளிகளையும் இணைக்கும். 'ரோட்டரி கனெக்ட்ஸ் ஒடிஷா' என்பது மொபைல் செயலி, சங்கத் திட்டங்களின் தொகுப்பு ஆகும். மக்கள் இதைப் பயன்படுத்தி உதவி அல்லது நன்கொடைகள், சக்கர நாற்காலிகள் அல்லது மருத்துவ சேவையைப் பெறலாம் என்று விளக்குகிறார் இவர். சுபுதி TRFக்கு $250,000 வழங்க இலக்கு அமைத்துள்ளார். தன்னுடைய தந்தை 83 வயது ஜய்தேவ் சுபுதி அவர்களால் ஊக்கம் பெற்று இவர் 1987ல் ரோட்டராக்டிலும், 2002ல் ரோட்டரியிலும் சேர்ந்தார். ■

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





**JKN பழனி**

கட்டுமான வல்லுனர், RC குடியாத்தம், RID 3231

## பெண்களுடைய வருவாயை மேம்படுத்தும் தையல் திட்டம்

வெளிச்சம் திட்டம் 25,000 பெண்களுக்குத் தையல் பயிற்சி வழங்கும், இதற்கு இந்த மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சங்கமும் சமூகக் கூடங்கள், பஞ்சாயத்து மையங்களில் தலா 5 இயந்திரங்களுடன் தொழில் சார்ந்த மையங்களை அமைக்கிறார்கள். ஏற்கெனவே 72 மையங்கள் இயங்குகின்றன, என்கிறார் J K N பழனி. அடுத்த 10 ஆண்டுகளில் இந்தத் தையல் மையங்கள் 2.5 லட்சம் பெண்களுக்கு பயனளிக்கும். இந்த இயந்திரங்கள் (ரூ.40 லட்சம்) ரோட்டரியன்களால் கொடையளிக்கப்படுகின்றன, பயிற்சியாளர்களுடைய மாதச் சம்பளமான ரூ.1 லட்சத்தைச் சங்கங்கள் வழங்குகின்றன. 3,600 ரோட்டரியன்களைக் கொண்டுள்ள 97 சங்கங்களின் செயல்பாடுகள் 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலம் மேம்படுத்தப்படும்.

அக்டோபர் 11 அன்று உலகப் பெண் குழந்தை நாளை முன்னிட்டு நடைபெற்ற மருத்துவ முகாம்களில் 1.5 லட்சம் மாணவிகள் பரிசோதிக்கப்பட்டார்கள், கிராமங் களில் 600 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இவர் TRFக்கு $650,000 திரட்ட இலக்கு அமைத்துள்ளார். இளம் பிள்ளைவாதத்தை அகற்றுவதில் சங்கங்கள் செய்த பணியால் ஊக்கம் பெற்று 2011ல் இவர் ரோட்டரியில் சேர்ந்தார்.■

**V செல்வநாதன்**

பாலிமர் தயாரிப்பு

RC பாண்டிச்சேரி காஸ்மோஸ், RID 2981

## 10,000 மாணவர்களுக்குத் திறன் மேம்பாடு

பாண்டிச்சேரி மையப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ரூ.1 கோடி செலவில் ஒரு மிகப் பெரிய திறன் மேம்பாட்டுத் திட்டம் நடத்தப்படுகிறது. இதில் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 10,000 மாணவர்கள் பயிற்சி பெறுவார்கள். மாணவர்களுக்குள் இருக்கும் திறமைகளை நாங்கள் அடையாளம் கண்டு வளர்ப்போம், அவர்கள் ஒளிமயமான பணி வாழ்க்கையைப் பெற உதவுவோம். இந்தத் திட்டம் நிதி ஆயோக் திட்டத்தின் ஒரு பகுதியாகும், என்கிறார் செல்வநாதன்.

135 சங்கங்கள், 6,850 உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்த மாவட்டத்தில் இவர் 1,000 புதிய ரோட்டரியன்களைச் சேர்க்க இலக்கு அமைத்துள்ளார், இதில் 873 பேர் இதுவரை சேர்க்கப்பட்டுள்ளார்கள். 10 புதிய சங்கங்கள் என்ற இலக்கில் 2 இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.12 வயதுக்குட்பட்ட, பாதிக்கப்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு அரசுத் திட்டங்கள், நன்கொடைகளின் வழியாக இலவச இதய அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. இன்னொரு பெரிய திட்டம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, நாகப்பட்டினம், முத்துப்பேட்டை, சிதம்பரத்தின் கடலோரப் பகுதிகளில் சதுப்பு நிலக் (மாங்குரோவ்) காடுகளை மேம்படுத்துதல். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $1 மில்லியன். இவர் 2003ல் ரோட்டரியில் சேர்ந்தார்.■

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி




# ஹிந்தி திரையுலக பின்னணி பாடகர்களில் முதல் பெண் சூப்பர் ஸ்டார் ஷம்ஷத்

**S R மது**

1940களில் ஹிந்தி திரையுலகில் ஒரு பாட்டுக்கு லதா மங்கேஷ்கர் வெறும் ரூ.50 சம்பளம் பெற்ற நிலையில், ஒரு பாட்டுக்கு ரூ.1,000 சம்பளம் பெற்று முன்னிலையில் இருந்தவர் ஷம்ஷத்.

அவரின் குரல் இனிமையானது, எந்த பாடலானாலும் அவரது குரலில் ஜொலிக்கும். பாடும் போது மைக்கை சற்று தள்ளிவைக்கும் அளவுக்கு அவருக்கு கணீர் என்ற குரல். பாலிவுட்டில் பின்னணி பாடகியாக வருவதற்கு முன்பே தனது இனிமையான குரலால் வானொலி நேயர்களை கட்டிப்போட்டவர். பாலிவுட்டில் முதல் பெண் பின்னணிப் பாடகரும் அவர்தான். ஹிந்தி இசை உலகில் முதல் பெண் சூப்பர் ஸ்டாரும் அவர்தான்!

ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி மற்றும் பெங்காலி மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களை அவர் பாடியுள்ளார். நௌஷத், O P நய்யார், C ராமச்சந்திரா, மதன்மோகன் போன்ற இசையமைப்பாளர்களின் சினிமா வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு அவரும் ஒரு காரணமாக இருந்தார். ஷம்ஷத்தின் பிரபலமான பாடல்கள் பின்னர் ரீமிக்ஸ் செய்யப்பட்டு வெளியானது. இதில் “கஜ்ரா மொஹாபத்வாலா” என்னும் பாடல் பிரபலமானது.

1930 மற்றும் 1940களில் தரமான பெண் பாடகர்களுக்கு அளவுகோலாக ஷம்ஷத் இருந்தார். சைகால் எப்படி ஆண் பின்னணி பாடகர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தாரோ அதுபோல் பெண் பாடகிகளுக்கு ஷம்ஷத் இருந்தார். பல ஆண்டுகளாக நூர்ஜஹான், கானன் தேவி, சுரையா, அமீர்பாய் கர்நாடகி, குர்ஷீத், ராஜ்குமாரி மற்றும் ஜோஹ்ராபாய் அம்பாலேவாலி உள்ளிட்ட நட்சத்திர கூட்டங்களின் அடையாளமாக இருந்தார். 1940 முதல் 1955 வரை அவர் ஹிந்தி திரையுலகில் உச்சத்தில் இருந்தார்.

லாகூரில், ஜாலியன்வாலா பாக் படுகொலை சம்பவம் நடந்த மறுநாள், அதாவது 1919ம் ஆண்டு ஏப்ரல் 14ல் ஷம்ஷத் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு மெக்கானிக். அவருக்கு ஐந்து சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் இருந்தனர். குழந்தை பருவத்தில் கிராமபோன்

கருவி முன்பு அமர்ந்து கொண்டு பாடல்களை கேட்பது அவரது வழக்கம். இசை மீது அவருக்கு இருந்த ஆர்வத்தை கண்ட பள்ளி முதல்வர், அவரை தினமும் பள்ளியில் காலையில் நடைபெறும் பிரார்த்தனை கூட்டத்தில் பங்கேற்கச் செய்தார். 10 வயதில் ஷம்ஷத், குடும்பத் திருமணங்களிலும், மத நிகழ்ச்சி களிலும் நாட்டுப்புற பாடல்களைப் பாடத் தொடங்கினார். அவரின் இனிமையான குரலைக் கேட்ட மாமா அமிருத்தீன், ஷம்ஷத்தின் தந்தையிடம், இவளுக்கு கடவுளின் கொடையால் நல்ல குரல் வளம் உள்ளது. அவள் தொழில் முறையில் பாடகராக வரும் வாய்ப்புள்ளது என்று கூறினார். ஷம்ஷத்துக்கு 13 வயது இருக்கும்போது அமிருத்தீன், அவரை இசையமைப்பாளர் குலாம் ஹைதரிடம் அழைத்துச் சென்றார். ஷம்ஷத்தின் குரல் வளத்தை கேட்டு அசந்துபோன ஹைதர், அவரை ஒரு நல்ல பாடகியாக உருவாக்குவதாக உறுதியளித்தார். ஒரு பாட்டுக்கு 12 ரூபாய் 50 காசுகள் என்ற கணக்கில் ஒரு டஜன் பாடல்களுக்கான ஒப்பந்தத்திலும் ஷம்ஷத் கையெழுத்திட்டார். அவரை பாடுவதற்கு அனுமதித்த தந்தை, பாடுவதற்கு மட்டும் செல்ல வேண்டும், யாருடனும் புகைப்படங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது, பாடல் பதிவு முடிந்தவுடன் நேராக வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். ஆனால், தந்தையின் கட்டளையை தனது இசை வாழ்க்கையில் கடைசி வரையில் அவர் கடை பிடித்தது தான் இதன் சிறப்பு அம்சமாகும்.



*2009யில் குடியரசு தலைவர் பிரதீபா பாட்டிலிடமிருந்து ஷம்ஷத் பேகம் பத்மஸ்ரீ விருது பெறுகிறார்.*

ஷம்ஷத்துக்கு இசையில் முறையான பயிற்சி கிடையாது. ஆனால், குலாம் ஹைதரின் பயிற்சி முறை அவருக்கு கை கொடுத்தது. அதாவது ஒரு பாடலை நூற்றுக்கணக்கான முறை பாடி பயிற்சி செய்தால் சாதிக்க முடியும் என்று அவர் உணர்ந்து கொண்டார். இது வைரத்தை மெருகூட்டுவது போன்றது என்பார் ஷம்ஷத்.

ஷம்ஷத் 1937ம் ஆண்டிலிருந்து லாகூர் மற்றும் பெஷாவர் வானொலியில் (AIR) பாடிவந்தார். பல நூறு பக்திப்பாடல்களும், காதல் பாட்டுகளை பாடி ஏராளமான ரசிகர்களின் நெஞ்சத்தை குளிரவைத்தார். ஆனால், துரதிருஷ்டவசமாக அவரது எந்த பாடலும் பதிவு செய்யப்படவில்லை. சில பஞ்சாபி படங்களுக்கும் அவர் பின்னணி பாடியுள்ளார். அவற்றில் ஒரு சில மட்டுமே வெள்ளிவிழாவைக் கொண்டாடின.



அவரது திரையுலக வாழ்க்கையில் 1941ல் வெளிவந்த கஜாஞ்சி திரைப்படம் முக்கிய திருப்பமாக அமைந்தது. அந்த

படத்துக்கு குலாம் ஹைதர் டோலக் மற்றும் பஞ்சாபி பீட்டுகளை வைத்து அருமையாக இசையமைத்திருந்தார். சவான் கே நஸாரென் ஹைன் என்ற அந்த பாடல் பிரபலமானது. ஆண், பெண் இணைந்த இளைஞர்கள் பட்டாளம் சைக்கிளில் ஆடிப் பாடுவதைப் போல பாடல் படமாக்கப்பட்டிருந்த்து. அந்த பாடலை தனக்கே உரித்தான விதத்தில் பாடியிருந்தார் ஷம்ஷத்.


இசையமைப்பாளர் நௌஷத் அலியுடன் ஷம்ஷத்.

கஜாஞ்சி படத்தின் தயாரிப் பாளர்கள் அந்த படத்திலிருந்து இரண்டு பாடல்களை பாடும் ஒரு போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். வெற்றி பெற்றவர் யார் தெரியுமா? லதா மங்கேஷ்கர் என்ற சிறுமிதான்! அந்தப் படத்தில் ஷம்ஷத் பாடிய இரு தனிப்பாடல்களை லதா அருமையாக பாடியிருந்தார்.

ஷம்ஷத்தின் இனிமையான குரலைக் கேட்ட நௌஷத், அவரை பாராட்டியதுடன், தொடர்ந்து சில படங்களுக்கு பின்னணி பாட வாய்ப்பளித்தார். அன்மோல் காடி (1946), ஷா ஜெஹான் (1946), தர்த் (1947). மேளா (1948) மற்றும் துலாரி (1949) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அது முதல் அவரது வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட்டது. உதான் கடோலே பீத் ஜாவூன் (அன்மோல் காடி), ஹம் தர்த் கா அஃப்ஸானா (தர்த்), தரிடிகோ ஆகாஷ் புகாரே (மேளா) ஆகிய பாடல்கள் மூலம் ரசிகர்களைக் கவர்ந்தார். படத்தில் நர்கீஸ் நடித்திருந்தாலும், அவருக்கு பின்னணி பாடியதால் இருவரும் ஒருவரையொருவர் வலுப்படுத்திக் கொண்டனர்.

1950ல் வெளிவந்த பாபுல் படத்தில் ஷம்ஷாத்தின் திறமையையும், புத்திசாலித் தனத்தையும் நௌஷத் நன்கு பயன்படுத்திக்கொண்டார். அந்த படத்தில் அவர் 8 பாடல்களைப் பாடியுள்ளார். துனியா பாதல் கயீ என்ற மனதை வருடும் பாடல் மற்றும் மில்தே ஹை ஆங்கன் தில் ஹூவா (தலத்துடன் பாடிய டூயட்






*ஷம்ஷத் நர்கிஸ், வைஜயந்திமாலா, நிகர் சுல்தான் மற்றும் மதுபாலா ஆகியோருக்கு குரல் கொடுத்துள்ளார்.*

இது) என்ற இனிமையான காதல் பாடலும், மணப் பெண் பாடும் சோடு பாபுல கா கர் என்ற பாடலும் பிரபலமாக இருந்தன.

ஆனால், சில விமர்சகர்கள் ராஜ்கபூர் தயாரிப்பில், ராம் கங்குலி இசையமைப்பில் 1948 இல் வெளியான ஆக் படத்தில் ஷம்ஷத் பாடிய தனிப்பாடல் கஹே கோயல் ஷோர் மச்சாயி ரே என்ற பாடல்தான் சிறந்த பாடல் என்று கருத்து கூறியிருந்தனர். அவர் உச்சத்தில் இருந்தபோதுதான் 1949 ஆம் ஆண்டு லதா என்ற புயல் ஹிந்தி திரையுலகை தாக்கியது. 1949ல் வெளிவந்த மஹல் மற்றும் பர்ஸாத் ஆகிய இருபடங்களில் லதா பின்னணி பாடியிருந்தார். திரையிசையில் பர்ஸாத், ஆவாரா மூலம் புரட்சியை ஏற்படுத்தியிருந்த சங்கர் - ஜெய்கிஷன், தாம் இசையமைக்கும் படங்களுக்கு லதாவை பின்னணி பாட பயன்படுத்திக் கொண்டார். குரல் மிகவும் மெல்லியதாக இருக்கிறது புறக் கணிக்கப்பட்ட லதா, படிப்படியாக நௌஷத் உள்ளிட்ட அனைத்து இசையமைப்பாளர்களுக்கும் பிடித்தமான பாடகரானார். நௌஷத் இசையில் பல ஹிட்டான பாடல்களை ஷம்ஷத் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஷம்ஷத், 1950களிலும் 1960களிலும் பல நல்ல பாடல் களைப் பாடினார். ஆன், தீதர், நக்மா, சிஐடி, நயா தௌர், மதர் இந்தியா, முகல்-இ-ஆஸம், கிஸ்மத் உள்ளிட்ட படங்களில் அவர் பாடியுள்ளார். அவரது குரலும், நடையும் O P நய்யார் எதிர்பார்த்தபடி இருந்தது. நகைச்சுவை, காதல், மகிழ்ச்சி என எல்லாவகை பாடல்களிலும் அவர் பரிமளித்தார். ஷம்ஷத்தின் குரலை அவர் கோவில் மணிக்கு ஒப்பிட்டார். 1956ல் சிஐடி படம் O P நய்யாருக்கு வெற்றிப்படமாக அமைந்தது. அந்த படத்தில் வஹிதா ரஹ்மான் நடனமாடும் காட்சி. அதற்கு ஏற்ப குரலுடன் கஹின் பீ நிகாஹென் என்ற பாடலை ஷம்ஷத் சிறப்பாக பாடியிருந்தார். அதே போல லேகே பெஹ்லா பெஹ்லா பியார் பாடலை ரஃபி, ஆஷாவுடன் சேர்ந்து பாடியிருந்தார்.

1955ம் ஆண்டு நடந்த ஒரு சோக சம்பவம் ஷம்ஷத்தின் திரையுலக வாழ்க்கையை மிகவும் பாதித்து. ஆம். அவரது கணவர் கண்பத் லால் பட்டோ, சாலை விபத்தில் உயிரிழந்தார். தனக்கு 15 வயதாகும் போது கண்பத்தை அவர் காதலித்தார். இருவீட்டாரின் எதிர்ப்பையும் மீறி இருவரும் திருமணம் செய்துகொண்டனர். ஆனால், கணவரின் திடீர் மரணத்தால் அவர் நிலைகுலைந்துபோனார். கணவரின் மறைவுக்குப் பிறகு அவர், பின்னணி பாடவே விரும்பவில்லை எனக் கூறிவந்தார்.

ஆனால், 1957ம் ஆண்டு மெஹ்பூப் கான், மதர் இந்தியா படத்தில் கணீர் குரலில் ஷம்ஷத் பாடவேண்டும் என்று விரும்பினார். அவர், தனது முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். இதைத் தொடர்ந்து நௌஷத் இசையமைப்பில் நான்கு சிறந்த பாடல்களை ஷம்ஷத் பாடினார். ஹோலி ஆயே ரே ஆயி மற்றும் பீ கே கர் ஆஜ் பியாரி துல்ஹனியா சாலி ஆகிய இரண்டு பாடல்களையும், ஓ காடிவாலே என்ற பாடலை ரஃபியுடனும், துக் பாரே தின் பீட்டே ரெஹ்ஜையா என்ற பாடலை ரஃபி, மன்னாடே, ஆஷா போஸ்லோ ஆகியோருடன் சேர்ந்து பாடினார்.

ஆனா மேரி ஜான் மேரி ஜான் ஸண்டே கே ஸண்டே (ஷெனாய்-1947), விசில்,, மௌத்ஆர்கன், ராக் அண்ட் ரோல், நகைச்சுவை கொண்ட பாடல். பாலிவுட்டின் முதல் மேற்கத்திய வகையிலான பாடல். இசையமைப்பாளர் C ராமச்சந்திரா. மீனா கபூருடன் சேர்ந்து ஷம்ஷத் பாடியுள்ளார். C ராமச்சந்திராவும் குரல் கொடுத்துள்ள உற்சாகமும் கலகலப்பும் நிறைந்த இந்த பாடல் பிரபலமானது.

மேரே பியா கயே ரங்கூன் (பதன்கா-1949): கதாநாயகி



நிகர் சுல்தானவுக்காக பாடியுள்ள பாடல். இதில் ரங்கூனில் உள்ள சுல்தானா, தனது காதலினிடமிருந்து தொலைபேசி அழைப்பை எதிர்நோக்கியிருக்கும் காதல் பாடல். இசையமைப்பாளர்: C ராமச்சந்திரா.

மில்தே ஹை ஆங்கென் தில் ஹுவா (பாபுல்-1950): ஷம்ஷத் பாடகர் தலத்துடன் இணைந்து இனிமையான குரலில் பாடியுள்ள பாட்டு. திலிப், முனாவர் சுல்தானை காதலிக்கிறார். இந்த பாடலில் திலிப் பியானோ வாசிக்கும்போது இசையமைப்பாளர் செய்யும் மாயாஜாலம் அருமை.

துனியா பாதல் கயி (பாபுல்-1950): ஷம்ஷத்தின் குரல், கேலி, கிண்டல், நகைச்சுவை பாடல்களுக்குத்தான் எடுபடுமா? இந்த பாட்டை கேளுங்கள் ஷம்ஷத்- தலாத் இருவரும் காதல் ரசம் சொட்ட எப்படி பாடியிருக்கிறார்கள் என்பது தெரியவரும்.

ஸயான் தில் மெய்ன் அனாரே (பாஹர்-1951): படத்தின் கதாநாயகி வைஜயந்தி மாலாவுக்காக ஷம்ஷத் குரல் கொடுத்துள்ளார். இசையமைப்பாளர் S D பர்மனுக்கு ஆரம்பகால கட்டத்தில் பெயர் வாங்கிக் கொடுத்த படம். 1950களில் மிகவும் பிரபலமாக இருந்த மறக்கமுடியாத பாடல் இது.

பச்பன் கே தில் புலா நா தேனா (தீதர்-1952): லதாவும் ஷம்ஷத்தும் சேர்ந்து பாடிய இந்த டோங்கா பீட் பாடல் அனைவராலும் விரும்பப்பட்டது. தபஸும் மற்றும் பரீக்ஷித் சாஹ்னி ஆகிய இரு குழந்தைகள் நடிப்பில் லதா-ஷம்ஷத் இணைந்து பாடியது. இசையமைப்பாளர்: நௌஷத்.

ஹெ ஜாதுகர் பல்மா (நக்மா-1953). இந்த ஒரு பாடல் நஷாத்தின் இசையமைப்பில் (நௌஷத் என குழப்பிக்கொள்ள வேண்டாம்.) பாடப்பட்டது. ஒவ்வொரு வருகையிலும் அழகாகத் தோன்றும் காதலியைப் போல, 70 வருடங்கள் கடந்த இந்தப் பாடல் மீண்டும் மீண்டும் கேட்கத் தோன்றும்.

லேகே பெஹ்லா பெஹ்லா பியார் (சிஐடி-1955): ஹிந்தி திரைப்பட ரசிகர்களில் இந்த பாடலை முணு முணுக்காதவர்களே இல்லை எனலாம். ரஃபியுடன் இணைந்து ஷம்ஷத் பாடிய இந்த பாடலுக்கு இசையமைத்தவர் O P நய்யார்.

ரேஷ்மி சல்வார் உத்தா ஜலிகா (நயா தௌர்-1957): கும் கும் மற்றும் மினோ மும்தாஜ் இருவரின் மேடை நடனத்துக்காக ஆஷாவுடன் சேர்ந்து ஷம்ஷத் பாடிய பாடல். இந்த படத்துக்கு O P நய்யார் தான் இசையமைப்பாளர்.

தேரி மெஹ்ஃபில் மெய்ன் கிஸ்மத் அஸ்மகர் ஹம்பி தேக்கெங்கே (முகல்-இ-ஆஸம் -1960): நௌஷத் இசையமைப்பில் லதாவும், ஷம்ஷத்தும் சேர்ந்து பாடியது.

கஜ்ரா மொஹபத்வாலா (கிஸ்மத்- 1968): இதுவும் O P நய்யார் இசையப்பில் ஆஷாவுடன் சேர்ந்து ஷம்ஷத் பாடிய பாடல்தான். இதில் ப்பிதா ஆண் உடையிலும், விஸ்வஜித் பெண் வேடத்திலும் நடித்து படமாக்கப்பட்டது. விஸ்வஜித்துக்காக ஷம்ஷத் குரல் கொடுத்துள்ளார்.

ஷம்ஷத்தின் புகழ் மெல்ல மெல்ல மழுங்கத் தொடங்கியது. அவர் தன்னை மேம்படுத்திக் கொள்ளாமல் விலகியே இருந்தார். பொது இடங்களில் அவர் தோன்றவும் இல்லை. யாரும் புகைப்படம் எடுக்கவும் அனுமதிக்கவில்லை. 2004ம் ஆண்டு ஷம்ஷத் தனது இரங்கல் செய்தியை தானே வாசித்தார். சைராபானுவின் பாட்டியின் பெயரும் ஷம்ஷத் பேகம். அவரும் ஒரு பாடகர்தான். அவர் இறந்த செய்தியை சில செய்தித்தாள்கள் இந்த ஷம்ஷத் இறந்ததாக குழப்பிக் கொண்டு செய்திவெளியிட்டன.

2009ம் ஆண்டு இந்திய அரசு ஷம்ஷத்துக்கு பத்மபூஷண் விருது வழங்கி கௌரவித்த்து. அதே ஆண்டில் O P நய்யார் நினைவு விருதையும் அவர் பெற்றார்.

ஷம்ஷத், 2013ம் ஆண்டில், 94 வயதில், மும்பையில் தனது மகளும்-மருமகனும் வாழ்ந்த வீட்டில் இறந்தார். லதா மங்கேஷ்கர், தமது இரங்கல் செய்தியில், ஷம்ஷத்தின் இனிமையான குரலுக்கு தாம் ஒருபோதும் நிகரில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.



எழுத்தாளர் மூத்த பத்திரிகையாளர் மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சவுத் உறுப்பினர்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# சங்கங்களின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## கொல்கத்தாவில் கைவினைப்பொருள் கண்காட்சி



DGE *அஜய் குமார் லா கண்காட்சியை துவக்கி வைக்கிறார்.*

RC கங்கா ஹெரிடேஜ் மற்றும் RID 3291-ன் ஆர்ட் ஃபார் எ காஸ் கமிட்டியால் உள்ளூர் தொழில் முனைவோர் தங்கள் வருமானத்தை அதிகரிக்க உதவும் வகையில் மூன்று நாள் கைவினைப் பொருட்கள் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. கொல்கத்தாவில் உள்ள நோட்டி பினோதினி ஆர்ட் கேலரியில் 20க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் பெண் தொழில்முனைவோரால் அமைக்கப்பட்டன.

## நீர் மறுசுழற்சி திட்டம்



PDG *கௌரிஷ் தோண்ட் மற்றும் சங்கத்தினர் புதிய நீர் மறுசுழற்சி இயந்திரம் முன்.*

ஹொனாவரில் உள்ள அரசு மருத்துவமனையில் RC ஹொனாவர், RID 3170 மூலம் அமைக்கப்பட்ட ரூ.14 லட்சம் மதிப்பிலான நீர் மறுசுழற்சி பிரிவை PDG கௌரிஷ் தோண்ட் திறந்து வைத்தார். AG நாகராஜ் ஜோஷி, சங்கத்தலைவர் மன்வெல் ஸ்டீபன் ரோட்ரிகஸ், செயலாளர் மகேஷ் கல்யாண்பூர், திட்ட ஒருங்கிணைப்பாளர் சூர்யகாந்த் சாரங் மற்றும் மருத்துவமனையின் மருத்துவ அதிகாரி டாக்டர் ராஜேஷ் கினி ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## விதை மற்றும் உரம் விநியோகம்




*விவசாயி ஒருவருக்கு விதை மற்றும் உரம் அளிக்கப்படுகிறது.*

திரிபுராவில் கோவிட்-க்கு பிந்தைய சவால்களை சமாளிக்கவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், RC தர்மாநகர், RID 3240, தோட்டக்கலைத் துறையுடன் இணைந்து, வடக்கு திரிபுராவில் உள்ள விவசாயிகளுக்கு குளிர்கால காய்கறி விதைகள் மற்றும் கரிம உரங்களை விநியோகித்தது. தொற்றுநோய்க்குப் பிந்தைய பொருளாதார மீட்பு நடவடிக்கை மற்றும் சமூக மேம்பாட்டு முயற்சியின் ஒரு பகுதியாக இந்த திட்டத்தை விரிவுபடுத்த சங்கம் திட்டமிட்டுள்ளது.

## பழைய டயர்களை மீண்டும் பயன்படுத்துதல்



*சங்கத்தலைவர் புஷ்பா சூர்யமூர்த்தி மற்றும் சங்கத்தினர் தோட்டத்தில்.*

RC மும்பை நார்த் ஐலேண்ட், RID 3141ன் உறுப்பினர்கள், பழைய டயர்களை பூந்தொட்டிகளாக மாற்றினர். நாங்கள் 25 பூந்தொட்டிகளுடன் தொடங்கி, மறுசுழற்சி செய்யப்பட்ட டயர் பானைகளை ஒரு பொது தோட்டத்தில் நட்டுள்ளோம் என்று சங்கத்தலைவர் புஷ்பா சூர்யமூர்த்தி கூறினார்.

Wordsworld

# வார்த்தைகளை கேளுங்கள்



சந்தியா ராவ்

ஒவ்வொரு முறையும் புத்தகங்கள் நிரம்பி வழியும் அலமாரிகளை மீண்டும் நேர்த்தி செய்யும் நேரம் வரும், சில படித்தவை, பெரும்பாலும் படிக்காதவை, பல்வேறு காரணங்களுக்காக வாங்கப்பட்டவை: அட்டை கவர்ச்சியாக இருந்ததால், நான் விரும்பிய ஆசிரியர் இவர்தான், மிகவும் பரிந்துரைக்கப்பட்டது மற்றும் சில நேரங்களில் ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு மனநிலையின் விருப்பத்திற்காக. இப்படி காரணம் எதுவாக இருந்தாலும், இறுதியில் மிகுந்த மனவேதனைக்கு மத்தியில் எதை வைத்திருக்க வேண்டும், எதை வைக்கக்கூடாது என்பதை நீங்கள் தேர்வு செய்வீர்கள். சில தேர்வுகள் எளிதானது. ஆனால், பல புத்தகங்கள் கதைகளையும் நினைவுகளையும் தன் முதுகிலும் பக்கங்களிலும் சுமந்து கொண்டிருக்கும். கடந்த சில வாரங்களாக நான் அதைத்தான் செய்து வருகிறேன், எனது தனிப்பட்ட நூலகத்தை சுத்தம் செய்கிறேன், அந்த செயலின் போது சில விலைமதிப்பற்ற புத்தகங்களை கண்டுபிடித்தேன். இது என்னை போன்ற புத்தகப் புழுக்களுக்கு ஒரு சரியான புத்தாண்டு பரிசாகும்!

என் இதயம் படபடக்க, நான் மீட்டெடுத்த புத்தகங்களில் பெண்களால் எழுதப்பட்டு ஆங்கிலத்தில் தி ஆன்ட் ஹூ ஸ்வாலோடு தி சன் என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்ட மராத்தியில் பக்திப் பாடல்கள், அபங்ஸ் இருந்தது. இதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், இது மராத்தியில் உரையும், ஆங்கில எழுத்தில் மொழிமாற்றமும், நீலா பகவத் மற்றும் ஜெர்ரி பின்டோவின் ஆங்கில மொழிபெயர்ப்புடன் இருந்தது. தற்செயலாக இதன் தலைப்பு முக்தாபாய் இசையமைத்த ‘முங்கி ஊதாலி ஆகாஷி’ என்று தொடங்கும் பாடலைக் குறிக்கிறது. முன்னுரையில் விளக்கப்பட்டுள்ளபடி: ‘ ஒரு கறுப்பு எறும்பை நேர்த்தியாக எடுத்துக்கொண்டு, ஒரு கண்ணை மூடிக்கொண்டு அதன் மெல்லிய கறுப்பு உருவம் சூரியனை மறைப்பதைப் பார்க்கும் ஒரு சிறு பெண்ணாகவே முக்தாபாயை பார்த்தேன். இது கண்ணோட்டத்தின் அதிசயம். மிகச் சிறியது கூட அளவற்ற பெரியதை மறைக்கமுடியும் ஒரு எளிமையான கவனிப்பில் இவ்வளவு ஆழம் - இது ஒரு கவிதை!




இரண்டாவது பொக்கிஷம் ஒரு சாதாரணமான தலைப்புடன் வருகிறது: மனிஷா சோப்ராஜனியின் தி லான்ட் ஐ ட்ரீம் அஃப். அடிக்கடி நடப்பது போல, அதன் டாக்லைன் கவர்ச்சியாக இருந்தது: காஷ்மீர் பெண்களின் கதை, தெளிவாக தங்கள் குரல்களை கேட்கும்படி உரக்க சொல்கிறது. ஒரு விரிவான முன்னுரையில், நூலுக்கான சூழலை ஆசிரியர் தெளிவாகக் குறிப்பிடுகிறார். ஒரு காலத்தில் காஷ்மீர் மற்றும் காஷ்மீர்வாசிகளை பற்றி ஒரு மாதிரியான பிம்பத்தை நாம் வைத்திருந்தோம், இப்போது மற்றொரு வகையான கருத்து நிலவுகிறது. 2003 ஆம் ஆண்டு இப்பகுதிக்கு தனது முதல் சுற்றுப்பயணத்தின் போது, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இழுபறி மக்களை எவ்வாறு பாதித்தது என்பதைப் பார்த்தபோது என் கருத்துக்கள் உடைத்தெறியப்பட்டன என ஆசிரியர் கூறுகிறார்: ‘காஷ்மீர் பெண்களைப் பொறுத்தவரை, இந்த அரசியல் சோகத்தின் தாக்கம் அவர்களுக்கு இரட்டிப்பு ஆபத்தானது; அவர்கள் மோதலின் கோபத்தை மட்டும் தாங்கவில்லை, தீவிரவாதிகள் மற்றும் இந்திய பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்படும் கேளிக்கைக்கான பொருட்களாகவே கருதப்படுகின்றனர். தனிப்பட்ட மற்றும் அரசியல் சுதந்திரம் தொலைதூரக் கனவாகவே உள்ளது.’

மூன்றாவது புத்தகம் சமீபத்திய கொள்முதல் ஆகும், 2022 இல் வெளியிடப்பட்ட, கேட்டவுடன் வாங்கத்தூண்டும் சுவாரசியமான தலைப்புடனான - ஓமர் ஃபிரைட்லேண்டரின் தி மான் வு சோல்ட் ஏர் இன் ஹோலி லேண்ட். அதன் சிறுகதைகள் நீண்ட காலமாக வேரூன்றிய இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலில் தவிக்கும் மக்களின் வாழ்கையை பற்றியது. யூதர்களின் கேள்வி, இப்போதுள்ள காஷ்மீர் பிரச்சினையைப் போலவே, எப்போதும் ஆர்வமுள்ள விஷயமாக இருந்து வருகிறது. நான் 11 அல்லது 12 வயதில் படித்த அன் ஃபிராங்கின் தி டைரி ஆஃப் எ யங் கேர்ல் தொடங்கி, பலர் அதை பற்றி பலவிதமாக எழுதியிருந்ததால் பல ஆண்டுகளாக அதைத் தொடர்ந்து ஆராய்ச்சி செய்வது சாத்தியமானது. முதல் கதையான ‘ஜாஃபா ஆரஞ்ஜஸ்’ கதையின் முதல் பக்கத்தில், கதை சொல்பவர் ஒரு கவிதையை மேற்கோள் காட்டுகிறார்: ‘எனது குழந்தைகளையும் பேரக்குழந்தைகளையும் நினைக்கும் போது, யெஹுதா அமிச்சையின் கவிதைதான் எனக்கு எப்போதும் நினைவுக்கு வருகிறது. இது ‘கண்கள்’ என்று அழைக்கப்படுகிறது, அதை நான் மனப்பாடமாக அறிவேன்.




என் மூத்த மகனின் கண்கள் கறுப்பு அத்திப்பழங்களைப் போன்றது, ஏனென்றால் அவன் கோடையின் முடிவில் பிறந்தவன்.

என் இளைய மகனின் கண்கள் ஆரஞ்சு துண்டுகள் போல தெளிவாக உள்ளன,

ஏனென்றால் அவன் அவற்றின் பருவத்தில் பிறந்தவன். என் சிறிய மகளின் கண்கள் இளம் திராட்சைப்பழங்களைப் போல வட்டமானவை. அவர்களை நினைத்து நான் படும் கவலை இனிமையானது. கர்த்தருடைய கண்கள் பூமியில் உலவுகின்றன, என் கண்கள் எப்போதும் என் வீட்டைச் சுற்றியே உலவுகின்றன. கடவுள் கண் வியாபாரத்திலும் பழ வியாபாரத்திலும் இருக்கிறார். நான் கவலை வியாபாரத்தில் இருக்கிறேன்.'

நான் புத்தகங்களை ஒன்றன்பின் ஒன்றாக படிக்க, சில சமயங்களில் ஒன்றுக்கொன்று இடையில் படிக்க, ஒரு பாங்கு தோன்றுவது போல் இருந்தது, அது இணைப்புகள் மற்றும் ஒற்றுமைகளின் பாங்கு, உலகளாவிய கருத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வடிவமைப்பு. அதை சாதாரணமாக ஒப்புக்கொள்வதை தவிர நான் இந்த பாங்கிற்கு அதிக கவனம் செலுத்தவில்லை. பின்னர் நான் ஒரு பாடலைக் கேட்டேன்.

சமூக வலைதளங்களில் 'சுபராயே' வைரலாக பரவி வருகிறது. இது ஷெர்வின் ஹாஜிபூர் என்ற இளம் ஈரானிய இசைக்கலைஞரால் இசைக்கப்பட்டு யூடியூப்பில் பதிவேற்றப்பட்டது. தெஹ்ரானில் ஹிஜாப் சரியாக அணியாததற்காக கைது செய்யப்பட்ட இளம்பெண் மஹ்சா அமீன் இறந்ததை அடுத்து அவர் இதைச் செய்தார். ஹாஜிபூர் ஈரானிய அதிகாரிகளால் உடனடியாக கைது செய்யப்பட்டார் மற்றும் அப்பாடல் ஈரானில் தடை செய்யப்பட்டது. அவர் பின்னர் விடுவிக்கப்பட்டார், ஆனால் உலகம் முழுவதும் கேட்போர் அவரது "பராயே ஆசாதி, ஆசாதி, ஆசாதி"... சுதந்திரம், சுதந்திரம், சுதந்திரம்... என்ற அவரது கூக்குரல்களை தொடர்ந்து கேட்கிறார்கள்... இது ஒரு எளிய பாடல், தெருவில் நடனம் , அமைதி, நீண்ட இருண்ட இரவுக்குப் பிறகு சூரியன், காற்று மாசுபாடு, அழுகிய மனங்களுக்கு மாற்றம், வறுமையின் அவலம், அப்பாவி நாய்கள், மாணவர்களின் எதிர்காலம், என்றும் அழியாத கண்ணீர், சிரித்த முகங்கள், ஆப்கானிய குழந்தைகள், ஆண் குழந்தையாக இருக்க ஆசைப்படும் பெண் போன்ற அன்றாட விஷயங்களைப் பற்றிய புலம்பல் 'பராயே ஹஸ்ரத்-இ யேக் ஜெண்டேகி-யே மாமுலி' என்று ஹாஜிபூர் பாடியது நாம் ஏங்குவது மொத்தமும் சாதாரண வாழ்க்கை வாழ்வதற்கான சுதந்திரத்திற்காக என்பதே. கீதம் போன்ற அழைப்போடு அந்த பாடல் முடிவடைகிறது: 'பராயே ஜான், ஜெண்டேகி, ஆசாதி, பராயே ஆசாதி, பராயே ஆசாதி, பராயே ஆசாதி...' ; (பெண்களுக்கு, வாழ்க்கைக்கு, சுதந்திரத்திற்கு,)







எப்படியோ, விசித்திரமான, மர்மமான, தற்செயலான வழியில், இந்த புத்தகங்கள் வாழ்க்கை, ஆசை, அடக்குமுறை, கனவுகள், நம்பிக்கை, மனித நிலை ஆகியவற்றை பற்றிச் சொல்லும் அனைத்தையும் உள்ளடக்கியதாகத் தோன்றியது. படங்கள், கதைகள், ஓவியங்கள,  திரைப்படங்கள் அல்லது பாடல்கள் எதுவாக இருந்தாலும் கலையின் மொத்த வெளிப்பாடுகளும் அதுதான் அல்லவா.

இதையெல்லாம் நான் அலசிக் கொண்டிருந்த போது, எனக்கு பத்திரிக்கை வினியோகிக்கும் கோபி, ஃப்ரண்ட்லைன் இதழை கொடுத்து சென்றார். அதில் விஜய்தா மகேந்திருவின் 'டூ யு ஹியர் பீபில் சிங்?' என்ற கட்டுரை இருந்தது. 'பராயே' பற்றியும், கொடுமையான மேற்பார்வையாளர்களின் கீழ் நெற்பயிர்களில் வேலை செய்வதால் ஏற்படும் கஷ்டங்களுக்கு எதிரான போராட்டமாக ஆரம்பித்து அடக்குமுறைக்கு எதிரான கீதமாக மாறிய இத்தாலிய 'பெல்லா சியாவ்' போன்ற மேலும் பல மக்களின் பாடல்கள் பற்றியும் அதில் எழுதப்பட்டிருந்தது. அந்த பாடல் ஒரு பஞ்சாபி பதிப்பை கூட கொண்டுள்ளது, ஆனால் 'பெல்லா சாவ்' என்று அழைக்கப்படும் துருக்கிய பதிப்பைச் சுற்றியுள்ள கதை மிகவும் சுவாரசியமானது, அதனால் கண்டிப்பாக இது அதிகாரிகளால் தடைசெய்யப்பட்டதும் கூட. அந்த பாடலைப் பாடிய க்ரூப் யோரம் இசைக்குழுவின் இரு உறுப்பினர்கள், தடையை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்து இறந்தனர். இரண்டாவது மரணம் நடந்த சில நாட்களுல், 'துருக்கி நகரமான இஸ்மிரில் ஒரு வினோதமான சம்பவம் நடந்தது. வழக்கமான அஸான் அல்லது பிரார்த்தனைக்கான அழைப்புக்குப் பதிலாக, க்ரூப் யோரமின் 'பெல்லா சியாவோ பதிப்பு இஸ்மிர் முழுவதும் உள்ள பல மசூதிகளில் இருந்து இசைக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக ஒரு பெண் பின்னர் கைது செய்யப்பட்டார்.' பாடலின் கடைசி வரியான 'முயர்டா பெர் லா லிபர்டாட்' என்றால் 'சுதந்திரத்திற்காக இறப்பது' என்று பொருள்.

நமக்கு அருகில், 1979ல் ஃபைஸ் அகமது ஃபைஸ் எழுதிய 'ஹம் தேகெங்கே' கவிதை உள்ளது. இது பாகிஸ்தானின் முன்னாள் பிரதம மந்திரி சுல்பிகர் அலி பூட்டோ 1979ல் ஜியா உல்-ஹக் ஆட்சியில் சிறையில் அடைக்கப்பட்டு, இறுதியில் தூக்கிலிடப்பட்டபோது எழுதப்பட்டது. இது ஈரானின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக எழுதப்பட்டதாகவும் தெரிகிறது. 1996ம் ஆண்டில், நன்கு அறியப்பட்ட பாகிஸ்தானிய கஜல் பாடகர் இக்பால் பானோ நிரம்பிய பார்வையாளர்களுக்கு மத்தியில், இரட்டை எதிர்ப்பின் வெளிப்பாடாக புடவை அணிந்து பாடினார். எதிர்ப்புப் பாடலை பாடி, புடவை தடையை மீறி அதை நிகழ்த்தினார். இந்தியாவில் நடக்கும் போராட்டக் கூட்டங்களில் இது தொடர்ந்து பாடப்படுகிறது. நம் அனைவரையும் இணைக்கும் வார்த்தைகளை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# சேலத்தில் போதை மருந்துகளுக்கு எதிரான மாரத்தான் ஓட்டம்

**ரஷீதா பகத்**

போதை மருந்துகளைத் தவறாகப் பயன்படுத்துதலுக்கு எதிராக RC சேலம் ஃபினிக்ஸ், RID 2982, ரோட்டரியன்களும் சேலம் நகரக் காவல் துறையும் சேர்ந்து நடத்திய மிகப் பெரிய மாரத்தான் ஓட்டத்தால் சேலம் நகரம் திருவிழாக் கோலம் கொண்டது. 3 வயதுச் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை 2,000 பேர் இதில் பங்கேற்றார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சேலம் நகர ஆணையர் நஜ்முல் ஹோடா உள்ளிட்ட காவல்துறை அலுவலர்களும் ஆவலுடன் பங்கேற்றார்கள். எங்களுக்குக் கிடைத்த எதிர்வினை மிகச் சிறப்பாக இருந்தது; நிகழ்ச்சி நடைபெற்ற சேலம் காந்தி திடலில் காலை 5 மணியிலிருந்து சிறுவர்கள் கூடியிருந்தார்கள்; பல பிரிவுகளாக நடைபெற்ற நிகழ்ச்சியில் 2,000 பேர் பங்கேற்றார்கள், சுமார் 4,000 பேர் இதைப் பார்த்தார்கள் என்றார் நிகழ்ச்சித் தலைவர், சங்க உறுப்பினர் ஹேம்நாத்.

"போதை மருந்துகளைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிரான விழிப்புணர்வை உண்டாக்கும் மிகச் செயல்திறன் மிக்க வழியாகமட்டுமின்றி, ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தி, சமூகத்தில் மக்களுடைய நலனுக்கு அது எப்படிப் பணியாற்றுகிறது என்பதைக் காண்பிக்கும் வழியாகவும் இது அமைந்தது'' என்று அவர் தொடர்ந்து கூறினார்.

இந்த மாரத்தானில் 12 வயதுக்குக் குறைவான சிறுவர்களுக்கான 2கிமீ சிறு ஓட்டத்தில் தொடங்கிப் பெண்களுக்கு 5கிமீ, ஆண்களுக்கு 10கிமீ ஓட்டங்கள் நடைபெற்றன. பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பதக்கம், ஒரு பட்டயம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குக் கோப்பைகள், ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர், ஆணையர் நஜ்முல் ஹோடா. அவர் மக்களிடம் பேசுகையில் பல திட்டங்களின் வழியாகச் சமூக நலனுக்குப் பணியாற்றும் ரோட்டரியைப் பாராட்டினார், கோவிட் நோய்ப் பரவலின் போது நிர்வாகத்துக்குச் சேலம் ரோட்டரியன்கள் வழங்கிய முதன்மையான உதவியை நினைவு கூர்ந்தார். போதை மருந்துகளைப் பயன்படுத்துவதால் உண்டாகும் தீமைகளைப்பற்றி அவர் பேசினார், இதை எதிர்த்துப் போராடும் ரோட்டரிக்கு நன்றி தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் RID 2982 ஆளுநர் P சரவணன், காவல்துறை துணை ஆணையர்கள் S P லாவண்யா, மாடசாமி மற்றும் ராதாகிருஷ்ணன் பங்கேற்றனர்.

"போதை மருந்துகளுக்கு எதிரான இந்த ஓட்டத்தை எங்கள் சங்கம் நடத்தியதன் நோக்கம், போதை மருந்துகளைத் தவறாகப் பயன் படுத்துவதுபற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவது மற்றும் சேலத்தைத்






தூய்மையான, போதை மருந்து இல்லாத நகரமாகத் தொடரச்செய்யும் எங்கள் பணி நிறைவேறுவதை உறுதிசெய்வது'' என்றார் சங்கத் தலைவர் கேசவன்.■



**மேலே:** *சேலம் காவல் ஆணையர் நஜ்முல் ஹோடா (வலதிலிருந்து 4வது) மற்றும் RC சேலம் ஃபீனிக்ஸ் தலைவர் J கேசவன் (இடமிருந்து 3வது) நிகழ்ச்சி பங்கேற்பாளர்களுடன்.*

**(இடதில்)** *மாரத்தன் நிகழ்ச்சியின் இளம் பங்கேற்பாளர்கள்.*

**கீழே:** *செல்ஃபி எடுக்கும் இளம் பங்கேற்பாளர்கள் மற்றும் குடும்பத்தினர்.*



# புத்தாண்டுக்கான
# பசுமைத் தீர்மானங்கள்

ப்ரீதி மேஹரா

*புத்தாண்டில் உங்களை நன்றாக உணர வைக்க பூமிக்கு ஏற்ற தீர்மானங்கள் இங்கே உள்ளன.*

ஒரு இலக்கை அடைய ஒரு ஒரு அடியாக எடுத்து வைப்பதே சிறந்தது என்பார்கள். பூமியை சிறந்த இடமாக மாற்றுவது உங்கள் இலக்காக இருந்தால், 2023ஐ பசுமையான தீர்மானங்கள் மற்றும் அர்ப்பணிப்புகளுடன் தொடங்குவது சிறந்தது. உறுதிமொழிகள் செயல்படுத்துவதற்கே, செய்து மறப்பதற்கு அல்ல.

தீர்மானங்கள் தனிப்பட்டதாகவும் மற்றும் சமூகத்திற்காகவும் இருக்கலாம் - இரண்டுமே உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நல்லது. நீங்கள் தொடங்கும் இந்த சிறிய செயல்கள் சமூகத்திற்கும், நாட்டிற்கும், உலகிற்கும் நன்மை பயக்கும்.

உங்கள் தீர்மானங்கள் எளிமையாகவும் பயனுள்ளதாகவும் இருந்தால் நல்லது. நிலையான வாழ்க்கைக்கு உதவும் எளிதாக செய்யக்கூடிய பட்டியல் இங்கே உள்ளது.

நமது நகரங்கள் மற்றும் காடுகளில் குப்பைகளை தேக்கி, நமது புயல் வடிகால்களை அடைத்து, நமது ஆறுகள் மற்றும் கடல்களை மாசுபடுத்தும் பிளாஸ்டிக் பைகளை ஒருபோதும் பயன்படுத்த வேண்டாம் என்று தீர்மானியுங்கள். இது எளிதான காரியம் அல்ல. ஒவ்வொரு முறை ஷாப்பிங் செல்லும்போதும் துணி பையை எடுத்துச் செல்ல மறப்பது இயல்பே. நீங்கள் நினைவில் கொள்ள உதவும் வகையில், பல துணிப்பைககளை தைப்பதில் அல்லது முதலீடு செய்வது நல்லது. வாசல் கதவுக்கு அருகில் ஒன்று தொங்கவிடப்பட்டால், நீங்கள் வெளியே செல்லும்போது அதை எடுத்துச் செல்லலாம். இன்னொன்றை உங்கள் வாகனத்திலோ அல்லது அலுவலக அலமாரியிலோ வைக்கலாம்.

உங்கள் தனியார் வாகனத்தில் விலைமதிப்பற்ற எரிபொருளை வீணாக்குவதை விட முடிந்தவரை பொது போக்குவரத்தை பயன்படுத்த முடிவு செய்யுங்கள். உங்கள் சொந்த வாகனத்தில் செல்வது மிகவும் வசதியாக இருக்கும்போது இது கடினமாக தான் இருக்கும். ஆனால் இந்த தேர்வை செய்வதன் மூலம் நீங்கள் எரிபொருளை சேமிப்பது மட்டுமல்லாமல் காற்றின் தரத்தை மேம்படுத்தவும் பங்களிப்பீர்கள். மனிதர்கள் ஒவ்வொரு நாளும் சுமார் 14,000 லிட்டர் காற்றை சுவாசிக்கிறார்கள், அது மாசுபட்டால், அது அவர்களின் ஆரோக்கியத்தை மோசமாக பாதிக்கும் மற்றும் சுவாச நோய்களுக்கு வழிவகுக்கும். காற்றின் தரம் நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கிறது, ஏனெனில் இது அதிக மருத்துவ செலவுகள், நோய் காரணமாக உற்பத்தி இழப்பு மற்றும் அதிக குழந்தை இறப்பு ஆகியவற்றை விளைவிக்கிறது.

மோசமான காற்று காரணமாக நிலம் மற்றும் நீர்நிலைகளில் மாசுக்கள் குடியேறி சுற்றுச்சூழலை மோசமாக பாதிக்கும். வெப்பமயமாதல் அல்லது குளிரூட்டும் விளைவைக் கொண்டிருப்பதால், சில மாசுபடுத்திகள் காலநிலையின் உச்சநிலைக்கு காரணமாகின்றன.

விலை குறைந்த ஆனால் எந்த நேரத்திலும் தூக்கி எறியக்கூடிய வேகமான பேஷன் ஆடைகளை வாங்காதீர்கள். மதிப்பீடுகளின்படி, கைவிடப்பட்ட ஆடைகளில் 57 சதவீதம் குப்பைத் தொட்டிகளில் தேங்குகிறது. மேலும் இவை நிரம்பியவுடன் கழிவுகளாக எரிக்கப்படுகின்றன. செயற்கை ஆடைகள் மோசமான பாதிப்பை உருவாக்குகின்றன. கடல்களை மாசுபடுத்தும் மைக்ரோபிளாஸ்டிக் பொருட்களில் 35 சதவீதம் இந்த ஆடைகளில் இருந்து வருகிறது. மற்ற எல்லாத் தொழில்களும் பயன்படுத்தும் தண்ணீரில் பத்தில் ஒரு பங்கை



ஃபேஷன் துறை பயன்படுத்துகிறது. ஏனென்றால், துணிகளின் உற்பத்தி மற்றும் சாயம் பூச அதிக அளவு நீர் மற்றும் நச்சு இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு கிலோ பருத்தியை உற்பத்தி செய்ய 10,000 லிட்டர் தண்ணீர் தேவைப்படுவதாகவும், உலகில் உள்ள கழிவுநீரில் 20 சதவிகிதம் சாயமேற்றுவதே காரணம் என்றும் நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

ஒரு அறையை விட்டு வெளியே வரும்போது விளக்குகள், மின் விசிறிகள், ஏர் கண்டிஷனர்களை அணைக்கவும். ஒரு சலவை இயந்திரத்தைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், அதன் உகந்த பயன் பாட்டிற்காக முழு வீட்டின் ஆடை களையும் சேகரிக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வெப்பமூட்ட சோலார் விளக்குகள் நிறுவவும். நீங்கள் சோலார் குக்கரில் குறைந்தபட்சம் ஒரு உணவையாவது சமைப்பதற்கு மாறி, இரண்டு அல்லது மூன்று வேளைகளுக்கு ஒரே நேரத்தில் சமைத்து, விலைமதிப்பற்ற இயற்கை இருப்புகளைச் சேமித்து, உங்கள் உணவைத் திட்டமிட்டால் நன்றாக இருக்கும்.

உள்ளூர் மற்றும் இயற்கையான பொருட்களை வாங்கி சாப்பிட வேண்டும் என்று தீர்மானியுங்கள். உங்கள் உள்ளூர் விற்பனையாளர் காய்கறிகள் மற்றும் பழங்களை அருகிலுள்ள மூலத்திலிருந்து பெறுவார், அதனால் குறைந்த ஆற்றல் செலவாகும். தவிர, நீங்கள் ஒரு குறு தொழில்முனைவோரின் வாழ்வாதாரத்திற்கு பங்களிக்கிறீர்கள். இயற்கையான உணவு சுற்றுச்சூழல் குறைந்த மண் மாசுபாடு, மண் அரிப்பு மற்றும் ஆற்றல் ஆகிய வற்றிற்கு உட்படுத்தபடுவதை உறுதி செய்கிறது. நீங்கள் பூச்சிக் கொல்லி இல்லாத சுத்தமான உணவையும் சாப்பிடலாம்.

உங்கள் கழிவுகள் மற்றும் ஈரக் கழிவுகளை தரம் பிரித்து உரமாக்குவதைத் தீர்மானியுங்கள். நிலத்தில் கசிந்து நச்சு உமிழ்வை உண்டாக்கும் பிரிக்கப்படாத கழிவுகளால் நமது நிலப்பரப்புகள் நிரம்பாமல் உதவுவதில் இது ஒரு பெரிய படியாக இருக்கும். பதப்படுத்தப்படாத கழிவுகள் மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவர வாழ்க்கையை பாதித்து பல நோய்களுக்கு வழிவகுக்கிறது.

குறைவாகவும், தேவைப்படும் போது மட்டுமே பயணிக்க முடிவு செய்யுங்கள். பயணம் என்பது ஒரு பெரிய அளவிலான ஆற்றலைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது. பறப்பது குறிப்பாக சுற்றுச்சூழலுக்கு மோசமானது மற்றும் ஒரு பெரிய கார்பன் தடத்தை உண்டாக்குகிறது. கார்பன் டை ஆக்சைடு மற்றும் மாசுகளை வளிமண்டலத்தில் வெளியிடும் எரிபொருளை விமானங்கள் பயன்படுத்துவதால் இது புவி வெப்பமடைதல் மற்றும் மாசுபாட்டிற்கும் பங்களிக்கிறது.

சுற்றுப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் காலநிலைக்கு ஏற்ற தயாரிப்புகளுக்கு வாதிடும் நுகர்வோராக இருங்கள். பூமியை மாசுபடுத்தும், மற்றும் மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கு ஆரோக்கியமற்ற பொருட்களை நுகர்வோர் வாங்க மாட்டார்கள் என்பதை நிறுவனங்கள் அறிந்தால், அவை சிறந்த தயாரிப்புகளை வழங்குவதற்காக தங்களை மாற்றிக்கொள்ளும். அவர்களின் தயாரிப்பு சுற்றுச்சூழல் வட்டத்தில் இருக்கிறதா என்று நீங்கள் பார்க்கிறீர்கள் என்பதை அறிந்தால், அவர்கள் மிகவும் நெறிமுறையாக வடிவமைத்து விற்பனை செய்வார்கள்.

நீங்கள் பயன்படுத்தும் அனைத்தையும் மறுசுழற்சி செய்ய முடிவு செய்யுங்கள். உதாரணமாக, உங்கள் இயந்திரங்களை நிராகரிப் பதற்குப் பதிலாக அவற்றைச் சரி செய்து, உங்கள் ஆடைகளைத் தூக்கி எறிவதற்குப் பதிலாக சரிசெய்து, உங்கள் பழைய பொருட்களைப் புதிய உற்பத்தி செயலுக்கு பயன்படுத்தினால், நீங்கள் தண்ணீர், ஆற்றல் மற்றும் உழைத்து சம்பாதித்த பணத்தைச் சேமிப்பீர்கள்.

*எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.*







# ஜாம்ஷெட்பூரில் உள்ள மாணவர்களுக்கு பயனளிக்கும் புராஜெக்ட் ஸ்மார்ட் ஸ்கில்ஸ்

**ரோட்டரி செய்திக் குழு**



*திட்ட இயக்குனர் ப்ரீத்தி சைனி மற்றும் ஏக்தா அகர்வால் ஒரு மாணவியுடன்.*

பிஸ்துபூரில் உள்ள செயின்ட் மேரி ஹிந்தி மீடியம் பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு, RC ஜாம்ஷெட்பூர் மிட் டவுன், RID 3250, வகுப்பறைக் கல்வியில் வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்ளவும் அவர்களை எதிர்காலத்துக்குத் தயார்படுத்துவதற்கும், ஸ்மார்ட் திறன்களை கற்றுக்கொடுத்தனர்.

Rtn ப்ரீத்தி சைனி மற்றும் ஷிவா ராவ் ஆகியோர் தீபாவளி அன்று நடத்திய ஒரு சாதாரண உரையாடலின் போது வடிவமைக்கப்பட்ட, TEACH திட்டம் ஜனவரி 30, 2022 அன்று தொடங்கப்பட்டது. பள்ளிகள், அனுபவ கற்றலின் அடிப்படையில் வகுப்புகளை எவ்வாறு நடத்துவது என்பது பற்றிய நடைமுறை யோசனை ஆசிரியர்களுக்கு ஊடாடும் விரிவுரைகள், குழு நடவடிக்கைகள் மற்றும் நேரடி வகுப்புகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று ப்ரீத்தி கூறினார். இதுவரை பள்ளியில் 25 அமர்வுகள் நடைபெற்றுள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் ஐந்து ஆசிரியர்கள் மற்றும் 200 மாணவர்கள் பங்கேற்றனர்.

Rtn ஏக்தா அகர்வால் மற்றும் சுமேதா கௌதம் ஆகியோரின் ஆதரவுடன் அனைத்து வகுப்புகளையும் திட்ட இயக்குனர் ப்ரீத்தி நடத்தினார். 9 மற்றும் 10ம் வகுப்புகளைச் சேர்ந்த சுமார் 290 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு பெற்றோர்களையும் இத்திட்டம் ஈடுபடுத்துகிறது. பள்ளி முதல்வர் பிரேம் லதா இத்திட்டத்திற்கு ஒரு தூணாக இருந்து வருகிறார்.■

# அரசுப் பள்ளிக்கு புதிய வசதிகள்



*கோமதி கூடம் துவக்க விழாவில் DG N நந்தகுமார், சங்கத்தலைவர் ஷம்மி ஜேகப், தீபக் சங்கி, C S அனந்த் மற்றும் சங்கத்தினர்.*

சென்னைக்கு அருகில் பனையூர் கிராமத்தில் இருக்கும் குடுமியாண்டித்தோப்பு தொடக்கப் பள்ளிக்கு (KES) மேம்பட்ட கட்டுமான வசதிகளை வழங்குவதற்கு செப்டம்பர் 2019ல் RC சென்னை ECR, RID 3232, அதைத் தத்தெடுத்துக்கொண்டது. 2020ல் அதன் கழிப்பறைகள் புதுப்பிக்கப்பட்டன. சமீபத்தில் இந்தச் சங்கம் சமையலறையைப் புதுப்பித்து ரூ.11 லட்சம் மதிப்பில் 785 சதுர அடி உண்ணும் கூடத்தைக் கட்டியது. இந்தச் சங்கத்தின் பதிவு உறுப்பினர் பெயரில் 'கோமதி கூடம்' என்று இதற்குப் பெயரிடப்பட்டது. இதை MLA அரவிந்த்ரமேஷ், அவை உறுப்பினர் மேனகா சங்கர் முன்னிலையில் DG N நந்தகுமார் தொடங்கிவைத்தார். இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் தீபக் சங்கி, உறுப்பினர்கள் அஜித் நாயர், C S அனந்த் இந்தத் திட்டத்தை ஒருங்கிணைக்கிறார்கள்.■

# கோவையின் கிரிக்கெட் புயல்

**V முத்துகுமரன்**

அண்மையில் பெங்களூருவில் நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் அருணாச்சல பிரதேச அணிக்கு எதிராக தமிழ்நாடு அணியைச் சேர்ந்த 26 வயதான நாராயணன் ஜெகதீசன் சிறப்பாக விளையாடி சாதனை படைத்தார். விஜய் ஹஸாரே கிரிக்கெட் கோப்பைக்காக 50 ஓவர்கள் அடிப்படையில் இந்த போட்டி நடந்தது. விக்கெட் கீப்பர் மற்றும் பேட்ஸ்மேனான அவர், தனது சிறப்பான ஆட்டத்தின் மூலம் கிரிக்கெட் உலகின் கவனத்தை ஈர்த்தார். அவரது தந்தை ரோட்டேரியன் C J நாராயணன், ரோட்டரி மாவட்டம் 3201க்கு உட்பட்ட கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர். ப்ளூ ஜெர்ஸியைப் பெற தொடர்ந்து கவனம் செலுத்து என்பதுதான் தந்தை மகனுக்கு கொடுத்த அறிவுரை.

கிரிக்கெட் இன்னிங்ஸில் ஜெகதீசன் தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தி லிஸ்ட்-ஏ கிரிக்கெட் போட்டியில் 7 உலக சாதனைகளை முறியடித்துள்ளார். தனிநபர் ஸ்கோர் (277–141 பந்து களில்), தொடர்ச்சியாக 5 சதங்கள், 114 பந்துகளில் 200 ரன்கள் குவிப்பு, அதிவேகமாக ஆடி 250 ரன்கள் எடுத்தது, விக்கெட் நஷ்டமின்றி கூட்டாளியுடன் சேர்ந்து ஆடியது (416), தொடக்க ஆட்டக்காரராக அதிக நேரம் விளையாடியது, தமிழ்நாடு அணி மொத்த ரன்களாக அதிபட்சம் 502 குவிக்க உதவியது ஆகியவை இதில் அடங்கும். அடுத்த நாள் தேசிய பத்திரிகைகள், இந்த கோயம்புத்தூர் இளைஞனின் வெற்றியை பிரதானமாக குறிப்பிட்டிருந்தன. அவனது பெற்றோர்களான நாராயணன் மற்றும் கங்கா, எப்படியும் தங்கள் மகன் இந்திய அணியில் இடம்பெற்றுவிடுவான் என்ற மிகுந்த நம்பிக்கையில் உள்ளனர்.

கிரிக்கெட் விளையாட்டில் தனது மகனுக்கு அசாத்திய திறமை உள்ளதாக குறிப்பிடுகிறார் தந்தை நாராயணன். 1980 முதல் 8 ஆண்டுகள் மும்பையில் டாடா எலெக்ட்ரிக் நிறுவனத்துக்காக விளையாடிய அவர் இப்போது டாடா பவர் நிறுவனத்தில் பணிபுரிகிறார். இன்றைய கிரிக்கெட்டின் கடுமையை, குறிப்பாக டி-20 கிரிக்கெட் போட்டியில் உலகின் சிறந்த கிரிக்கெட் வீரரையும் விரக்தி அடையச் செய்யும் நிலையையும் அவர் நன்கு அறிவார்.

ஜெகதீசன், நான்கு வயதில் ஸ்டேன்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேனிலைப் பள்ளியில் படிக்கும் போதே கிரிக்கெட் விளையாடத் தொடங்கிவிட்டார். 9 வயதில் 13-வயதுக்கு உட்பட்டவர்களுக்கான போட்டியில் மாவட்ட அணி சார்பில் பங்கேற்றுள்ளார். 6 ஆண்டுகளுக்கு முன்பு பி.எஸ்.ஜி. கல்லூரியில் பி.காம். படித்த அவர், ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில் எம்.பி.ஏ. படிப்பை முடித்தார். படிக்கும்போதே ஆர்வத்தோடு கிரிக்கெட் விளையாடி வந்தார். 2016–17 ஆம் ஆண்டில், ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் மத்தியப் பிரதேச அணிக்கு எதிரான போட்டியில் முதன் முதலாக பங்கேற்றார். முதல் போட்டியிலேயே சதம் அடித்தார் என்று நினைவுகூர்ந்தார் தந்தை நாராயணன்.

தாய் கங்காவும், சகோதரி சாரதாவும், ஜெகதீசன் எப்போது இந்திய அணிக்காக விளையாடுவார் என்பதை எதிர்நோக்கி இருக்கிறார்கள். அதற்காக பிரார்த்தனை செய்கிறார்கள். கடவுள் விரும்பினால் என் மகன் உச்சத்தை எட்டுவான் என்கிறார் நாராயணன் புன்சிரிப்புடன். அவர் 2007ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார். சென்னை சூப்பர் கிங்ஸ், தனது மகனை ஏற்காதது பற்றி நாராயணன் கவலைப்படவில்லை. ஆனால், IPL போட்டிக்கான ஏலத்தில் தமது மகன் ஒரு நல்ல அணியில் இடம்பெறுவார் என்று நம்பிக்கையுடன் உள்ளார். கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ் மற்றும் கோயம்புத்தூர் மான்செஸ்டர் ஆகிய ரோட்டரி சங்கங்கள், ஜெகதீசனுக்கு இளம் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்துள்ளது. முன்னதாக RID 3201 சார்பில் நடைபெற்ற மாநாட்டில் அவருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.■

*Rtn C J நாராயணன் (நடுவில்) மற்றும் (இடமிருந்து) நாராயண் ஜகதீசன், மனைவி கங்கா, மகள் சாரதா மற்றும் அவர் கணவர் கீர்த்தி கிருஷ்ணன்.*



# ஆயுள் காக்கும் அருமருந்து தண்ணீர்

**பரத் — ஷலன் சவூர்**

இந்த கட்டுரையை எழுதுவதற்கு முன் நான் அரை டம்ளர் தண்ணீர் குடித்தேன். மூளை வறட்சியாக இருந்தால் சரிவர வேலை செய்யாது. நீர் சேர்ந்த மூளை சுறுசுறுப்பாக இருக்கும். தண்ணீர் ஒரு சாதாரண திரவம்தான் என்றாலும் உடலுக்கு ஆரோக்கியமானது மற்றும் உயிர்காக்கக்கூடியது. எங்கும் கிடைப்பதால் தண்ணீரை குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள்.

### சிறந்த காலை உணவு

புத்துணர்வுடன் இருக்க உடல் அதன் 70 சதவீத நீர் கலவையை பராமரிக்க வேண்டும். காலையில் சிறிது தண்ணீர் குடியுங்கள். பல்துலக்கியவுடன் இரண்டு டம்ளர் தண்ணீர் குடியுங்கள். அதன் பிறகு காபியோ அல்லது தேநீரோ குடியுங்கள். உலகில் சிறந்த காலை உணவு தண்ணீர்தான். பொதுவாக உண்ணாவிரதம் இருப்பவர்கள், சாப்பிடுவதற்கு முன் தண்ணீர் குடிக்குமாறு அறிவுறுத்தப்படுவார்கள்.

உணவு சாப்பிடும்போது அடிக்கடி தண்ணீர் குடியுங்கள் அல்லது தண்ணீர் கலந்த மோர் சாப்பிடுங்கள். அது உணவு உங்கள் நெஞ்சுக் குழாய் வழியாக கீழே இறங்க உதவும். சாப்பிடும் உணவு ஜீரணமாவதற்கு தண்ணீர் நல்ல கூட்டாளி. சிலர் சாப்பிட்டு முடித்த பிறகு சோர்வாக இருப்பது போல் உணர்வார்கள். ஏனெனில் உடல் ஜீரணிக்க அதிக ஆற்றலை பயன்படுத்துகிறது. எனவே சாப்பிடும்போது இரண்டு டம்ளர் தண்ணீர் குடித்தால் உணவு நன்கு ஜீரணமாவதுடன் சோர்வையும் நீக்கிவிடும்.

### ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு லிட்டர்

ஒரு நாளைக்கு ஒரு லிட்டர் தண்ணீர் குடித்தால், நன்றாக இருப்பதுபோல் நீங்கள் உணர்வீர்கள். இரண்டு லிட்டர் தண்ணீர் குடித்தால் மேலும் நன்றாக இருப்பதுபோல் உணர்வீர்கள். நிறைய தண்ணீர் குடித்தால் புத்துணர்ச்சியோடு இருப்பீர்கள். எனவே குடிக்கும் தண்ணீரின் அளவு குறைந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு முறை கழிவறைக்குச் சென்றுவிட்டு வந்த பிறகும் பாட்டிலிலிருந்து தண்ணீரை எடுத்துக் குடியுங்கள். உங்களுக்கு சிறிது வியர்த்தாலும் சிறிது தண்ணீர் குடியுங்கள்.

பிற்பகலில் தேநீர் குடிப்பதற்கு முன்பும், பின்பும் சிறிது தண்ணீர் குடியுங்கள். அது ஒரு நல்ல பழக்கம். அடிக்கடி தண்ணீர் குடிப்பதால் டாய்லெட்டுக்கு செல்லும் சிரமத்தைவிட அதனால் ஏற்படும் நன்மைகள் அதிகம்.

- மலச்சிக்கலை விரட்டுகிறது.
- செரிமானத்தை எளிதாக்குகிறது: உணவை தடுத்து நிறுத்தி அதிகப்படியான சோடியத்தை கரைக்கிறது. இதனால் இரத்த அழுத்தம் சீராகிறது.
- இது உணவில் உள்ள நார்ச்சத்தை மென்மையாக்குகிறது. உடல் குண்டாகாமல் தடுக்கிறது.
- சிறுநீரகம் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது. தாதுக்கள் மற்றும் உப்புக்களை நீர்த்துப்போகச் செய்வதால் அவை பின்னர் கற்களாக மாறாமல் தடுக்கிறது. தண்ணீர் அதிகம் குடிப்பதால் சிறுநீரகம் சரிவர வேலை செய்து இரத்த அழுத்தத்தை சமநிலைப்படுத்துகிறது. கழிவுகளை வடிகட்டி, உடலில் 70 சதவீத நீர் அளவை பராமரிக்கிறது.
- உங்கள் சருமத்தை பளபளப்பாக்கி சுருக்கங்கள் விழுவதை குறைக்கிறது.
- நீங்கள் எந்த பிரச்னையும் இல்லாமல் நடக்கவும், வேலை செய்யவும் சுறுசுறுப்பாக இருக்கவும் உதவுகிறது. நடைபயிற்சி அல்லது உடற்பயிற்சிக்கு முன்னால் இரண்டு டம்ளர் தண்ணீர் குடிக்க பரிந்துரைக்கப்படுகிறது.
- நாள் முழுவதும் தண்ணீர் குடிப்பதால் சோர்வு, மன உளைச்சல், எதிர்மறை எண்ணங்கள், கோபம் மற்றும் விரக்தி ஏற்படாமல் தடுக்கிறது.
- உங்கள் மனதை தெளிவுபடுத்து கிறது. போதுமான தண்ணீர்



குடிக்காவிட்டால் குழப்பம், தடுமாற்றம் ஏற்படும்.

- நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க உதவுகிறது. எப்படி? நோய் எதிர்ப்பு மண்டலத்திற்கு தினசரி நிணநீர் தேவை. அதை உற்பத்தி செய்ய நீர் முக்கியமானது.
- நச்சுகளை வெளியேற்றுகிறது. உங்கள் உடல் அதன் வேலையைச் செய்கிறது. நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல் ஆகியவை நச்சுக்களை வெளியேற்ற கடினமாக உழைக்கின்றன. அவற்றுக்கு தண்ணீர் தேவை. எனவே தேவையான தண்ணீரைக் கொடுங்கள். ஒருவர் கடும் நோயிலிருந்து மீண்டு வரும் போது அவருக்கு கடுமையான மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. அப்போது மருத்துவர், ஒரு நாளைக்கு குறைந்தது நான்கு லிட்டர் தண்ணீர் குடிக்குமாறு அறிவுறுத்துவார். அது ஏன்? நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல் தங்களது கழிவுகளை வெளியேற்றி உடலியக்கத்தை சீராக வைத் திருப்பதற்குத்தான்.
- மூளையின் செயல்திறனை அதிகரிக்கிறது. நீர்ச்சத்து உடலில் இரண்டு சதவீதம் குறைந் தாலே செயல்பாட்டின் வேகம், நினைவாற்றல் மற்றும் அறிவாற்றல் திறன் குறைந்து விடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- தலைவலி வராமல் தடுக்கிறது. மெடிக்கல் நியூஸ் டுடே இதை நீரிழப்பு தலைவலி என்று அழைக்கிறது. இது உடல் அத்தியாவசிய திரவங்களை இழக்கும்போது வருவதாகும். உடலின் மற்ற பகுதிகளுடன், மூளையும் நீரிழப்புக்குள்ளாகிறது. இதனால் அது சுருங்குகிறது. இந்த சுருக்கம் ஒருவலி மிகுந்த சுருக்கமாக மாறும்.
- இதயத்திற்கு நல்லது. இரத்தம் மற்றும் பிளாஸ்மாவின் பகுப்புத்தன்மையை தண்ணீர் ஒழுங்குபடுத்துகிறது. இரத்தத்தை மெல்லியதாக்கி மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்படும் அபாயத்தை குறைக்கிறது.



## அதிகமாக தண்ணீர் குடிப்பதை தவிர்க்கவும்

தண்ணீர் குடிக்காமல் இருப்பது எப்படி ஆபத்தானதோ அதேபோல அதிகமாக தண்ணீர் குடிப்பதும் ஆபத்தானது. ஏறக்குறைய அரை நூற்றாண்டுகளுக்கு முன்பு தற்காப்புக் கலையில் சிறந்த வீரராக விளங்கிய புரூஸ் லீ, 32 வயதில் மரணமடைந்ததற்கான காரணங்களில் இதுவும் ஒன்று என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதிக தண்ணீர் குடிப்பது உடலில் உள்ள சோடியம் போன்ற எலக்ட்ரோலைட் அளவின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி ரத்தத்திலிருந்து நீர்த்துப் போகச் செய்கிறது.

சோடியம் உடலில் உள்ள நீரின் அளவை சமநிலைப்படுத்துவ தோடு, தசைகளின் சுருக்கம் மற்றும் தளர்வுகள் மற்றும் நரம்புத் தூண்டுதல்களை கட்டுப்படுத்து வதால், இந்த பற்றாக்குறை உடலுக்கு தீங்கு விளைவிக்கும். மேலும் ஹைபோநெட்ரீமியா என்னும் நிலையை ஏற்படுத்தும். ஹைபோநெட்ரீமியா என்பது உடலில் உள்ள இரத்தத்தில் சோடியத்தின் அளவு குறைந்து இரத்தம் நீர்த்துப் போகக்கூடிய அபாயநிலையை ஏற்படுத்தும். இது ரத்த செல்களை வீக்க மடையச் செய்து உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தும். அதிக தண்ணீர் குடிப்பதால் குமட்டல், மயக்கம், தலைவலி, குழப்பம் மற்றும் தசை வீக்கம் ஏற்படும். சில சமயங்களில் மரணத்துக்கு வழிவகுத்துவிடும்.

எனவே எவ்வளவு அதிகமானது? ஒரு ஆரோக்கியமான சிறுநீரகம் ஒரு மணிநேரத்துக்கு சுமார் 27–34 அவுன்ஸ் அல்லது ஒரு நாளைக்கு 676–947 அவுன்சுகள் அதாவது 20 முதல் 28 லிட்டர் கழிவுகளை வெளியேற்றுகிறது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். சிறுநீரகங்கள் சரிவர செயல்படாதது, ஸ்டெராய்டு இல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகளை தொடர்ந்து எடுத்துக்கொள்ளுதல், கட்டு பாடில்லாத நீரிழிவு நோய் அல்லது சிறுநீர் பாதையில் அடைப்பு ஆகியவை காரணமாக கழிவுகளை வெளியேற்ற முடியாமல் உடல் தக்கவைக்கும். உடல் திடீரென சிறுநீர் கழிப்பதை நிறுத்தினால், நாம் மருத்துவரை சந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அர்த்தம்.

## அளவோடு குடிப்பது பாதுகாப்பானது

ஒவ்வொரு 20 கிலோ எடைக்கும் ஒரு லிட்டர் தண்ணீர் தேவை என்கின்றனர் மருத்துவர்கள். உங்களின் உடல் எடை 60 கிலோவாக இருந்தால் ஒரு நாளைக்கு மூன்று லிட்டர் தண்ணீர் தேவை. தேநீர், காபி, சோடா போன்ற குளிர்பானங்கள், பழரசங்கள், பழங்கள், காய்கறிகள், சூப், சாஸ் ஆகியவற்றையும் உங்கள் கணக்கீடுகளில் சேர்க்கலாம். உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள், குறைந்த உப்பு சேர்த்த உணவுகளை சாப்பிடும்போது அதிக தண்ணீர் குடிக்க வேண்டாம். உங்கள் மருத்துவரிடம் கலந்து ஆலோசித்து அவரிடம் எவ்வளவு தண்ணீர் குடிக்கலாம் என்று கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். உடற்பயிற்சி செய்பவர்கள் கையில் ‘எலக்ட்ரால்’ வைத்துக்கொண்டு வியர்க்கும்போது அதை சாப்பிடுங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

## RC **மனோரா பட்டுக்கோட்டை** — RID 2981



ஒரு மாதத்துக்கான ஊட்டச்சத்து மிக்க நலமான உணவுப் பொருட்களைக் கொண்ட பொதிகள் 40 TB நோயாளிகளுக்கு வழங்கப்பட்டன.

## RC **ஜல்காவ்ன் வெஸ்ட்** — RID 3030

ஜல்காவ்ன் சத்ரபதி ஷாஹு மகாராஜ் மருத்துவமனையில் 3 இயந்திரங்களைக் கொண்ட டயாலிசிஸ் மையத்தை (ரூ.28 லட்சம்) DG ஆனந்த் ஜூின் ஜூின்வாலா தொடங்கி வைத்தார். இதற்கான GG கூட்டாளர், RC டல்லஹஸ்ஸீ, RID 6940, USA.



## RC **மதுரை சங்கமம்** — RID 3000



சங்கத் தலைவர் வாஞ்சிநாதன் வழிகாட்டுதலில், பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஒன்றுக்கு ரூ.30,000 மதிப்புள்ள அறைக்கலன்கள் கொடையளிக்கப் பட்டன.

## RC **போர்பந்தர்** — RID 3060

இந்தச் சங்கமும் ஸ்ரீ ராம் நீச்சல் சங்கமும் நடத்திய கடலோர அரை மாரத்தான் ஓட்டத்தில் 2,200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றார்கள்.



## RC **குன்ட்லி** — RID 3012



ஷார்தா மருத்துவ மனை உதவியுடன் நங்கல் கிராமத்தில் நடைபெற்ற மாமோகிராஃபி முகாமில் 20 பெண்கள் பரிசோதிக்கப் பட்டார்கள்.

## RC **ஹோஷியார்பூர் மிட் டவுன்** — RID 3070

பஜன் கௌர் (69) அவர்களுடைய கருவிழிப் படலப் பார்வைக் குறைபாட்டை நீக்கும் அறுவைச் சிகிச்சை பார்வைப் பரிசுத் திட்டத்தின் கீழ் வெற்றிகரமாகச் செய்யப்பட்டது.



# செய்திகள்

## RC **கரார்** — RID 3080



மறைந்த மொஹிந்தர் கௌர் அவர்களுடைய கண்கள் சண்டிகரில் உள்ள PDGI மருத்துவமனைக்குக் கொடையளிக்கப் பட்டன. Rtn ஹர்ப்ரீத் சிங் ரேக்கி கண் தானத்தைப் பெரிய அளவில் முன்னிறுத்துகிறார்.

## RC **ஆக்ரா** — RID 3110



பைகுந்தி தேவி கன்யா மகாவித்யாலயா-வில் இணையக் குற்றம்பற்றி நடைபெற்ற பயிலகத்தில் ஆக்ரா SP விகாஸ் குமார் பேசினார். சங்கத் தலைவர் மிரிணாள் சர்மா பேச்சாளரைப் பெருமைப்படுத்தினார்.

## RC **ஹிசார்** — RID 3090




ஹிசார் திவ்யாங்க் புனரவஸ் கேந்த்ரா-வில் 2 கண் புரை பரிசோதனை இயந்திரங்கள் (ரூ.9 லட்சம்) நிறுவப்பட்டன. இச்சங்கம் தேவையுள்ள நோயாளிகளுக்கு இலவசக் கண் பரிசோதனை, கண்புரை அறுவைச் சிகிச்சைகளை ஓராண்டுக்கு வழங்கும்.

## RC **வாரணாசி ஈஸ்ட்** — RID 3120



இந்தச் சங்கம் அகில இந்திய மத்தியப் பிரதேஷ் வைஷ் சபா-வுடன் இணைந்து நடத்திய நல முகாமில் 700க்கும் மேற்பட்டோர் பரிசோதிக்கப் பட்டார்கள்.

## RC **சகேத்-மீரட்** — RID 3100



DGE அசோக்குப்தா, MP ராஜேந்திர அகர்வால் பள்ளிகளுக்கு இடையிலான கூடைப்பந்துப் போட்டியைத் தொடங்கி வைத்தார்கள்.

## RC **பன்வெல் சென்ட்ரல்** — RID 3131



5 ஆக்சிஜன் செறிவூட்டிகள், துணைப் பொருட்களை DG அனில் பர்மார் பன்வெல் நகராட்சி பொது சுகாதார மையங்களுக்கு கொடையளித்தார்.

## RC **தியோனர்** — RID 3141



முன்னாள் தலைவர் பத்மா கபூர், தன்னுடைய மறைந்த தந்தை மேஜர் தேசாய் நினைவாக, சிகாலெ விஜய் ராணுவப் பள்ளியில் 400 மாணவர்களுக்கு விளையாட்டுச் சீருடைகளைக் கொடையளித்தார்.

## RC **கோட்டா சிட்டி** — RID 3182



மாணவர்கள், ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பான குடிநீரை வழங்கும் ரூ.1.5 லட்சம் மதிப்புள்ள 10 நீர்த் தூய்மைப் படுத்திகள் கிராமப்புற அரசுப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.

## RC **நவி மும்பை ஜுவல்ஸ்** — RID 3142



நெருல்-இல் ஸ்பர்ஷா தொண்டு அறக் கட்டளையில் உள்ளவர் களுக்கான சிறுவர் கொண்டாட் டமும் மேடை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

## RC **தும்கூர்** — RID 3190



தும்கூரில் பாதுகாப்புத் தொழிலாளர்கள் 300 பேரைக் குளிர் இரவுகளில் இருந்து பாதுகாக்கக் கதகதப்பான போர்வைகள் வழங்கப்பட்டன.

## RC **கார்வார்** — RID 3170



கார்வாரில் உள்ள போக்குவரத்து வட்டங்களில், ரோட்டரி பதாகை, சின்னத்துடன் இரும்புக் காவல்துறைக் கூண்டுகள் நிறுவப்பட்டன.

## **ரோட்டரி ஈ-கிளப் மெட்ரோ டைனமிக்ஸ்** — RID 3201



டிசையர் சொசைட்டி என்ற ஆதரவற்றோர் மற்றும் HIV பாசிட்டிவ் குழந்தை களுக்கான இல்லத்தின் நவி மும்பையில் உள்ள வாஷி கிளைக்கு சங்கம் ஒவ்வொரு மாதமும் 300 லிட்டர் பால் வழங்குகிறது.

# செய்திகள்

### RC **உதகமண்டலம்** — RID 3203



25 பள்ளிகளைச் சேர்ந்த 350க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்ற திறன் தேடல் நிகழ்ச்சியில் DG இளங்குமரன், நீலகிரியின் கூடுதல் SP மோகன் நவாஸ் ஆகியோர் தலைமை விருந்தினர்களாகப் பங்கேற்றார்கள்.

### RC **சென்னை போர்ட் சிட்டி** — RID 3232



இந்தச் சங்கமும் RC தாம்பரம் சென்ட்ரலும் சேர்ந்து, தலைமை விருந்தினர் PDG ராஜா ஸ்ரீனிவாசன் முன்னிலையில் 50 மாற்றுத் திறனாளிகளுக்கு அரிசிப் பைகள், படுக்கை விரிப்புகளை வழங்கினார்கள்.

### RC **ஆலப்பி கிரேட்டர்** — RID 3211



இந்தியக் கடற்கரைப் பாதுகாவல் அமைப்பின் உதவியுடன் நடத்தப்பட்ட சிறப்பு முகாம் ஒன்றில், கால் நீக்கப்பட்ட 50 பேருக்கு ஊன்று கோல் மற்றும் நடை உதவிக் கருவிகள் கொடையளிக்கப் பட்டன.

### RC **பொகாரோ ஸ்டீல் சிட்டி** — RID 3250



முதன்மை மாவட்ட நீதிபதி ரஞ்சனா அஸ்தானா தொடங்கிவைத்த RYLAல் 100க்கும் மேற்பட்ட மாணவர் களுக்குத் தலைமைப் பண்புகள் கற்றுத்தரப் பட்டன.

### RC **தூத்துக்குடி டிரெயில்பிளேஜர்ஸ்** — RID 3212



அண்ணாமலை கல்விக் கல்லூரியில் நடைபெற்ற தொழில் முனைவோர் பயிற்சி நிகழ்ச்சியில் 30 பேர் பங்கேற்றனர், இவர்களுக்கு டிடர்ஜெண்ட்கள், சோப் செய்யவும் காளான் வளர்க்கவும் கற்றுத்தரப்பட்டது.

### RC **ஜக்தால்பூர்** — RID 3261



RC ஜாம்நகர் மற்றும் ஹெல்ப்பிங் ஹேண்ட் என்ற NGO உடன் இணைந்து, செயற்கைக் கை, கால் பொருத்தும் முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

**ஒருங்கிணைப்பு:** V **முத்துகுமரன்**

# கேம்பிரிட்ஜில் ஒரு காலத்தில்...

LBW

TCA ஸ்ரீனிவாச ராகவன்

நான்கு தசாப்தங்களுக்கு முன்பு, நான் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பத்திரிகை படிப்பிற்கான ஒரு பெல்லோஷிப்பை வென்றேன். மைக்கேல்மாஸ் டெர்ம் என்று அழைக்கப்படும் இது மூன்று மாத காலத்திற்கு மட்டும் தான். நான் படித்தது வுல்ஃப்சன் கல்லூரியில், அங்கே இரண்டு பாகிஸ்தானிய பொது பணியாளர்கள் இருந்தனர். அவர்கள் நமது ஐ.ஏ.எஸ்.க்கு இணையான பாகிஸ்தானின் நிர்வாக சேவை பிரிவை சேர்ந்தவர்கள். நானும் என் மனைவியும் செப்டம்பர் இறுதியில் அங்கு சென்றடைந்தோம், அக்டோபர் முதல் வாரத்திற்குள் அந்த இரண்டு பாகிஸ்தானியர்களுக்கும் எங்களுக்கும் நல்ல நட்பு ஏற்பட்டது.

தெற்காசிய உணவுக்காக இருவரும் ஏங்கி கிடந்தனர். எனவே எப்போதாவது அவர்கள் கொஞ்சம் சிக்கன் அல்லது மட்டனுடன் வந்து, என் மனைவியிடம் ஏதாவது “இந்திய உணவை” செய்யச் சொல்வார்கள் அவர்கள் ரொட்டி நான், சாலட் இலைகள், திராட்சைகள், ஆப்பிள்கள், பிளம்ஸ் மற்றும் பேர்ஸ் ஆகியவற்றையும் மற்றும் கொஞ்சம் மதுவையும் கொண்டு வருவார்கள்.

ஒருமுறை நான் அவர்களிடம் உணவுக்கு ஏன் இவ்வளவு செலவு செய்கிறீர்கள் என்று கேட்டேன் ‘ஒரு டோட் இன் எ ஹோல்’ சாப்பிடுவதை விட இது சிறந்தது என்று அவர்கள் கூறினார்கள். டோட் வார இறுதியில் உண்ணும் உணவாகவும், சாப்பிட மிக கடினமாக இருக்கும். இது கொழுப்பில் ஊறவைத்த மாவினால் செய்யப்பட்ட மாவு கலவை. இது என் வயிற்றுக்கு மிகவும் கனமாக இருந்தது, எனது 30 வயதில் கூட என்னால் அதை முழுதாக உண்ண முடியவில்லை. இருந்தாலும், இந்த மோசமான உணவு வழங்கப்படும் போதெல்லாம், பாகிஸ்தானியர்கள் வந்தார்கள். சிறிது காலத்தில் சில இந்தியர்களும் வரத் தொடங்கினர். அவர்கள் இனிப்புகள் மற்றும் பலவற்றைக் கொண்டு வந்தனர்.

ஆனால் நவம்பர் நடுப்பகுதியில், எங்களை விட்டுவிட்டு என் மனைவி இந்தியா திரும்பினார். இதனால் பாகிஸ்தானியர்கள் மிகவும் சோர்ந்து போனார்கள். ஆனால் நவம்பர் பிற்பகுதியில், அவர்களில் ஒருவர் ஒரு சிறந்த யோசனையுடன் வந்தார். அங்கு ஒரு பஞ்சாபி பெண்மணி சமோசாக்கள் மற்றும் பிற தெற்காசிய பேஸ்ட்கள், மசாலாக்கள், சிற்றுண்டிகள் மற்றும் இனிப்புகள் விற்கும் கடையை நடத்தி வந்தார்.

பாகிஸ்தானியர்களும் நானும் அவரிடம் சென்று, டோட் சாப்பிடும் நாட்களில் எங்களுக்கு கொஞ்சம் தால்-ரொட்டி தயார் செய்வீர்களா என்று கேட்டோம். பாகிஸ்தானில் தால்-ரொட்டி என்பது ஆட்டிறைச்சியுடன் செய்யப்பட்ட பருப்பு மற்றும் பக்க உணவாக சிக்கன் என்று சிறிதும் அறியாமல் அவர் மிகவும் அன்பாக ஒப்புக்கொண்டார். இருந்தாலும் எந்த குறையும் சொல்லாமல் எல்லாவற்றையும் சமைத்தார். நாங்கள் அவருக்கு நல்ல சன்மானத்தை கொடுத்தோம்.

இதனால் அந்த காலத்தின் எஞ்சிய நாட்கள் ஒரு மிதமான மனநிறைவுடன் கழிந்தது. சொல்லப் போனால், டோட்டை கண்டு பயப்படுவதிலிருந்து நாங்கள் அதை எதிர்நோக்க ஆரம்பித்தோம். ரொட்டி இல்லை என்றால் கேக் சாப்பிடுங்கள் என்று மக்களைக் கேட்ட மேரி ஆன்டோனெட்டிற்கு இது எங்களின் பதில் என்று நீங்கள் கருதலாம்.

பழைய பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் உறுப்பினர்களுக்கான, அதாவது ஆசிரியர்களுக்கு, வாராந்திர இரவு உணவுகள் வழங்கும் பாரம்பரியம் இருந்தது. இந்த விருந்துகளில் ஏராளமான செர்ரி மற்றும் போர்ட் ஒயின் வழங்கப்பட்டன. என் மனைவியும் நானும் இந்த நிகழ்வுகளில் நிரந்தர விருந்தாளிகளாக இருந்தோம். ஆனால் பாகிஸ்தானியர்கள் அதற்கு அழைக்கப்படவில்லை. அது அவர்களை மிகவும் எரிச்சலூட்டியது, ஏனெனில் அவர்கள் ஒரு உயரடுக்கு பாகிஸ்தானிய சேவை பணியாளர்கள் ஆனால் நான் ஒரு கீழடுக்கு பத்திரிகையாளர். அந்த வாராந்திர விருந்துகளில் இருந்து விலக்கப்பட்டதை அவர்களால் ஒற்றுக்கொள்ள முடியவில்லை.

இது ஏன் என்று அந்த பதான் என்னிடம் கேட்டபோது, நான் பஞ்சாபியில் கேலியாக அவரிடம் அந்த இரவு உணவுகள் ஷேரீஃப் (நாகரீகமான) மக்களுக்கானது என்று சொன்னேன். அடுத்த முறை என் மனைவியை சமைக்கச் கேட்கும் வரை அவர் என்னிடம் பேச வில்லை.

எல்லா நல்ல விஷயங்களும் முடிவுக்கு வர வேண்டும், பதவிக் காலம் முடிந்தவுடன் நான் இந்தியாவுக்குத் திரும்பினேன். பாகிஸ்தானியர்கள் இன்னும் இரண்டு முறை அங்கே பணியில் இருந்தார்கள். அதன் பின் அவர்கள் எப்படி இருந்தார்கள் என நான் பலமுறை யோசித்திருக்கிறேன். அந்த நல்ல மனிதர்கள் வார இறுதி டோட்டிடம் மாட்டிக்கொண்டனர், ஏனென்றால் அவர்களின் அதிர்ஷ்டம் சமோசா பெண்மணியும் தனது மகனுக்கு ஒரு நல்ல பெண்ணைத் தேட டிசம்பரில் அங்கிருந்து புறப்பட்டார்.■



*RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் மற்றும் RI இயக்குனர் A S வெங்கடேஷ் விசாகா விஸ்டா ரோட்டரி மாநாட்டில் மாவட்ட ஆளுநர்களுடன்.*

புகைப்படம்: ரஷீதா பகத்

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month


# ரோட்டரி நியூஸில் **விளம்பரம் செய்யுங்கள்**

1.45 லட்சம் சந்தாதாரர்கள், 6 லட்சம் வாசகர்களுடன் இணைவதால், பத்திரிகையில் உங்கள் விளம்பரம் மிகவும் செல்வாக்கு மிக்க தொழிலதிபர்கள், வணிகர்கள், நிதி வல்லுநர்கள், மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்களை சென்றடைகிறது.



| Tariff | |
|---|---|
| Back cover | Rs.1,00,000 |
| Inner Front Cover | Rs.60,000 |
| Inner Back Cover | Rs.60,000 |
| Inside Full Page | Rs.30,000 |
| Half Page | Rs.20,000 |
| **Specifications** | |
| 17 x 23 cm | Full page |
| 17 x 11 cm | Half page |
| **Advertisements in colour only** | |

**ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட்**

Phone: 044 42145666, **ஈமெயில்:** rotarynews@rosaonline.org